Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
32°c 28°c

பக்கம் 20 | சுடர்: 28 | கதிர்: 156 | வள்ளுவர் ஆண்டு: 2044 | சித்திரை 18, புதன் 01.05.2013

# அட்டூழியத்தில் இலங்கை அரசு

## தன்னை விமர்சிப்பவர்களை மோசமாகத் தண்டிக்கிறது என சர்வதேச மன்னிப்புச் சபை பகிரங்கமாகச் சாடல்

கொழும்பு,மே 1

"அச்சுறுத்தல்கள், இடையூறுகள், சிறைப்பிடிப்பு மற்றும் மூர்க்கத்தனமான தாக்குதல்கள் ஆகியவற்றின் மூலம் தன்னை விமர்சிப்ப வர்களை அடக்கி பெரும் அட்டூழியம் புரிகிறது இலங்கை அரசு" என்று சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது.

மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் இலங்கையில் மோசமான முறையில் நடத்தப்படுகின்றனர் என்றும் அது கூறியுள்ளது.

'இலங்கையின் உரிமை மீறல்கள்' என்ற தலைப்பில் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.

மாற்றுக் கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள் மீதான மூர்க்கத்தனமான பிரதிபலிப்பும் அரசியல் அதிகாரத்தை இறுக்கிப்பிடிப்பதும் இலங்கையில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய - பசுபிக் பிரதிப் பணிப்பாளர் பொல்லி ரஸ்கொட் தெரிவித்துள்ளார்.

"கடந்த ஆண்டுகளில் நாம் பார்த்திருக்கிறோம். விமர்சனத்துக்கான சந்தர்ப்பங்கள் குறைக்கப்பட்டே வந்துள்ளன. இலங்கையில் இப்போது ஒரு பயப்பீதி நிலைமையே நிலவுகின்றது. அரசுக்கெதிராகப் பேசுவதற்குத் துணிவு கொள்பவர்கள் பெரும்பாலும் அதற்காக மோசமாகத் துன்புறுத்தப்படுகின்றனர் " என்றார் அவர்.

2010 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 18 ஆவது அரசமைப்புத் திருத்தமானது அரசின் முக்கிய நிறுவனங்கள் அனைத்தையும் ஜனாதிபதியின் அதிகாரத்துக்குள் கொண்டு வந்தது. அதேவேளை மிகக் கொடுமையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பாதுகாப்பு படைகளுக்கு விரிவான அதிகாரங்களை வழங்குவதாக உள்ளது.

அதேவேளை அரசை விமர்சனம் செய்பவர்கள் மீதான அரசின் அதிகாரப்பூர்வமான போக்கும், அதிக பகைமை கொண்டதாக அதிகரித்து வருகின்றது. அரசின் ஊடகங்கள் "துரோகி" என்ற சொல்லை உபயோகிப்பதை வழமையாகக் கொண்டுள்ளன என்று மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. (த-ப)



கோப்புப்படம்

> அரசின் கொள்கைகளை குறைகூறும் ஊடகங்கள் குறிவைக்கப்படுகின்றன. அரசுக்கெதிராகப் பேசுவதற்குத் துணிவு கொள்பவர்கள் பெரும்பாலும் அதற்காக மோசமாகத் துன்புறுத்தப்படுகின்றனர்.

## இலங்கைக்கான இந்திய தூதுவராக வை.கே.சிங்ஹா



புதுடில்லி, மே.1

இலங்கைக்கான இந்திய தூதராக இந்திய வெளியுறவுத்துறையின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரான வை.கே.சிங்ஹா நியமிக்கப்படவுள்ளார் என அறியமுடிகின்றது.

மூத்த இராஜதந்திரி வை.கே. சிங்ஹா தற்போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சில் பாகிஸ்தான், ஈரான் விவகாரங்களைக் கையாளும் பிரிவில் தலைமை அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். தற்போது சீனாவுக்கான இரகசியத் தூதுவர் பதவியில் இருக்கும் ஜெய்சங்கர் இலங்கைக்கு மாற்றப்படலாமென முன்னதாக செய்திகள் வெளிவந்திருந்தன. ஆனால், இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளராக அவர் எதிர்காலத்தில் நியமிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருப்பதால் அது சாத்தியப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

கட்டுரை



பக். 08
தொழிலாளர் உரிமைகள் பெற்ற மே தினம்

உலகம்



பக். 04
அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார் சிரியப் பிரதமர்

விளையாட்டு



பக். 15
யாழ்.இந்து: கொக்குவில்இந்து இறுதியாட்டத்தில்

## கூட்டமைப்பே வெல்லும்

### அரச பங்காளி பிரபா கணேசன் ஆரூடம்

யாழ்ப்பாணம், மே 1

செப்ரெம்பரில் நடைபெறவுள்ள வடக்கு மாகாணத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வெற்றி பெறும். அதுவே எனது உள்ளார்ந்த விருப்பமும் என்று உதயனுக்குத் தெரிவித்தார் அரசில் அங்கம் வகிக்கும் பிரபா கணேசன். ஆயினும் தொடர்ந்தும் தமிழ்த் தேசியம் என்ற போதையை ஊட்டாமல் மக்களுக்கு சேவையாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும் என்றார் அவர். (ங)

## கோவணத்துடன் போராட்டம்



கொழும்பு,மே 01

மின் கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனுராதபுரம், ஏலயாபத்து பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் கோவணத்துடன் பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது.

அனுராதபுரம், ஏலயாபத்து பிரதேச சபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான அனுர பண்டார என்பவரே கோவணத்துடன் பந்தத்தை ஏந்தியவாறு மானியகமுவையிலிருந்து ஏலயாபத்து பிரதேச சபை வரை சென்றார்.

02

## வழக்குப் போட மக்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,மே 1

வலி.வடக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணி படையினரால் சுவீகரிக்கப்படுவதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை வலி. வடக்கு பிரதேச சபை முன்பாக திரண்டனர்.

காணி அபகரிப்பை எதிர்த்து 5 ஆயிரம் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இதற்காக மக்கள் தமது ஆவணங்களை ஒப்படைக்குமாறும் அவர் கோரியிருந்தார்.

## வடக்குத் தேர்தல் தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கையில்லை

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, மே 1

"வடமாகாண சபைத் தேர்தல் நீதியான முறையில் நடைபெறுமா என்பதையிட்டு வடபகுதி மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். ஆனாலும், வடபகுதியில் ஐ.தே.கவுக்கு சாதகமான தேர்தல் களநிலவரங்கள் காணப்படுகின்றன. அங்கு ஐ.தே.க. தனித்தே போட்டியிடவுள்ளது. - இவ்வாறு ஐ.தே.க. நேற்றுத் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரழிவு மதிப்பீட்டுப் படிவங்கள் முல்லைத்தீவில் காசுக்கு விற்பனை

## பாதிக்கப்பட்ட மக்கள் சிரமம்

*முல்லைத்தீவு,மே 1*
*போரில் இறந்த அல்லது காயமடைந்த நபர்கள் மற்றும் சொத்துக்கள் அழிவு தொடர்பான தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்குரிய விண்ணப்பப் படிவங்கள் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் பணத்துக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைகளின் அடிப்படையில் போர் அழிவு மதிப்பீட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன. இதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் கிராம சேவை யாளர்கள் ஊடாக மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இந்த விண்ணப்பப் படிவங்கள் ஒவ்வொரு கிராம சேவையாளருக்கும் ஒவ்வொன்று வீதமே பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்டுள்ளன. இதனால் கிராம சேவையாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட 10 பக்கங்கள் கொண்ட மேற்படி விண்ணப்ப படிவத்தைப் போட்டோ பிரதி செய்தே மக்களுக்கு வழங்குகின்றனர். இதற்காக வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்பட்டு வருகின்றன.

அரசால் இலவசமாக வழங்கப்பட வேண்டிய விண்ணப்ப படிவத்தைப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட பொது மக்கள் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது "நாம் குறித்த விண்ணப்பப் படிவத்தைப் பணத்துக்கு விற்பனை செய்யுமாறு யாருக்கும் சொல்லவில்லை- என்றார்.

ஆனாலும் மாவட்ட செயலகத்தால் விண்ணப்பப் படிவங்கள் போதியளவு வழங்கப் படாமையினாலேயே அதனை மக்களுக்குப் போட்டோ பிரதி செய்து விற்பனை செய்வதாக கிராம சேவையாளர்கள் தெரிவித்தனர். (த-5)

> விண்ணப்ப படிவத்தைப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட பொது மக்கள் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

# 'உதயன்' விநியோக ஊழியர் மன்னாரில் மிரட்டப்பட்டார்

மன்னார்,மே 01
மன்னாரில் விநியாகப் பணியில் ஈடுபட்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த 'உதயன்' விநியோக ஊழியரை, இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளில் இருவர் பின் தொடர்ந்து மிரட்டியுள்ளனர்.

வழமை போன்று 'உதயன்' பத்திரிகையை நேற்று செவ்வாய்க்கிழமையும் மன்னார் பஸ் நிலையத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு விநியோகித்து விட்டு விநியோகப் பணியாளர் மன்னார் பிரதான வீதியூடாகப் பயணத்தைத் தொடர்ந்துள்ளார்.

அப்போது அங்கு இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிளில் நின்ற இருவர், விநியோகப் பணியாளரை மறித்து அடையாள அட்டையை வாங்கிப் பார்த்துள்ளனர். அதன் பின்னர் விநியாகப் பணியாளர் மன்னார் பிரதான வீதியூடாகப் பயணத்தைத் தொடர்ந்தார்.

இதன்போது குறித்த நபர்கள் இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிளிலுல் பின்தொடர்ந்துள்ளனர். இதனையடுத்து விநியோகப் பணியாளர் தள்ளாடி இராணுவ முகாமில் தனது வாகனத்தை நிறுத்தி இராணுவத்தினருக்குச் சம்பவத்தைத் தெரியப்படுத்தியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த நபர்கள் இராணுவ முகாமில் விநியோகப் பணியாளர் நிற்பதை அவதானித்து விட்டு நேரே சென்றுள்ளனர்.

இதன் பின்னர் குறித்த விநியோகப் பணியாளர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். தள்ளாடி இராணுவ முகாமுக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் விநியோகப் பணியாளரைப் பாதுகாப்பாக அனுப்பிவைத்தனர். (த-5)

# கோவணத்துடன் போராட்டம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருடன் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.ஹரிசன் மற்றும் சந்திராணி பண்டார ஆகிய இருவரும் ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டனர்.

கோவணத்துடன் பந்தத்தை ஏந்தியவாறு பிரதேச சபையின் வாசலுக்கு அருகில் சென்றபோது, பிரதேச சபையின் கதவை சபைத் தலைவர் இழுத்து மூடிவிட்டார்.

சபைக்கு ஒவ்வாத ஆடையை அணிந்து வருகின்றமையால் சபைக்குள் பிரவேசிப்பதற்கு இடமளிக்க முடியாது என்றும் அவருக்கு அங்கு அறிவுறுத்தப்பட்டது. இதனால் சில நிமிடங்கள் அங்கு பதற்றம் நிலவியது. (த)

# இந்திய மீனவர்களின் ஊடுருவல் தொடர்கிறது

வலி.வடக்கு, மே 01
கடலில் மீன்கள் பெருகுவதற்கான காலமாக இருப்பதினால் 45 நாள்களுக்கு இந்திய மீனவர்களின் ட்றோலர்கள் யாழ் மாவட்டத்தை அண்டிய கடற்பகுதிகளில் தொழிலுக்கு வராது எனத் தெரிவிக்கப் பட்டாலும் தற்போது நாட்டுப்படகுகள் மற்றும் வத்தைகள் மூலம் எமது பகுதிக்குள் வந்து அவர்கள் தொழில் செய்கிறார்கள் என்று கூறும் யாழ். மீனவர்கள் அதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரியுள்ளனர்.

குறிப்பாக நெடுந்தீவு, எழுவைதீவு, காரைநகர், அனலைதீவு போன்ற பகுதிகளில் இந்திய மீனவரின் பலநூற்றுக்கணக்கான நாட்டுப்படகுகள் மற்றும் வத்தைகள் தொழிலுக்காக வருகின்றன எனவும் கடற்றொழிலாளர்கள் சமாசப் பிரதிநிதிகளினால் சுட்டிக்காட்டப்பட்டது.

பொன்னாலைக் கடற்படை முகாமில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை பிற்பகல் யாழ் மாவட்ட கடற்படை கட்டளை அதிகாரிகளுக்கும் கடற்றொழிலாளர்களின் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது. அதில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த வாரம் இந்திய கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் இலங்கைக் கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு கடலில் இடம் பெற்றுள்ளது.

இதனடிப்படையில் தற்போது ட்றோலரில் மீன்பிடிப்பது இந்தியக் கடற்படையினரால் தடை செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்து இடம் பெறும் சந்திப்புக்களின் போது இத்தகைய வத்தைகள், நாட்டு படகுகளில் வந்து எமது பகுதியில் தொழில் செய்யும் நடவடிக்கைகள் தடை செய்யப்பட வேண்டும் என யாழ்.மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். (த-86)

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# பிரதான வாசல் ஊடாகவும் நோயாளரைப் பார்க்க வசதி

யாழ்ப்பாணம்,மே.01
யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளரைப் பார்வையிடச் செல்வோர் இன்று புதன் கிழமை தொடக்கம் வைத்தியசாலையின் பிரதான வாயில் ஊடாகவும் செல்ல முடியும் என்று வைத்தியசாலைப்பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவனந்தராஜா தெரிவித்துள்ளார்.

நோயாளர் நலன் கருதி வைத்தியசாலையின் முன்பக்க உட்செல்லும் வெளிச் செல்லும் வாசல்களூடாகவும் வைத்தியசாலையின் பின்புறமாக விக்ரோறியா வீதியிலுள்ள வாசலினூடாகவும் நோயாளர்களைப் பார்வையிட முடியும்.

பஸ்களில் வரும் பார்வையாளர்கள் பஸ்தரிப்பிடத்தில் இறங்கி வைத்தியசாலையின் முன்பக்க வாயிலினூடாகவும், ஏனைய வாகனங்கள், சைக்கிளில் வருபவர்கள் விக்ரோறியா வீதியுள்ள வாசலினூடகவும் வைத்தியசாலைக்குச் செல்வதை கடைப்பிடிக்குமாறும் பணிப்பாளர் கூறியுள்ளார். (த-5-ரி)

# போராட்டம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 1
தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கு எதிரான வாழ்வுரிமைப் போராட்டத்துக்காக அணி திரள்வது தொடர்பான ஒன்று கூடலொன்று நாளை வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காணி சுவீகரிப்பை எதிர்த்து எதிர் காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால் அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கேட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச, நகர சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் மீளக் குடியமர்வதற்கான அமைப்புக்களின் தவைர்களும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16)

# ஊடகவியலாளர்கள் அரசினால் குறிவைப்பு

## மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

நியூயோர்க், மே.01
அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் குறிவைக்கப் படுகின்றனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது.

அது தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2013 ஜனவரியில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணை அரசமைப்புக்கு மாறான செயற்பாடு என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த நிலையிலும் அவர் மீது குற்றப்பத்திரிகை நிறைவேற்றப்பட்டமையடுத்து நீதித் துறையில் பதற்றநிலை அதிக சிக்கலாயிற்று. இலங்கையில் சுதந்திரமாகச் செயல்படும், அரசின் கொள்கைகளைக் குறை கூறும், போர் நடைபெற்ற காலத்தில் அரசின் நடத்தை குறித்து விமர்சிக்கும் ஊடகங்களை அதிகாரிகள் குறி வைக்கின்றார்கள். அரசுக்கு எதிரான அறிக்கைகளை வெளியிடும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள், தாக்குதல்களை எதிர் கொள்கிறார்கள். 2006 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது 15 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அநேகர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். அண்மைக் காலத்தில் 2013 பெப்ரவரியில் 'சண்டே லீடர்' பத்திரிகையாளர் பராஸ் சவுகத் இனந்தெரியாதவர்களால் கழுத்தில் சுடப்பட்டு மோசமாகக் காயமடைந்தார்.

'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை போன்ற உயர் மட்ட வழக்குகள் பலவும் இன்னமும் ஆரம்பிக்கப்படாமல் இருந்து வருகின்றன.

எனவே பொதுநலவாயத் தலைவர்களின் உச்சி மாநாடு நவம்பரில் நடைபெறுவதற்கு முன்பதாக இலங்கை அரசு மனித உரிமை பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் படி பொதுநலவாய நாடுகள் வலியுறுத்த வேண்டும் .

இப்பொழுது தேவைப்படுவது சர்வதேசத்தினால் முன்னெடுக்கப்படக்கூடிய சுதந்திரமான பாகுபாடு அற்ற விசாரணை ஒன்றே- என்றுள்ளது. (த-ப)

# வடக்குத் தேர்தல் தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கையில்லை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜகிரியவிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கப் பணிமனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வடபகுதிக்குப் பயணம் மேற்கொண்டமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே மேற்படி தகவலைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-
வடபகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியினர் நடத்தும் கூட்டங்களுக்கோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்தும் பொதுக் கூட்டங்களுக்கோ அங்குள்ளவர்களைச் செல்லவிடாமல் இராணுவத்தினர் தடுக்கின்றனர் என்றும், அதையும் மீறிச் சென்றால் சென்றவர்களின் வாகன இலக்கங்களையும் அந்நபர்களையும் பதிவுசெய்து கொள்கின்றனர் என்றும் அச்சம் வெளியிடுகின்றனர்.

அரசின் கடும்போக்குச் செயற்பாடுகளால் வடமாகாண சபைத் தேர்தல் நீதியானதும் நியாயமானதுமாக நடைபெறுமா என்பது கேள்விக் குறியே - என்றார். (த)

# வழக்குப் போட மக்கள் ஆர்வம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து மக்கள் ஆயிரக் கணக்கில் தமது ஆவணங்களுடன் வலி. வடக்கு பிரதேச சபை முன்பாகத் திரண்டனர். இதில் சுமார் 300 பேர் வரையில் நேற்றுப் பதிவு செய்யப் பட்டதுடன் எஞ்சியோர் இன்று புதன்கிழமை பதிவு செய்யப்படவுள்ளனர். இடம்பெயர்ந்து, புத்தூர்த் துறையில் வசிக்கும் வலி. வடக்கு மக்களுக்கான பதிவுகள், மயிலிட்டி மீனவர் சங்கத்தில் நாளை வியாழக் கிழமை மேற்கொள்ளப்படவுள்ளன. (த-5)

# வடமராட்சி கிழக்கு கடலில் முறுகல்

வடமராட்சி,மே 1
வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடல் பகுதியில் கடல் அட்டை பிடிக்க வந்த தென்னிலங்கை மீனவர்களுக்கு அப்பகுதி கடற்றொழிலாளர்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடல் அட்டை பிடிக்கவென தென்னிலங்கையிலிருந்து வந்தவர்கள் கட்டைக்காடுப் பகுதியில் வாடி அமைத்திருந்து சட்டவிரோதமான நடவடிக்கையில் ஈடுபடுவதால் தம்மால் தொழில் செய்ய முடியவில்லையென அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்தப் பகுதி மீனவர்களுக்கும் தென்னிலங்கை மீனவர்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது.

விடயத்தை அறிந்து அந்தப் பகுதிக்கு வந்த படையினர் கடல் அட்டை பிடிப்பதை தடுப்பதாக வாக்குறுதி அளித்ததையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் கலைந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# புதிய சாதனைக்கு அஞ்சல் ஓட்டம்: தடுக்கும் சக்தி யாருக்கு உளதோ...?

ஒரு குறிப்பிட்ட இனத்தின் மீது அடக்குமுறை தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்டால், அந்தக் குழுமம், குறிப்பிட்ட இனம் வீறு கொண்டு எழும். இது ஓர் அறிவியல் யதார்த்தம். அனைத்துலக மட்டத்தில் இன்று கொண்டாடப்படும் மே [முதல்] நாள் அதற்கான குறியீடுகளில் ஒன்று.

தொழிலாளர்களின் –உழைக்கும் வர்க்கத்தின் –எட்டு மணி நேர வேலைக் கோரிக்கை வென்றெடுக்கப்பட்டு 127 ஆண்டுகள் ஆகிவிட்டன. மனித வரலாற்றில் அது பெரும் திருப்பு முனையை உண்டாக்கியதை சரித்திர சாதனை என்று குறித்துக் கொள்ளலாம்.

அதனைக் கருத்தில் கொள்ளாமல் தொழிலாளர்களின் உரிமைகளைப் புறம் ஒதுக்கும் போக்கு, அல்லது அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கான நலன்களில் போதிய கவனம் செலுத்தாமல் புறந்தள்ளுவது தொடரவே செய்கிறது. இலங்கையும், அதன் அரசும் அவற்றில் ஒன்று. மே நாள் தொழிலாளர்களின் சிறப்புக்குரிய தினமாக கொள்ளப்பட்டாலும் ஏனைய பல நாடுகளில் அவர்கள் அனுபவிக்கும் நலன்கள் இன்னமும் ஏறெடுத்தும் பார்க்கப்படவில்லை என்ற நிலை நீண்டு செல்கிறது.

அடக்கு முறைகள், ஒடுக்கு முறைகள் தொடரவே செய்கின்றன. கடந்த வருடம் நடைபெற்ற தமது மே தினப் பேரணியை அரசு குழப்புவதற்கு முயன்றதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டி இருந்தது.

கடந்த மே நாள் கொண்டாட்டத்தின் பின்னர் மிகப் பல தடவைகள்– அடிக்கடி–அத்தியாவசிய உணவுப் பொருள்களினதும், பிரதான பாவனைப் பொருள்களினதும், விலைகள் உயர்த்தப்பட்டன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக , கூடுதலாக தேசிய நல்லுறவைச் சீண்டிச் சிதைப்பதில் ஆட்சியில் உள்ள அரசு நெடிந்து நிற்கிறது.

கடந்த வருடத்தில் மே தின எதிர்க்கட்சிகளின் கூட்டு இயக்கம் நிறைவேற்றிய தீர்மானங்களின் மீதான மேலோட்டப் பார்வையை பின்வருமாறு வகுக்கலாம்.

*இனங்களுக்கு இடையே நல்லுறவை உருவாக்க வேண்டும். அதற்கு உதவக்கூடிய அரசியல் தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்.

*போரினால் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் உரிய வசதிகளுடன் குடியமர்த்தல்.

*சராசரி அடிமட்ட மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*தோட்டத்துறை சார்ந்த மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கு துரித வேலைத்திட்டம்.மேற்கண்டவற்றில், ஆண்டு ஒன்று கழிந்தும் ஒரு கோரிக்கையையேனும் நிறைவேற்றுவது குறித்து அரசு ஏறெடுத்தும் பார்த்ததில்லை. எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் தானே என்ற வன்மப் போக்கில் குப்பைக் கூடைக்குள் வீசியிருக்கலாம்.

எதிர்க்கட்சிகளுக்குச் சவால் விடும் பாணியில் கோதுமை மா, எரிபொருள்கள் மற்றும் இறக்குமதிப் பொருள்களின் விலைகளைத் திடீர் திடீரென ஏற்றி, ஆகப் பிந்தி மக்களின் அத்தியாவசிய சேவைப் பொருள்களின் பட்டியலில் மேலிடம் பிடித்துள்ள மின்சாரத்தின் கட்டணத்தையும் வானுயர உயர்த்திவிட்டது.

அவற்றோடு, அரசின் துடியாட்டம் நின்றதாக இல்லை. தேசிய சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான அடக்கு முறைகளையும் ஒடுக்கு முறைகளையும் பல்வேறு வடிவங்களில் கட்டவிழ்த்து விட்டு தாண்டவம் ஆடத் தொடங்கி உள்ளது அரசு.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், அவர்களின் பூர்வீக நிலங்களை பாதுகாப்புத் துறையினரின் தேவைக்கென கபளீகரம் செய்து அரசுடைமை ஆக்கும் நயவஞ்சகத் திட்டம் தடல்புடலாக அரங்கேறி வருகிறது.

அதற்குச் சமாந்தரமாக பெரும்பான்மை இன மக்களை, தனது அனுசரணையுடன் தமிழர் பிரதேசங்களில் குடியேற்றும் அதர்மம், அட்டூழியம் வன்னியிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற நிலையில் வேகவேகமாக ஒப்பேற்றப்படுகிறது.

அடுத்த பக்கத்தில் சமாந்தரமாக முஸ்லிம் மக்களின் மத வணக்க ஸ்தலங்கள் மீது அடிக்கடி தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அவர்களின் வியாபார நிலையங்கள் துவம்சம் செய்யப்படுகின்றன.

சமாதான சக வாழ்வு என்றால் கிலோ என்ன விலை, என்று அதிகார வட்டங்கள் கேட்கும் அளவுக்கு நாட்டின் இன நல்லுறவு சிதைக்கப்படுகிறது.

இத்தகைய சூழமைவில், இந்த நாட்டில் இன சௌசன்னியமும், அதனூடு ஏனைய பிரதான வளர்ச்சிகளும் கருக்கொள்ளும் என்று நம்புவதற்கு ஒரு துளி வாய்ப்பும் இல்லை என்பது மிகத் துலக்கமாகத் தெரிகிறது.

நாட்டின் பெரும்பான்மை இனத்தினர் தமது மேலாண்மை கொண்டு, ஏனைய மக்களை உரிமைகளற்ற மனிதக் கூட்டங்களாக மாற்றிவிட வேண்டும் என்ற புதிய "சாதனை"க்கு அஞ்சல் ஓட்டம் நடத்துகிறார்கள். அதனைத் தடுக்கும் சக்தி யாருக்கு உண்டு?



# பாலைதீவு, இரணைதீவு பகுதிகளில் தங்கியிருந்து மீன் பிடிக்க அனுமதி



“ அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் தங்குமிடங்களை அமைக்குமாறும் மீனவர்களுக்குரிய வசதிகளை கடற்படையினர் மேற்கொள்ள அதுவே வசதியாக அமையுமெனவும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம்,மே1

35 வருட இடைவெளியின் பின்னர் பாலைதீவு, இரணைதீவு கடற்பரப்பில் தங்கி நின்று மீன் பிடிப்பதற்கான அனுமதியைக் கடற்படையினர் வழங்கியுள்ளனர்.

பொன்னாலைக் கடற்படை முகாமில் யாழ்.மாவட்டக் கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகளுக்கும் கடற்படை அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது பாலைதீவு, இரணைதீவு, கற்கடதீவு கடற்பகுதிகளில் தங்கிநின்று மீன் பிடிப்பதற்கான அனுமதியை வழங்குமாறு மீனவர்கள் கோரினர். இது தொடர்பில் மீனவச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசித்த பின்னர் கற் கடதீவு கடற்பகுதி தவிர்ந்த ஏனைய இரு கடற்பகுதிகளிலும் மீன் பிடிப்பதற்கான அனுமதியை வழங்குவதாகவும்,

கற்கடதீவு சிறிய நிலப்பரப்பை கொண்ட தீவு என்பதால் அதில் தங்கி நின்று மீன்பிடிக்க அனுமதிக்க முடியாதெனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

மேற்படி அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் தங்குமிடங்களை அமைக்குமாறும் மீனவர்களுக்குரிய வசதிகளை கடற்படையினர் மேற்கொள்ள அதுவே வசதியாக அமையுமெனவும் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் வடமாகாண கடற்படைகளின் கட்டளை அதிகாரி ரியல் அட்மிரல் டி.எஸ்.உட வத்தர, உதவிக் கட்டளை அதிகாரி கொமாண்டோர் விமல துர்க்கா, கப்டன் சுபேரட்ன உட்பட வட மாகாண கடற்படை முகாம்களின் கட்டளை அதிகாரி களும் பங்கு பற்றியிருந்தனர். (த-16-86)

# புதிய இராணுவ முகாமினால் காரைநகர் மீனவர்கள் சிரமம்

வலி.வடக்கு, மே1

காரைநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமினால் கடற்றொழிலாளர்கள் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்ப டுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு தமது றொழிலை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க மேற்கொள்ள வேண்டும் என காரைநகர் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத் துள்ளார்கள்.

கடந்த பல ஆண்டுகளாக பரம்பரை பரம்பரையாகச் சாம்பலோடை என்னும் கடற்பகுதியில் களங்கண்டித் தொழிலை காரைநகர் கடற்றொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

கடந்த வாரம் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமினால் தற்போது இந்தப் பகுதியில் களங்கண்டித் தொழிலை மேற்கொள்ள முடியாது தடையேற்பட்டுள்ளது. எனவே உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மாதகல் கடற்பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் கடற்படைகளின் கட்டளை அதிகாரி தாம் உரிய இராணுவத்தரப்புடன் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட பகுதியில் தொழில் செய்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்துள்ளார். (த-86)

# இரத்ததானம்



வலி வடக்கு மே1

ஏழாலை இந்து இளைஞர் சபையினால் இன்று தொழிலாளர் தினத்தன்று இரத்ததானம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்த நிகழ்வு ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமுக நிலையத்தில் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (த -86)

# தென்னிலங்கையில் இருந்து யாழ்.வந்து கடலட்டை பிடிப்போரால் பெரும் பாதிப்பு

## தடை செய்யுமாறு யாழ்.மீனவர்கள் கோரிக்கை



“ சிலிண்டர்கள் உபயோகித்து கடலட்டை பிடிப்பவர்களினால் வட மாகாணக் கடற்றொழிலாளர்கள் கடுமையாக பாதிப்படைகிறார்கள். இதனை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

வலி வடக்கு மே1

தென்னில்கையில் இருந்து வந்து சிலிண்டர்கள் உபயோகித்து கடலட்டை பிடிப்பவர்களினால் வட மாகாணக் கடற்றொழிலாளர்கள் கடுமையாக பாதிப்படைவதாகவும் இதனை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் வட மாகாண கடற்படைகளின் கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மன்னர் கடல் பகுதிகளில் இந்த நடவடிக்கை அதிகமாக மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் கடலட்டையின் பெருக்கம் பெருமளவில் பாதிப்படைந்து வருவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொன்னாலை கடற்படை முகாமில்நேற்று முன்தினம் பிற்பகல் யாழ். மாவட்ட கடற்படை கட்டளை அதிகாரிகளுக்கும் கடற்றொழிலார்களின் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றது.

அதன்போது மேற் கூறப்பட்ட கோரிக்கையைக் கடற் றொழிலாளர்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் முன்வைத்தார்கள்.

இந்தக்கோரிக்கை குறித்து கடற்படையினர் கருத்துத் தெரிவிக்கையில் கடலட்டை பிடிப்பதை தடை செய்வதற்கான அதிகாரம் தமக்கு கிடையாது. அதனை உங்கள் பகுதியில் உள்ள மீன்பிடித் திணைக்கள அலுவலர்கள் மூலம் கடற்றொழில் அமைச்சுடன் தொடர்பு கொண்டு செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிட்டன் பிரஜைகளுக்கு டுபாயில் சிறை

டுபாய்சிற்றி, மே.1
போதைப் பொருள் கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதையடுத்து, பிரிட்டனைச் சேர்ந்த மூவருக்கு டுபாயில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
அவர்களுக்கு தலா நான்கு வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
2012 ஆம் ஆண்டு இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். எனினும் தங்கள் மீதான குற்றங்களை முழுமையாக நிராகரிப்பதாக குறித்த பிரிட்டன் பிரஜைகள் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை அவர்கள் சிறைச்சாலைகளில் துன்புறுத்தப்பட்டதாக வெளியான தகவல்கள் தொடர்பில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமரன் கவலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (வ)

# குண்டு வெடிப்பு

## அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார் சிரியப் பிரதமர்



டமாஸ்கஸ், மே.1
சிரியாவில் பிரதமர் வேல் அல் ஹலாக்கி பயணித்த கார் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் நூலிழையில் உயிர்தப்பினார் பிரதமர்.
இந்தத் தாக்குதலில் பிரதமரின் பாதுகாவலர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
டமாஸ்கஸ் நகரில் கேந்திரப் பகுதியில் பிரதமரின் வாகனத் தொடரணியை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியபோதும் அதுகுறித்து உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.
குறித்த தாக்குதல் தற்கொலைத் தாக்குதலா அல்லது மறைத்து வைக்கப்பட்ட குண்டு வெடிக்க வைக்கப்பட்டதா என்பது குறித்து இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர்.
எனினும் தலைநகர் டமாஸ்கஸில் முக்கிய பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சிரியத் தலைவர்களின் பாதுகாப்புக் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளது என்று சர்வதேச ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (வ)

## கிறீஸ் கப்பல் விபத்து

### இருவர் சாவு: 10 பேர் மாயம்

ஏதென்ஸ், மே.1
கிரீஸ் அருகே இரு சரக்கு கப்பல்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 2 ஊழியர்கள் உயிரிழந்ததுடன் 10 பேரைக் காணவில்லை. 7 பேர் மீட்கப்பட்டனர்.
கிரீஸ் நாட்டின் பிலோ போனிசி தீபகறபத்துக்கு தென் மேற்கே 125 கி.மீ. தூரத்தில் ஜெர்மனி நிறுவனத்துக்குச் சொந்தமான கான்செளத் என்ற கப்பலும், கூக்ஸ் தீவுகளைச் சேர்ந்த பிரிரீஸ் என்ற கப்பலும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.
இந்த விபத்தில் உக்ரைனுக்கு உரம் ஏற்றிச் சென்ற 13 ஆயிரம் டொன் எடை கொண்ட பிரிரீஸ் கப்பல் சில நிமிடங்களில் கடலில் மூழ்கியது. கப்பலில் இருந்த 17 சிரியா நாட்டு ஊழியர்களில் 7 பேர் மட்டும் தப்பினர். அவர்கள் பின்னர் மீட்கப்பட்டனர். இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டன. 10 பேரின் நிலைமை தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கப்பெறவில்லை. (வ)

## கானா குழந்தைகளுக்கு பலியிடலிலிருந்து விடுதலை

கானா,மே.1
ஆபிரிக்காவின் கானா நாட்டு வட பகுதியில், உடல் ஊனத்துடன் பிறக்கும் குழந்தைகளை பலியிடும் பழக்கம் ஒழிக்கப்படுவதாக, அந்தப் பகுதியின் உள்ளூர் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.
இவ்வாறு உடல் ஊனத்துடன் பிறக்கும் குழந்தைகள் தீய ஆவிகளால் பீடிக்கப்பட்டவை என்று கூறப்பட்டு, பின்னர் அவை கொல்லப்படும். இந்த நடைமுறை தடை செய்யப்படுவதாக, மேல் கிழக்குப் பிராந்தியத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் அறிவிக்கப்பட்டது.
இதுபோன்ற குழந்தை களை விஷம் கொடுத்துக் கொல்லும் வேலையைச் செய்து வந்த வயது மூத் தவர்களுக்கு புதிய பணிகள் கொடுக்கப்பட்டுள்ளன.
அவர்கள் இனி ஊனமுற்ற குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்தும் வேலையைச் செய்வார்கள் என்று உள்ளூர் தலைவ்ர்கள் மேலும் தெரிவித்தனர்.
இதேபோல் ஊனமுற்ற குழந்தைகளைக் கொல்லும் பழக்கம் தெற்கு செனெகலின் சில பகுதிகளில் நடைமுறையில் உள்ளது. (வ)

## எலும்புகளை திருப்பியனுப்பிய ஜேர்மன்

பெர்லின், மே.1
ஜேர்மனியில் கிடைக்கப்பெற்ற ஆஸ்திரேலியப் பழங்குடியினரின் மண்டையோடுகளையும், மற்றும் எலும்புகளையும் பெர் லினிலுள்ள பல்கலைக்கழக மருத்துவமனை மீண்டும் அந்தநாட்டுகே திருப்பியனுப்பி விட்டது.
இது குறித்து பல் கலைக்கழக மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில்,
இந்த எலும்புகளுக்குரி யவர்கள் 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஆனால் அவர்கள் எதற்காக இங்கு வந்தார்கள், எப்படி இறந்தார்கள் என்பது தெரியவில்லை.
அதனால் இந்த எலும் புகள் பழங்குடியினரின் பாரம் பரிய முறைப்படி அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக ஆஸ்திரேலியாவுக்குத் திருப்பியனுப்பப்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ளது. (வ)

# ஈராக்கில் கார்க் குண்டு வெடிப்புகள்

## 26 பேர் சாவு; பலர் படுகாயம்

பாக்தாக், மே.1
தெற்கு ஈராக்கில் நிகழ்ந்த வெவ்வேறு கார் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 26 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர்.
ஷியா பிரிவு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் அமரா நகரில் கட்டுமானத் தொழிலாளர்களின் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு அருகிலும், சந்தை தொகுதி ஒன்றிலும் இரண்டு கார் குண்டுகள் வெடித்தன. அதில் 13



அப்பாவிகள் கொல்லப்பட்டனர். 42 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகி றது.
தெற்குப்பகுதி நகரான திவானியாவில் ஒரு நட்சத்திர உணவகம் அருகில் நிகழ்ந்த கார் குண்டு வெடிப்பில் 8 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர்.
இந்த குண்டு வெடிப்பால் அங்கு நிறுத்தப் பட்டிருந்த 3 கார்கள் தீயில் கருகிச் சேதமடைந்தன. மற்றும் இரு குண்டு வெடிப்புகளில் 5 பேர் உயிரிழந்தனர்.
இந்தத் தாக்குதல்களுக்கு எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை. (ற)

## போட்ஸ்வானா ஜனாதிபதியை தாக்கியது சிறுத்தை

இயன்காமா, மே.1
போட்ஸ்வானா குடியரசின் ஜனாதிபதி இயான்காமா சிறுத்தை தாக்கியதில் காயமடைந்தார்.
தெற்கு ஆபிரிக்க நாடுகளுள் ஒன்றான போட்ஸ் வானா குடியரசின் ஜனாதிபதி இயான்காமா இராணுவ குடியிருப்புப் பகுதியில் கடந்த வாரம் நடந்து சென்றபோது திடீரென ஒரு சிறுத்தை அவரைத் தாக்கியது. இதில் அவருக்கு முகத்தில் இலேசான காயம் ஏற்பட்டது.
இது குறித்து அந்த நாட்டின் அரசு செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாவது:-
இராணுவ குடியிருப்புப் பகுதிக்கு அருகே அடர்ந்த மரங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் ஜனாதிபதி இயான்காமா நடந்து சென்றபோது அங்கிருந்த சிறிய சிறுத்தை ஒன்று திடீரென அவருடைய முகத்தில் நகங்களால் கீறியுள்ளது. அதிபர் சுதாரித்து விலகியதால் சிறிய அளவில் மட்டுமே காயம் ஏற்பட்டது.
இதற்காக வீட்டில் இருந்தவாறே ஜனாதிபதி சிகிச்சை பெற்று வருகிறார். மருத்துவமனையில் சேர்க்கப்படவில்லை - என்றார். (வ)



### பாக். பிரதமர் பெனாசிர் பூட்டோ கொலை வழக்கு

# உள்துறை அமைச்சரையும் இழுத்து விட்டார் முஷாரப்

இஸ்லாமாபாத், மே.1
பாகிஸ்தானின் பூட்டோ கொலை தொடர்பாக பாகிஸ்தான் முன்னாள் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக்கிடம் விசாரணை நடத்த அந்தநாட்டு பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.
பெனாசிர் பூட்டோ 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ராவல்பிண்டியில் நடைபெற்ற பிரசாரக் கூட் டத்தின் போது தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார்.
அந்தக்கொலை தொடர் பாக விசாரணைக்கு முன்னிலையாகுமாறு முஷாரப்புக்கு அழைப்பாணை அனுப்பியும் அவர் முன்னிலையாகவில்லை. இந்த நிலையில் தேர்தலை முன்னிட்டு நாடு திரும்பிய அவர் இவ்வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டார். இந்தக்கொலை



தொடர்பான விசாரணைக் குழுவினர் கடந்த ஞாயிற்றுக் கிழமை முஷாரப்பிடம் விசாரணை செய்தனர்.
பெனசிர் பூட்டோ பாது காப்புக்கான ஏற்பாடுகளை முன்னாள் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தான் செய்திருந்தார். அவரது கொலையில் தனக்கு எந்தத் தொடர்பும் இல்லை.
குண்டு துளைக்காத வாகனத்தில் இருந்து வெளியே வரக் கூடாது என ரஹ்மான் மாலிக் தான் பெனாசிருக்கு அறிவுறுத்தி இருக்க வேண்டும். அவர் தான் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக பொலிஸாரிடம் பேச்சு நடத்தினார் என விசாரணையின் போது முஷாரப் தெரிவித்துள்ளார்.
அதையடுத்து ரஹ்மான் மாலிக்கிடம் விசாரணை நடத்தி அவரது வாக்குமூலத்தை பதிவு செய்ய விசாரணைக் குழு தீர்மானித்துள்ளது. இதுதொடர்பாக அவருக்கு அறிவித்தல் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
இதுகுறித்து முஷாரப் வழக்கு ரைஞர் சல்மான் சப்தார் கூறியதாவது:
''பெனாசிர் பூட்டோ கொலை தொடர்பாக ரஹ்மான் மாலிக்கிடம் இதுவரை ஏன் விசாரணை செய்யவில்லை என முஷாரப் கேள்வி எழுப்பினார். பெனாசிர் பொதுக்கூட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ரஹ்மான் மாலிக் மட்டுமே அறிவார்'' - என்றார். (வ)

## ஹந்த்ரா அமைப்பின் தலைவருக்கு பிடியாணை

கோலாலம்பூர், மே.1
மலேசியாவில் இந்துக்களையும் தமிழர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பான ஹிந்த்ரா அமைப்புத் தலைவர் உதயகுமார் என்பவரை உடனடியாகக் கைது செய்யுமாறு மலேசிய நீதிமன்றம் பிடி ஆணை பிறப்பித்துள்ளது.
மலேசியாவில் இந்துக்களினது அல்லது அவற்றில் பெரும்பான்மையான தமிழர்களினது உரிமையை வலியுறுத்தி அந்தநாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து கண்டிராத மிகப்பெரிய பேரணி ஒன்றை 2007 ஆம் ஆண்டு உதயகுமார் வழி நடத்தியிருந்தார். அந்தப் பேரணியை கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி பொலிஸார் கலைத்தனர்.
இந்தநிலையில் உதய குமார் மீது சுமத்தப்பட்ட தேசத் துரோக வழக்கு ஒன்றில் அவர் முன்னிலையாகாததால் அவருக்கு கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**இவர் மே 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.**

முன்னர் தனது உடல் நிலையை காரணம் காட்டி அதாவது முதுகுத் தண்டில் பாதிப்பு எனக் கூறி ஏப்ரல் 2 - மே 17 வரை தன்னால் முன்னிலையாக இயலாது என நீதிமன்றத்துக்கு மருத்துவச் சான்றிதழ் அனுப்பியிருந்தார். இதே வேளை மே 5 மலேசி யாவில் நிகழவுள்ள பொதுத் தேர்தலில் உதயகுமார் வேட் பாளராகப் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத் தக்கது.
இந்தநிலையில் தன் மீது சுமத்தப்பட்ட குற்றத்துக்குக் காரணமாக, தேசத் துரோக மாகப் பேசிய வேத நாயகத்தை கட்சிப் பொறுப்பில் இருந்து தான் ஏற்கனவே நீக்கி விட்டதாகவும் தன் மீது இப்போது ஒரு குற்றமும் இல்லை எனவும் உதயகுமார் கூறியுள்ளார்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மப்பும் மந்தாரமான காலநிலை நிலவும்.

## மே தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மே1
யாழ். தொழிலாளர் ஒத்துழைப்பு குழுவின் மே தின நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு டி.எம்.எஸ். தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.
சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொழிலாளர் அமைப்புக்களைச் சேர்ந்தோர் உரையாற்றவுள்ளனர். (எ)

## விடுமுறை

யாழ்ப்பாணம், மே1
யாழ். சிகை ஒப்பனை நிலையங்களுக்கு மே தினமான இன்று புதன்கிழமை விடுமுறை நாளாக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (எ)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த் திருவிழாவின் போது அறநெறி மாணவர்களின் பஜனை நடைபெற்றது. பஜனைக் குழுவினருடன் அறநெறி பாடசாலை அதிபர் க. விசுவநாதனும். (ஒ)

## சிறுவனின் கையை பதம்பார்த்த லான்ட்மாஸ்ரர்

அளவெட்டி,மே 1
தெல்லிப்பழையில் புறப்படுவதற்கு தயார் நிலையில் நின்ற லான்ட்மாஸ்ரரின் பெல்ட்டினுள் கையை வைத்த சிறுவனின் வலது கை முறிந்தது. அதனையடுத்து அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காததால் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவத்தில் நாகேந்திரன் நர்த்தனன் என்ற 4 வயதுடைய சிறுவனே, இவ்வாறு காயமடைந்தவராவார். (வ-36)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

தெல்லிப்பழை,மே 1
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற போது நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
தலைவர் சோ.சுகிர்தன் (தவிசாளர் வலி.வடக்கு பிரதேச சபை), செயலாளர் சோ. இராமநாதன் (அதிபர் வீமன்காமம் மகா வித்தியாலயம்), உபதலைவர் யுவராஜ் உப செயலாளர் கி.டினேஸ்குமார், பொருளாளர் ரெஜினோல்ட் ராஜ் ஆகியோரும் மேலும் நிர்வாக உறுப்பினர்களாக 6 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-86)

## ச.ச.நிலைய ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை

அளவெட்டி,மே 1
அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக் கொடை நிகழ்வு இடம்பெற்றுள்ளது. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியின் நடமாடும் சேவை மூலம் மேற்படி சன சமூக நிலைய உறுப்பினர்கள் 25 பேர் குருதிக் கொடையில் கலந்து கொண்டு குருதி வழங்கினர். இந்த நிகழ்வு நிலையத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. (வ-36)

## பரந்தன், மாங்குளம் தபாலக கட்டடப் பணிகள் துரிதகதியில்

யாழ்ப்பாணம், மே 1
பரந்தன், மாங்குளம் தபாலகங்களுக்கான புதிய கட்டடங்கள் அமைக்கும் பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.
வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குறித்த தபாலகங்களுக்கான கட்டடங்கள் அமைக்கும் பணி இடம்பெறுகின்றது.
குறிப்பாக பரந்தன் தபாலகத்துக்கான கட்டடம் இன்னும் 3மாத காலப் பகுதியில் அமைக்கப்பட்டு நிறைவு பெறலாம் என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
அதேவேளை மாங்குளம் தபாலக கட்டடப் பணிகள் மிகவும் ஆமை வேகத்தில் இடம்பெற்று வருகின்றன.
எனவே அந்தத் தபாலகக் கட்டடப் பணிகளை உடனடியாக துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மேற்படி கட்டடப் பணிகளை துரிதப்படுத்தி தபாலகங்களை விரைவாகத் திறந்து வைக்க ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டுள்ளன. (வ-17)




சிறந்த கிராம அலுவலராக தெரிவு செய்யப்பட்ட நல்லூர் இல.108 கிராம அலுவலர் திருமதி ராகினி இராமலிங்கத்துக்கு அண்மையில் மகளிர் அமைப்பு ஏற்பாடு விழாவில் பேராசிரியை திருமதி மீனா செந்தில்நந்தனன் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கின்றார். (வ-7)

# நல்லின கோழிக் குஞ்சுகளை பெற்றுக்கொள்ள முடியும்

### யாழ். கால்நடை சுகாதார திணைக்களப் பணிப்பாளர் தகவல்

அச்சுவேலி, மே 1
''நல்லின முட்டை இடும் பிறவுண் நிற ஒருநாள் கோழிக் குஞ்சுகள் நியாய விலையில் கோழி வளர்ப் போர் மற்றும் பண்ணையாளர்களுக்கு வாராந்தம் வழங்கப்படவுள்ளன. தேவையானோர் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களிலும் பதிவு செய்து கொள்ளலாம்'' என்று யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வக்ஸலா அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ். மாவட்டத்தில் முட்டையிடும் பிறவுண் நிற கோழிக் குஞ்சு ஒன்று 130 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றது. அதேநேரம் தென்னிலங்கையில் உள்ள கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையங்களில் கழிவு நிலையில் மிகக் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யப்படும் குஞ்சுகளையும், வர்ணம் பூசப்பட்டு நிறமாற்றம் செய்த கோழிக் குஞ்சுகளையும்



பிரதேசம் தோறும் எடுத் துச் சென்று ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்து மோசடியான முறையில் விற் பனை செய்யப் படுகின் றது. அது மட்டுமல்ல சேவல் இன கோழிக் குஞ்சு களை பேட்டு குஞ்சு எனக் கூறி கூடிய விலைக்கு விற் பனை செய்கின்றனர். இதன்மூலம் பொதுமக்கள் ஏமாற்றப்படுகின்றனர். கோழிகள் தொற்று நோய் தாக்கத்துக்கு உள்ளாகின்றன.
பண்ணையாளர்கள் மற்றும் கோழி வளர்ப்போருக்கு தரமான நல்லிணபிறவுண் நிறக் கோழிக்குஞ்சுகளை நியாய விலையில் வழங்குவதற்கு யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோழிக் குஞ்சு தேவையானோர் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்களில் தமக்குத் தேவையான குஞ்சுக்ளின் எண்ணிக்கையை குறிப்பிட்டு பதிவுகளை செய்து கொள்ளலாம். பதிவு செய்தவர்களுக்கு குறித்த ஒருசில தினங்களில் குஞ்சுகள் வழங்கப்படும்- என்றார். (வ-11)

## யாழ்- கொழும்பு இடையே இ.போ.ச.சொகுசு பஸ்சேவை

யாழ்ப்பாணம், மே1
இலங்கை போக்குவரத்துச் சபை கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான சொகுசு பஸ் சேவையை ஆரம்பித்துள்ளது. அவிசாவளை மற்றும் புறக்கோட்டை பஸ் டிப்போக்களின் சொகுசு பஸ்களே குறித்த சேவையில் ஈடுபட்டு வருகின்றன. குளிரூட்டி மற்றும் இதர வசதிகள் அந்த பஸ்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
யாழ். பஸ்தரிப்பு நிலையத் தில் இருந்து தினமும் இரவில் குறித்த பஸ்கள் கொழும்புக்கான சேவையில் ஈடுபட்டு வருகின்றன. (வ-17)

## நூல் வெளியீடு

உலக புத்தக தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபை பொதுசன நூலகம் நடத்தும் தகவலை நோக்கிய வலையின் வீசங்கள் நூல் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10மணிக்கு யாழ். பொது சன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்.பொதுசன நூலக பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

# கல்வி நிர்வாக சேவையில் பதவி உயர்வு பெறுவோர் விவரம் வெளியானது

அச்சுவேலி, மே.1
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II இல் உள்ள அதிகாரிகளில் தரம் I இற்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகுதி நிலையில் உள்ள நூறு பேரின் பெயர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II இல் உள்ள அதிகாரிகளில் இருந்து தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமை பெறுபவர்களின் பெயர், முகவரி, முதல் நியமனத் திகதி, தேசிய அடையாள அட்டை மற்றும் விவரங் களை உள்ளடக்கிய விவர அட்டவணை வெளியிடப் பட்டுள்ளது.
கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள விவர அட்டவணையில் நூற்று ஒருவரின் பெயர் விவரம் இடம்பெற்றுள்ளது.
அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெற விருப்பதாக அறியப்படுகின்றது.
அதேநேரம் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I இல் உள்ள வர்களில்180 பேரின் பெயர் விவரம் அடுத்த நிலை உயர்வுக்கு உள்ளவர்கள் என்ற வகையில் வெளியிடப்பட்டுள்ளது.
இலங்கை கல்வி நிர்வாக சேவையில் குறித்த காலம் சேவை புரிந்த மூப்பு உடையாளர்களின் பெயர் சேவைத் தரம் இரண்டில் இருந்து ஒன் றுக்கு அதிலிருந்து அடுத்த நிலைக்கும் என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் தற்போது நடை முறையில் உள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாண குறிப்பில் சேவை தரம் ஒன்றில் இருந்து அடுத்த நிலைக்கான பதவி உயர்வுத் தரம் தொடர்பான குறிப்புக்கள் இல்லை எனக் கூறப்படுகின்றது. (வ-11)



தெல்லிப்பழை, மே 1
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் செ.சுந்தரேஸ்வரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
இக் கூட்டத்தில் 2016 ஆம் ஆண்டு இருநூறாவது ஆண்டு நிறைவு விழாவை கொண் [illegible] பாடசாலை மட்டத்தில் கல்விச்செயற்பாடுகளை மேம்படுத்து [illegible] இணைப்பாட விதான செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுத் துறையிலும் மேம்பாட்டை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# தமிழரின் உரிமைக்குரல் இன்னும் ஒடுங்கிவிடவில்லை உலக தொழிலாளர் வர்க்கத்துடன் கைகோர்ப்போம்

## மேதினச் செய்தியில் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 1

தமிழர்களின் போராட்டம் இன்னும் ஓயவில்லை. உரிமைக்குரல்கள் ஒடுங்கிப் போய்விடவில்லை. எமது உரிமைகளுக்கான போராட்டத்துக்கு உலகத் தொழிலாளர் வர்க்கம் கைகொடுக்கும் எனத் திடமாக நம்புகின்றோம்.

இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விடுத்துள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் உன்னத நாளான மேதினத்தை அதன் [illegible] மேன்மையுடன் கொண்டாடும் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் சகலவிதமான ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான உரிமைப் போராட்டங்கள் முன்னெடுத்து வரும் அனைத்துத் தரப்பினருக்கும் மே தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1886 ஆம் ஆண்டு அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் எட்டு மணிநேர வேலை கோரியும் ஏனைய உரிமைக் கோரிக்கைகளையும் முன்வைத்தும் எழுந்த போராட்டப் பேரலையும், உழைக்கும் மக்கள் சிந்திய இரத்தமும் உலகெலாம் பரவி இன்று பல நாடுகளை விடுவித்துவிட்டன. ஒடுக்குமுறையாளரைக் கதி கலங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. விடுதலை கோரும் மக்களின் ஒளி விளக்காக மிளிர்கின்றன.

உலகப் பாட்டாளி வர்க்கமும் நாடுகளின் தேசிய இனங்களும் காலங்காலமாக முன்னெடுத்து வரும் அடிப்படை உரிமைகளை மறுத்தல் உட்பட சகலவிதமான ஒடுக்குமுறைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் மக்களாகிய நாம், இன்று ஒரு கொடிய இராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் நசுக்கப்படுகின்றோம். இனந்தெரியாதவர்கள் என்ற பேரில் அரச சார்பு குண்டர்கள், பாதுகாப்புத் தரப்பின் ஒத்துழைப்புடன் நடத்தும் வன்முறைகளால் நாளாந்தம் இரத்தம் சிந்துகின்றோம். அழக்கூட வாய் திறக்க முடியாது அச்சுறுத்தப்படுகின்றோம். இன்றைய ஆட்சியாளர்களால் திட்டமிட்ட வகையில் எமது தேசிய தனித்துவத்தின் மீது, ஒரு போர் தொடுக்கப்பட்டிருக்கின்றது. எமது மொழியுரிமை பறிக்கப்பட்டு, தேசிய கீதம் உட்பட எங்கும், சிங்கள மயம் என்பதை நோக்கி நாடு நகர்த்தப்படுகின்றது. பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற போர்வையில் எமது மக்களுக்குச் சொந்தமான பாரம்பரிய நிலங்கள் பறிக்கப்படுகின்றன. விவசாயம், கடற்றொழில், அரச பணி என்பவற்றில் மேற்கொள்ளப்படும் இன ஒடுக்கல் மூலம் எமது பொருளாதாரம் சிதைக்கப்படுகின்றது. ஒரு பெரிய நசிவுக் கலாசாரப் பரம்பல் மூலம் எமது கலாசாரத் தனித்துவம் சீரழிக்கப்படுகின்றது.

### உறுதியுடன் போராடுவோம்

எனவே உலகத் தொழிலாளர் வர்க்கத்தைப் போலவே நாமும் எமது பறிக்கப்பட்ட உரிமைகளுக்காகவும், தொடர்ந்து பறிக்கப்படும் உரிமைகளுக்காகவும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டோம். தமிழ் மக்களின் அந்தப் போராட்டம் உலக ஏகாதிபத்திய சக்திகளினதும் பிராந்திய வல்லரசுகளின் துணையுடனும் தோற்கடிக்கப்பட்டது. ஆனால் எமது உரிமைக் குரல்கள் ஒடுங்கிப் போய்விடவில்லை. நாம் எமது உரிமைகளுக்கான போராட்டத்தை ஜனநாயகவழிமுறையில் உறுதியுடனும் துணிச்சலுடனும் முன்னெடுக்கிறோம். உலகத் தொழிலாளி வர்க்கம் எமக்குக் கரங் கொடுக்குமெனத் திடமாக நம்புகின்றோம்.

இன்று இலங்கையின் ஆட்சியாளர்கள் தமிழ்மக்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதை தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையின் பிரதான வடிவமாகவும் தமிழ் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களை அழிக்கும் ஓர் ஆயுதமாகவும் கையிலெடுத்துள்ளனர்.

மணலாற்றில் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் படையினரின் உதவியுடன் சிங்களவரால் ஆக்கிரமிக்கப்பட்டன. கொக்குத்தொடுவாய், நாயாறு ஆகிய பகுதிகளில் சிங்கள மீனவர்கள் குடியேற்றப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் எமது மீனவர்களின் தொழில் பாதிப்படைகின்றது. தமிழ் மீனவர்கள் தொழில் செய்ய பல நெருக்கடிகள் ஏற்படுத்தப்படும் அதேவேளையில், சிங்கள மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளைப் பாவித்து எமது கடல் வளத்தை முற்றாகவே அழித்து வருகின்றனர்.



### விவசாய நிலங்களில் படை முகாம்கள்

வலி.வடக்கு, கேப்பாபுலவு, மறிச்சுக்கட்டி, வவுனியா பேயாடி கூழாங்குளம் ஆகிய பகுதிகளில் எமது மக்களின் விவசாய நிலங்கள் அபகரிக்கப்பட்டு படை முகாம்கள் அமைக்கப்படுகின்றன. நில அபகரிப்பின் பல பரிமாணங் கொண்ட ஒரு பெரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே வலி.வடக்கின் நில அபகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இதில் 24 கிராம் சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 6,183 ஏக்கர் பிரதேசம் படையினரால் கையகப் படுத்தப்பட்டுள்ளன. இந்த மண் எமது மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த தொழில் செய்த ஒரு பிரதேசம்.

இது ஒரு நில அபகரிப்பு மட்டுமல்ல. விவசாயிகள், தொழிலாளிகள், மீனவர்கள் என உழைக்கும் மக்களின் பிரதான வருவாய் மையமாக விளங்கிய இந்தப் பிரதேசம் பறிக்கப்படுவதன் மூலம் உழைக்கும் மக்களுக்கு எதிரான ஒரு போராகவும் விளங்குகிறது.

வலி.வடக்கு செம்மண் நிறைந்த வளமான பிரதேசம். இங்கு மிளகாய், வெங்காயம், மரவள்ளி, வெற்றிலை, முந்திரிகை எனப் பல பயிர் களும் செழிப்பாக வளர்ந்து விவசாயிகளின் வாழ்வா தாரத்தை உயர்த்தின. இன்றைய நிலஅபகரிப்பு மக்களின் குடியிருப்புக்களை ஆக்கிரமிப்பதுடன் விட வில்லை. விவ சாயிகளின் வாழ்வையும் பறித்தெடுக் கின்றது.

இங்கு அலுமினியத் தொழிற்சாலை, சிமெந்து தொழிற்சாலை என இருபெரும் நிறுவனங்களிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றினர். அவர்கள் தொழிலிழந்து இன்று தெருவில் நிற்கின்றனர். மயிலிட்டி இலங்கையின் பிரதானமீன்பிடி மையங்களில் ஒன்று. அவர்கள் தொழில் செய்ய முடியாது இராணுவ ஆக்கிரமிப்புத் தடுத்துவிட்டது.

இனித் துறைமுகத் தொழிலாளர்கள், சிமெந்து ஆலைத் தொழிலாளர்கள் எனப் பெரியளவு சிங்களவர்கள் கொண்டு வரப்படுவார்கள். பின் தொழிலாளர் குடியிருப்புக்கள், இராணுவ வீரர்களின் குடும்பங்களின் குடியிருப்புக்கள் என வீடுகள் அமைக்கப்பட்டு, அங்கு சிங்கள வர்கள் குடியேற்றப்படுவர். இறுதி யில் வலி.வடக்கு ஒரு சிங்களப் பிரதேசமாக மாற்றப்படும்.

மணலாறு, மண்கிண்டி பாரம்பரியமாக தமிழ் மக்கள் வாழ்ந்த தென்னமரவாடி, வன்னிமையைச் சேர்ந்த ஒரு கிராமம். அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் விரட்டப்பட்டு அங்கு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். தமிழ் மக்களை விரட்டுவதிலும் சிங்களவரைக் குடியேற்றுவதிலும் தீவிரமாகச் செயற்பட்டவர் ஜானகபெரேரா என்ற இராணுவப் படைத்தளபதி அந்தக் குடியிருப்புக்கு ஜானகபுர என்ற பெயர் சூட்டி, அவர் தனது பெயரை நிலைநாட்டிக் கொண்டார்.

### ஹத்துருசிங்கபுர

இன்று வலி.வடக்கில் அபிவிருத்தி என்ற பெயரிலும், பாதுகாப்பு என்ற பெயரிலும், தமிழ் மக்கள் மீள்குடியேறுவதைத் தடுத்து, அதை ஒரு சிங்களப் பிரதேசமாக மாற்ற முன்னிற்பவர். மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க எதிர்காலத்தில் வலி. வடக்கு ஹத்துருசிங்கபுர எனப் பெயர் மாற்றப்பட்டாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

தமிழ் மக்களின் வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராகி அமைச்சர் பதவி வகிக்கும் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பாக சர்வதேச ஊடகவியலாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோது, இது தொடர்பாகத் தான் ஜனாதிபதியுடன் பேசியதாகக் கூறினார். நிருபர் மீண்டும், மீண்டும் மக்கள் குடியேற அனுமதிக்கப்படுவார்களா என்று கேட்டபோது சரியான பதில் சொல்லாமல் சமாளித்துவிட்டார். நாவற்குழியில் தென்பகுதி சிங்களவர் வந்து பலாத்காரமாகக் குடியேறிய போதும், அமைச்சர் தான் ஜனாதிபதியுடன் பேசுவதாகக் குறிப்பிட்டார். இன்றுவரை பேசி முடிக்கவில்லை. ஆனால் சிங்களவர்களுக்கு நாவற்குழியில் நிரந்தர வீடுகள் அமைக்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. அரசின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்குத் துணை போகும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் தொடர்பாக தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். கொடுமையான இன ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருக்கும் தமிழ்த் தேசிய இனமான நாம். எமது உரிமைகளுக்காக போராடும் அதேவேளையில் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் உலகத் தொழிலாளர் வர்க்கத்துடனும் கரம் கோர்க்கிறோம். உரிமைகள் கிட்டும் வரை எத்தனை இடர்கள் வரினும் எமது போராட்டம் தொடரும்.

"போராடுவது, தோல்வியடைவது, மீண்டும் போராடுவது தோல்வியடைவது மீண்டும் மீண்டும் போராடுவது மீண்டும் மீண்டும் தோல்வியடைவது- இறுதிவரை !. இது மக்களின் நியதி.

**"போராடுவது தோல்வியடைவது மீண்டும் போராடுவதுதோல்வியடைவது மீண்டும் மீண்டும் போராடுவது மீண்டும் மீண்டும் தோல்வியடைவது- தங்கள் சவக்குழி வரை. இது ஒடுக்குமுறையாளர்களின் நியதி"**

இது சீனத் தலைவர் மா ஓ சேதுங் கூறியவை. எனவே இறுதி வெற்றி மக்களுக்கே.


கிளி/ மாவட்ட வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

சங்கம் பதிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல்

இடம்: பிரதேச சபை மண்டபம் (கரைச்சி)
காலம்: 03,05.2013
நேரம்: முற்பகல் 10 மணி (வெள்ளிக்கிழமை)

மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளதனால் பதிவினை மேற்கொண்ட அனைத்து முச்சக்கர வண்டி உரிமையாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கிளி மாவட்ட வாடகை
முச்சக்கர வண்டி உரிமையாளர்கள்
சங்கம், இரத்தினபுரம். (28299)(6.11) நிர்வாகத்தினர்.

FIRE EXTINGUISHER
தீ அணைக்கும் கருவிகள்
யாழ்.நகரில் தீ அணைக்கும் கருவிகள் விற்பனைக்குண்டு



வியாபாரத் தாபனங்கள், காரியாலயங்கள், வீடுகளுக்கும் தேவையான சகல விதமான கருவிகளும் எம்மிடம் விற்பனைக்குள்ளது.



(36886)

YARL FIRE PROTECTORS
146,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
146, KANNATHIDDY ROAD, JAFFNA.
T.P.: 021 221 9905

31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05.11.1937 மறைவு 01.04.2013

அமரர் மயில்வாகனம் செந்திநாதன்

எம் நெஞ்சக் கோயிலிலே
நினைவுகளால் வாசம் செய்யும்
அன்புத் தெய்வமே
எம் வாழ்வும் நீங்களே
வளமும் நீங்களே
நாள்கள் முப்பத்தொன்று
ஓடி மறைந்தாலும்
மங்கா சுடரொளியாய்
உங்கள் நினைவுகள்
என்றென்றும் எம் நெஞ்சில் சுடர்வீசும்
வாழ்வாங்கு வாழ வைத்து வானுறைந்த தெய்வமே
விண்ணோடு நீர் சென்று மறைந்தாலும்
இம் மண்ணோடு மாறாது உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிவ பூதராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (36476)(5.6) குடும்பத்தினர்.

மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 34 வயதுடைய மணமகளுக்கு நற்பண்புடைய மணமகன் தேவை. நட்சத்திரம் கார்த்திகை, கிரகபாவம்-34.
தொடர்பு: 077 016 6746 (c/8469)(6.11)

மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 40 வயதுடைய அவிட்ட நட்சத்திர மணமகளுக்கு நற்பண்புடைய மணமகன் தேவை. வெளிநாடு விரும்பத்தக்கது. கிரகபாவம்5, மனைவியை இழந்த அல்லது விவாகரத்து பெற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 077 016 6746 (c/8468)(6.11)

வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் வைத்திய நிலையம் ஒன்றுக்கு உதவித் தாதிப் பயிற்சி பெற விரும்புபவர்களும், பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:
077 873 0129,
077 326 1859 (36887)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடிசனும் புலம்பெயர் தமிழருமே மின்கட்டண உயர்வுக்குக் காரணம்

## அரசு இப்படியும் சொல்லும் என்கிறார் ரணில்



'மின்குமிழை உலகுக்கு அறிமுகப்படுத்திய தோமஸ் அல்வா எடிசனும் புலம்பெயர் தமிழர்களுமே மின்கட்டண அதிகரிப்புக்குக் காரணம் என அரசு கூறும் காலம் வெகு தொலைவிலில்லை" - என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஐ.தே.கவின் கட்சி அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றின் போதே இந்தக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமது ஊழல், மோசடிகளை மூடி மறைப்பதற்காக மின்கட்டணத்தை அதிகரித்த அரசு, தற்போது ஒவ்வொருவர் மீதும் குற்றஞ்சாட்டி தான் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கிறது.

முன்னாள் மின்சக்தித்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் தீர்மானத்துக்கமையவே மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது என்று தற்போதைய மின்சக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவிக்கிறார். இதேவேளை, அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் 1993 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சியால் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தாலேயே மின்கட்டணத்தை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் இலங்கையில் முதலாவது நீர்மின் நிலையத்தை நிறுவிய கொத்தலாவெல மீதும் குற்றஞ்சாட்டுவதுடன் மின்கட்டண உயர்வுக்கு மின்குமிழை உலகுக்கு அறிமுகம் செய்த தோமஸ் அல்வா எடிசனும் மற்றும் புலம்பெயர் தமிழர்களுமே காரணம் என்று அரசு கூறும் காலம் வெகு தொலைவிலில்லை - எனத் தெரிவித்தார் ரணில். (த)

# பிரசவ விடுதிகளில் இனிமேல் இருவருக்கு மட்டுமே அனுமதி

யாழ்ப்பாணம்,மே.01

தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரசவ விடுதிகளில் நோயாளி ஒருவருக்கு இருவர் மட்டுமே பார்வையாளர்களாக அனுமதிப்பத்திரத்துடன் (பாஸ்) அனுமதிக்கப்படுவர்.

பிரசவ விடுதிகளில் பிறக்கும் சிசுக்களில் கணிசமானவற்றுக்குத் தொற்று நோய்கள் ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளதால் இந்த வரையறை செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

வேறு சில வைத்தியசாலைகளில் சிசுக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்பட்டுவந்ததைத் தொடர்ந்து பார்வையாளர் அனுமதியில் கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்திய போது தொற்று நோய்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளது. இதனாலே இங்கும் அந்த நடைமுறையை அமுல்படுத்தவுள்ளோம்.

நோயாளர்களைப் பார்வையிடுவதற்காக வைத்தியசாலைக்கு சிறுவர்களை அழைத்து வரவேண்டாம். உங்கள் குழந்தைகளைத் தொற்று நோய்களின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். பார்வையாளர் நேரத்தில் ஒரு தடவையில் இரண்டு பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் என்றார். (ங-4-ரி)

# விபத்தில் காயமடைந்தவர் ஒரு மாதத்தில் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், மே 1

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் 34 நாள்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார். இந்த விபத்து சுன்னாகத்தில் வங்கி ஒன்றின் முன்பாக கடந்த மார்ச் 28 ஆம் திகதி இடம்பெற்றது.

சம்பவத்தில் புன்னாலைக் கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த இரத்தினம் தவபாலன் (வயது-54) என்பவரே உயிரிழந்தார். காப்புறுதிப் பணம் கட்டுவதற்காக வீதியைக் கடந்த போது போட்டி போட்டு இரண்டு மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர்கள் வீதியின் கரையில் வைத்து மோதிவிட்டுத் தப்பிச் சென்றனர். பின்னர் அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் பிணையில் விடுவிக்கப்பட்டதாக உறவினர்கள் விசாரணையின் போது தெரிவித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். (ங-16-4)

**வான் உடன் விற்பனைக்கு** 58 XXXX தொடரிலக்கமுடைய TOYOTO HIACE வான் விற்பனைக்கு. டுவல் AC, அஜெஸ்மன் சீற், கட்டை மொடல் வெள்ளைநிறம் (லீசிங் வசதியுடன்)
தொ.பே: 0777902524 (சி/8600)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## இம்மானுவேல் இக்னேசியஸ் ரட்ணராஜா

இடியென வந்தது செய்தி - அந்த
இனிய மனிதனின் இறைதுயில் தேதி...!
கடிதெனக் காலங்கள் ஓட - அவர்
கனிமொழி கேட்காது உறவுகள் வாட
துடிக்கின்ற இதயத்தினோடும் - செயல்
துணிந்திட்ட நட்பின் அருகினில் கூட
பிடித்திட்ட நண்பர்களாக துயர்
பகிர்கின்றோம், அவருயிர்
இறைசேர்வதாக!

நண்பர்கள், 30ஆம் அணி மருத்துவபீடம்

(36943)

# மரண அறிவித்தல்



## பீற்றர் இம்மானுவேல் றூபசிங்கம் (பாலசிங்கம்)

(ஓய்வு பெற்ற மாநகரசபை வேலை மேற்பார்வையாளர்)

யாழ்ப்பாணம் கோயில் வீதி 1 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த பீற்றர் இம்மானுவேல் றூபசிங்கம் (பாலசிங்கம்) நேற்றுமுன்தினம் (29.04.2013) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பீற்றர் குணமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா, இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கிறிஸ்ரீன் புஷ்பத்தின் அன்புக் கணவரும், அன்ரொயின், ஜோண் ரொஷான் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஒலிவியா சாந்தியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஜெயராஜா, ஜீவரெட்ணம், சொர்ணவதி மற்றும் துரைசிங்கம், ரத்நாயகம், அன்னவதி, கீர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், றோச், காலஞ்சென்றவர்களான அருளானந்தம், கிறிஸ்ரியன், மற்றும் பவளம், ஜெயராணி, றீற்றா, ஜெயரட்ணம், பிறிஜெற், கொண்சி, ராசாத்தி, தனம், மீனா, இராசேந்திரம், மானெல், ஈனிற் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரெண்டா, காலஞ்சென்றவர்களான வின்சென்ற், தவம் மற்றும் பங்கன், ஏபிரகாம், றைன், வலன்ரைன் ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(02.05.2013) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

466/7 கோயில் வீதி
1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

(36940)

# மரண அறிவித்தல்

## இரத்தினம் தவபாலன் (தவம்)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம்-தவபாலன் நேற்று (30.04.2013) செவ்வாய்க் கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம்-சரஸ்வதி தம்பதியரின் இளைய புதல்வனும், பொன்னுத்துரை-தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இன்பராணியின் அன்புக் கணவரும், அனோஜன், சஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராதிகாவின் அன்பு மாமனாரும், மகேந்திரன், காந்தராசா, கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவி, பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.05.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியகாரன் வீதி,
புன்னாலைக்கட்டுவன்
தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே:
0212240928

(36941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்திய நிபுணர் சிவபாலன் சிவன்சுதன்
அவர்களின் அன்புத் தந்தை

### செல்வரத்தினம் சிவபாலன்

அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள்.
விடுதி 04, விடுதி 08.

(36934) (23-16-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்திய நிபுணர் சிவபாலன் சிவன்சுதன் அவர்களின் அன்புத் தந்தை

### செல்வரத்தினம் சிவபாலன்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீரிழிவு சிகிச்சை நிலைய சமூகம்,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(36925) (23-16-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலை வைத்திய நிபுணர்
சிவபாலன் சிவன்சுதன் அவர்களின்
அன்புத் தந்தை

### செல்வரத்தினம் சிவபாலன்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யாழ். போதனா வைத்தியசாலை,
தாதிய சமூகம்.

(36929) (23-16-14)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி நாகம்மா தம்பையா

இல. 567, நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நாகம்மா தம்பையா நேற்று (30.04.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 567, நாச்சிமார் கோயிலடி.
யாழ்ப்பாணம்.

தகவல்:
நவம், ராஜன் (ராஜன் வில்லிசைக்குழு)

### மாணிக்கமுத்து மயில்வாகனம் முத்துப்பிள்ளை



மயிலிட்டி முத்துவிளானை பிறப்பிடமாகவும், கோப்பாய் நீதிவான் வளவை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கமுத்து மயில்வாகனம் முத்துப்பிள்ளை கடந்த (28.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கமுத்து மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், முத்துமயில்வாகனம்- இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், செல்லத்தின் பாசமிகு சகோதரியும், முத்துமயில்வாகனம், மகேஸ்வரன், இரத்தின மயில்வாகனம், Dr.மனோகரன் ஆகியோரின் தாயும், அம்பிகை, உதயகுமாரி, இந்திராணி, அகி லினி ஆகியோரின் மாமியும், மகிந்தன், அபிராமி, விதுனன், வாகீசன், சாருஷா, மதுரா, ஆதித்தன், மகிஷா, மித்திரன், மயூரி, தர்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், Dr.கமலாம்பிகை, திருப்பரங்கிரிநாதன், விமலாதேவி, சரோஜாதேவி, நந்தகுமார், ஜெய தரன், ரவிச்சந்திரன் ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2013) புதன்கிழமை காலை 7.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோப்பாய். (36935)(17/16) மகேஸ்வன்(ராசா)

| பணிப்பெண் தேவை | வீட்டில் தங்கி நின்று வேலைசெய்யக் கூடிய பணிப்பெண். தேவை. தொடர்பு: 077 6333133, 021 223 0774 |
|---|---|

**விற்பனைக்கு** முதிரை அலுமாரி விற்பனைக் குண்டு (கடைப் பாவனைக்கு உகந்தது)
தொடர்பு:- 077 8168158, 071 4838386

## கண்ணீர் அஞ்சலி



நுணாவில் மேற்கு, விளைவேலி ஆதீனத்தைச்
சேர்ந்தவரும் நல்லை ஆதீன சிவாச்சாரியாரும்
எமது ஆலய பிரதம குருவுமாகிய
**கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்** குருக்கள் J.P.
அவர்களின் அன்பு மனைவி

### இராஜலக்ஷ்மி அம்மாவின்

பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை,
நொச்சியம்பதி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர்.

(36936) (23-16-14)

## கண்ணீர் அஞ்சலி



புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான மகோற்சவகுருவான சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்களின் அன்பு மனைவி

### திருமதி இராஜலக்ஸ்மி அம்மா ஜெகதீஸ்வரக்குருக்கள்

அவர்கள் இறைபதம் அடைந்ததனையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய ஐங்கரனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆயக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை,
புன்னாலைக் கட்டுவன் தெற்கு.

## கண்ணீர் அஞ்சலி



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

### இரத்தினம் தவபாலன்

(உப செயலாளர், ஆயக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை)

அவர்கள்( 30.04.2013) செவ்வாய்க்கிழமை மறைந்த செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஐங்கரனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலயப் பரிபாலன சபையினர்
ஆயக்கடவைச் சித்தி விநாயகர் தேவஸ்தானப் பரிபாலன சபை.
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி ஜெகதலஜெகசோதி நாகரத்தினம்

சந்தை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகம் கொண்ட திருமதி ஜெகதல ஜெகசோதி நாகரத்தினம் நேற்றுமுன்தினம் (29.04. 2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-அழகரத்தினம் தம்தபதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவகுரு நாகரத்தினத்தின் (புகையிரத பிரதம பாதுகாவலர்) அன்பு மனைவியும், ஜெகத்குருதாஸ்(மருந்தாளர், கார்கில்ஸ்), Dr. விமலகாந்தன்(DMO, புங்குடுதீவு), ஜெகன்மோகனதாஸ்(இளைப்பாறிய படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), காலஞ்சென்ற திருமதி ஆனந்தகுமார் நாகநந்தினி ஆகியோரின் அன்புத் தாயும், சிவசரவணபவவின் சிறியதாயும், காலஞ்சென்ற புஸ்பவதி, உதயகுமாரி, சாந்தினி, காலஞ்சென்ற ஆனந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி ஹம்சா பார்த்தீபன், டிவ்யா, ஜெயப்பிரதா, கண்ணன், தனுஷன், திலக் ஷன், யுதர்ஷன், காலஞ்சென்ற கோவர்த்தனன்,யஸ்மிகா, மோகனப்பிரியா, ஜோன்சன், கீர்த்தனப்பிரியா, பிரியதர்சனா, மதிசுதன், யவனப்பிரியா ஆகியோரின் பேர்த்தியும், சுவஸ்திகன், வர்ஷா ஆகியோரின் பூட்டியும் , காலஞ் சென்ற வர்களான பத்மநாதன், சரஸ்வதி, ஜெகநாதபிள்ளை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று(30.04.2013) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி, உடுப்பிட்டி. தகவல்: குடும்பத்தினர்.

### கனகம்மா பொன்னன்



வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா பொன்னன் நேற்று 30.04.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னனின் அன்பு மனைவியும் கனகரத்தினம், ஞானேஸ்வரி, விக்கினேஸ்வரி (ஆசிரியை, யாழ். சென்பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் பசுபதி, தனபாக்கிலட்சுமி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற கோசலவதனி மற்றும் ரஜீவ்காந்தன், சிவஜனனி, கேமாவதி ஆகியோரின் அம்மம்மாவும் கலாராணி, கோணேஸ்வரன், தமிழ்மாறன், சுரேஸ்குமார்,உஷேந்திரன், உருத்திரன், நிசாந்து ஆகியோரின் அம்மம்மாவும் கார்த்திகேசு, சுப்பிரமணியம், பேரம்பலம், காலஞ்சென்ற நாகம்மா, அன்னம்மா மற்றும் திலகவதி ஆகியோரின் மூத்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01.05.2013 பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்லுண்டாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
3ஆம் வட்டாரம். (36942) (23-16) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### புதுக்குடியிருப்பு பிரதேச சபையில்
# ஆளணி வசதியின்மையால் பொதுச் சேவைகள் பாதிப்பு

புதுக்குடியிருப்பு, மே.1
புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் போதிய ஆளணி வசதிகள் இல்லாததால் பணிகளை சீரான முறையில் மேற்கொள்ள முடியாதுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.
இதன் காரணமாக புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் கிராம சேவகர் பிரிவிலுள்ள 225 குடும்பங்களுக்கு கிரமமாக குடி தண்ணீர் விநியோகம் இடம் பெறுவதில்லை எனவும் இதனால் இந்தப் பகுதி மக்கள் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக பிரதேச சபைச் செயலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது,
பிரதேச சபையின் பயன்பாட்டுக்கு என போதிய வாகன வசதிகள் இருக்கின்றன. ஆனால் அவற்றை இயக்குவதற்கு ஒரு சாரதியே கடமையாற்றி வருகின்றார். இவர் ஒருவரைக் கொண்டே புதுக்குடியிருப்பு மேற்கு, ஆனந்தபுரம் பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதுடன் கழிவகற்றும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.
இதனால் ஆனந்தபுரத்திற்கும் புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதிக்கும் குடிதண்ணீர் விநியோகம் ஒன்று விட்ட ஒரு நாள் என்ற அடிப்படையில் இடம் பெற்று வருகின்றது.
இதேவேளை போதிய சுகாதாரத் தொழிலாளர்கள் இல்லாத காரணத்தால் சந்தைக் கழிவுகள் உட்பட இந்தப் பிரதேசத்தில் சேரும் கழிவுகளை அகற்ற முடியாது பெரும் இடர்களை எதிர் நோக்கி வருகின்றோம் -என்றார். (ஐ-400)

## புத்தாண்டு விளையாட்டு விழா



துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் புத்தாண்டு விளையாட்டு விழா இடம்பெற்றுள்ளது. மல்லாவிப் பொலிஸார், பொது மக்கள், வணிக மன்றத்தினர் ஆகியோர் இந்த விளையாட்டு விழாவினை நடத்தினர். கடந்த 12ஆம் திகதி காலை 6 மணியளவில் விளையாட்டு குழுத் தலைவர் நடேஸ்வரன் தலைமையில் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. உருத்திரபுரீஸ்வரக் குருக்களின் ஆசியைத் தொடர்ந்து நீண்ட தூர சைக்கிள் ஓட்டப் போட்டியை மல்லாவி பொலிஸ் அதிகாரி ஐ.பி.விஜேசிங்க ஆரம்பித்து வைத்தார். விளையாட்டு வீரர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (க-415)

## போட்டிகளுக்கு விண்ணப்பம்

'வரோட்' வருடாந்த விளையாட்டு, கண்காட்சி, கலை மற்றும் இலக்கிய விழாக்களை மே மாதத்தில் நடத்தத் தீர்மானித்துள்ளதாக அதன் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.
இதற்கென திறமைகளை வெளிக்கொணரும் நோக்கோடு மாற்றாற்றல் படைத்தோரின் ஒன்று கூடலை நடத்துவதற்கும் 'வரோட்' நிறுவனம் தீர்மானித்துள்ளது.
இந்த நிகழ்வுகளில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் பங்கேற்க முடியும் எனவும் இந்தப் போட்டிகள் தொடர்பான பதிவுகளை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் 'வரோட்' நிறுவனத்தில் பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது.
கட்டுரை, சித்திரம், சிறுகதை ஆகிய ஆக்கங்களை தபால் மூலமாக அனுப்பி வைக்குமாறும் ஆக்கங்கள் பாடசாலை அதிபர் அல்லது பங்குத்தந்தை மூலம் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட வேண்டும் எனவும் 'வரோட்' நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-420)

## வவுனியாவில் மே தினம்

வவுனியா,மே.1
வவுனியாவில் உழைக்கும் வர்க்கத்தினரின் ஏற்பாட்டில் மேதின ஊர்வலம் நடைபெறவுள்ளது.
வவுனியாவில் உள்ள எந்தக் கட்சியையும் சேராத தொழில் சங்கங்கள், தொழில் அமைப்புக்கள், தொழிலாளர்கள் இணைந்து இன்று தமது பேரணிகளை நடத்தவுள்ளனர். பிரச்சினைகளை தாமே வெளிக்கொண்டு வரும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுக் கூட்டத்தையும் நடத்தத் தீர்மானித் துள்ளனர்.
உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களை இந்த மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.
(ஐ- 402)

### முல்லையில் கஷ்ட, அதிகஷ்ட பாடசாலைகளின்
# ஆசிரியர்களுக்கான விசேட படிகளை வழங்குவதில் கல்வி வலயம் தாமதம்

புதுக்குடியிருப்பு, மே.1
முல்லைத்தீவு கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேசப் படிகளை வழங்குவதற்கு வடமாகாண சபை அனுமதி வழங்கியுள்ளபோதும் இது வரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளை தெரிவித்துள்ளது.
முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள 14 பாடசாலைகள் இந்தக் கொடுப்பனவுக்காகத் தெரிவு செய்யப்பட்டு, அதன் பட்டியல் வடமாகாண சபையால் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இதில் புதுக்குடியிருப்பு சிவநகர் தமிழ் வித்தியாலயம், மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளாகவும்-
கொக்குத் தொடுவாய் அ.த.க. பாடசாலை, கருனாட்டுக்கேணி அ.த.க. பாடசாலை, ஆறுமுத்தான் குளம் அ.த.க. பாடசாலை, கேப்பாபிலவு அ.த.க. பாடசாலை, முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க. பாடசாலை, முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தரப் பாடசாலை, வலைஞர்மடம் அ.த.க. பாடசாலை, அம்பலவன் பொக்கணை மாகாவித்தியாலயம், மாத்தளன் றோ.க. வித்தியாலயம், வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம், ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை ஆகிய 12 பாடசாலைகள் அதி கஷ்டப்பிரதேச பாடசாலைகள் எனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
இந்தப் பட்டியல் வடமாகாண சபையால் முல்லை வலயத்துக்கு அனுப்பப்பட்டு நான்கு மாதங்கள் கடந்துள்ளன. எனினும் இன்று வரை கொடுப்பனவுகளை வழங்க முல்லைத்தீவு கல்வி வலயம் நடவடிக்கைகள் எடுக்கவில்லை.
இந்தக் கொடுப்பனவுகளை துரிதமாக வழங்குமாறும் மீளக்குடியமர்வின் பின்னர் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதிக்கு ஏற்ப நிலுவையுடன் கொடுப்பனவுகளை வழங்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முல்லை மாவட்டத் தலைவர் எஸ். புலேந்திரராசா கேட்டுள்ளார். (ஐ-400)

## சிரமதானம்



கிளிநொச்சி,மே.1
கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட முரசுமோட்டை அ.த.க.பாடசாலை வளாகத்தில் முரசுமோட்டைப் பகுதி மக்களும் இராணுவத்தினரும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.
கடந்த வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை இந்தப் பணிகள் நடைபெற்றன. (ஒ-6)

## பொன்னகருக்கு குடிதண்ணீர் விநியோகிக்குக!



கிளிநொச்சி,மே.1
கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் தற்போது குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் தமக்கு குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
பொன்னகர் பகுதியில் தற்போது சுமார் 300 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்குள்ள ஏராளமான குடும்பங்கள் தமக்கான குடிதண்ணீரை வேறு தூர இடங்களுக்குச் சென்றே பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.
கடந்த வறட்சிக் காலங்களில் கரைச்சிப் பிரதேச சபையினால் இந்தப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் மழை காலம் தொடங்கியதும் விநியோகம் நிறுத்தப் பட்டது. தற்போது வறட்சி ஏற்பட்டுள்ளதால் மீண்டும் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனைக் கருத்திற் கொண்டு தண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-6)

# வன்னி மாணவர்களின் கல்வியில் வடமாகாண கல்வி அமைச்சு பாரபட்சம்
## இலங்கை ஆசிரியர் சங்கம் அதிருப்தி

வன்னி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் உயர் அதிகாரிகள் அக்கறை இன்றிச் செயற்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.
இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்ததாவது:-
வடமாகாணத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு, வவுனியா வடக்கு ஆகிய வலயங்களில் ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. ஆனால் தற்போது வழங்கப்பட்டுள்ள கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரிகள் நியமனத்தின் போது இந்த மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணத்தில் ஆசிரிய வளம் மேலதிகமாக இருப்ப



தாகத் தெரிவிக்கப்படுகின்ற சூழ்நிலையில் அங்கேயே ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட பலருக்கு கொழும்புப் பகுதிகளுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.
இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு வன்னி மாணவர்கள் மீதுள்ள அக்கறை வடமாகாண கல்வி அமைச்சில் உள்ளவர்களுக்கு இல்லை.
எனவே வன்னி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் வடமாகாண கல்வி அமைச்சு கூடுதல் கவனம் எடுத்து அங்கு நிலவுகின்ற ஆசிரிய வளப் பற்றாக்குறைகளை புதிய ஆளணியினரைக் கொண்டு நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ஐ-400)

# இரணைமடுக்குள புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி,மே.1
கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இரணைமடுக்குளம் கடந்த 1902 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கட்டப்பட்டுள்ளதுடன் 34 அடி நீரைச் சேமிக்கும் பெரிய குளமாகவும் காணப்பட்டது. கடந்த பல ஆண்டுகளாக புனரமைக்கப் படாததால் இதன் கட்டுமாணங்கள் சிதைவடைந்து காணப்பட்டதுடன் அதிகளவான நீரைச் சேமிக்க முடியாத நிலையும் காணப்பட்டது.
இந்தக் குளத்தின் கீழ் உள்ள சுமார் 21 ஆயிரம் ஏக்கர் வரையான வயல் நிலங்களின் நீர்ப்பாசனக் கால்வாய்கள், கழிவு வாய்க்கால்கள் என்பனவும் சேதமடைந்து காணப் படுகின்றன.
33 அடி 13 அங்குல நீர் இங்கு தேக்கிவைக்கப்பட்டுள்ளதுடன் 8 ஆயிரத்து 500 ஏக்கர் சிறுபோக செய்கையும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.
இந்தக் குளத்தின் புனரமைப் புப் பணிகளுக்காக ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 12.398 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் குளத்தை புனரமைக்கும் அதேவேளை குளத்தின் நீர் கொள்ளள [illegible] இரணைமடுக் குளத்தின் நீர் விநியோக வாய்க்கால்கள் கழிவு வாய்க்கால்கள் என்பவற்றைப் புனரமைக்கவென 'இபாட்' நிறுவனத்தால் 29.33 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஏ-9 வீதிக்கு மேற்குப் புறமாக உள்ள பகுதிகளில் [illegible] நடைபெற்று வருகின்றன என்று கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் சி.விகிர்தன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி உருத்திரபுரம், கணேசபுரம், சிவநகர், பெரியபரந்தன் போன்ற ஏ-9 வீதிக்கு மேற்குப் புறமாக உள்ள பகுதிகளில் இந்தப் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள பூநகரி, பரந்தன் வீதியில் உள்ள நீலன் ஆறு எனப் படும் கழிவு வாய்க்காலின் புனரமைப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வரும் அதே வேளை நீர்ப்பாசன வாய்க் கால்களின் புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
இவ்வாண்டில் ஆரம்பிக்கப் பட்டுள்ள இரணைமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுடன் நிறைவு பெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
(ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1889 ஆம் ஆண்டு பெலிஸ் நகரில் இடம்பெற்ற இரண்டாவது சர்வதேச தொழிலாளர் காங்கிரஸ் கூட்டத்தில் மே முதலாம் திகதி தொழிலாளர் தினமாக உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

# தொழிலாளர் உரிமைகள் பெற்ற மே தினம்

பி.ஏ.அந்தோனிமார்க்



உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தினர் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் சர்வதேச தினமே இந்த மே தினமாகும். முதலாளி வர்க்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டதன் மூலமாக தமது உரிமைகளை வென்றெடுக்கவும், ஒற்றுமையை உலகறியச்செய்யவும் இந்த மே தினம் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருவது ஒரு சிறப்பம்சமாகும். உண்மையைக் கூறுவோமாக இருந்தால் உலகம் இன்று பாட்டாளி மக்களின் இரத்தம், வியர்வை, உடல் உபாதைகள் மூலமான பங்களிப்பின் காரணமாக இயங்கிக் கொண்டிருக்கிறது எனக் கூறலாம். ஒரு காலத்தில் தொழிலாளர்கள் முதலாளிமாருக்குப் பயந்து ஒரு நாளில் 12 தொடக்கம் 14 மணித்தியாலங்கள் வேலை செய்தார்கள். அளவுக்கு அதிகமாக வேலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆனால் கிடைக்கின்ற சம்பளமோ மிகவும் குறைவாக இருந்தது. வேறு சலுகைகள் எதுவும் வழங்கப்படவில்லை. தொழிலாளர்கள் அடிமைகளைப் போன்று கேவலமான வகையில் நடத்தப்பட்டார்கள். ஈவிரக்கமற்ற முதலாளிமார் தொழிலாளரை வதைத்து அதன் மூலமாகத் தாம் அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நிலையில் இயங்கினார்கள். எதிர்த்துப் பேசுவதற்கு எவருக்கும் துணிவு இருக்கவில்லை. தொடர்ந்து நசுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தினர் இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இவர்களில் சிலர் ஒன்று கூடிப் போராட்டம் நடத்த வேண்டுமென்ற முடிவுக்கும் வந்தார்கள்.

ஆனால் இதன்போது முதலாளிமாருடன் அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் இணைந்து தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராகச் செயற்பட்டார்கள். 1833 ஆம், 1844 ஆம், 1847 ஆம் ஆண்டுகளில் தொழிலாளர்கள் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

ஐக்கிய அமெரிக்காவில் 1794 இல் நிலையான தொழிலாளர் அமைப்புக்கள் தோன்றின. 1827 இல் தொழிலாளர் கூட்டுக்குழு உருவாகியது. அத்துடன் அவர்களின் போராட்டத்தின் விளைவாக 1832 இல் தொழிலாளர் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

1834 இல் பிரித்தானியாவில் நாடு தழுவிய தொழிலாளர் ஐக்கியம் ஏற்பட்டது. 1871 இல் தொழிலாளர்களின் தொடர்ச்சியான போராட்டம் காரணமாகத் தொழில் சட்டங்கள்(Labour Laws) கொண்டுவரப்பட்டன. இவ்வாறான பல போராட்டங்களைத் தொடர்ந்து 1886 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி அமெரிக்க நாட்டில் உள்ள சிக்காக்கோ மாநிலத்தில் ஆரம்பித்த மாபெரும் போராட்டம் வேலை நிறுத்தமாக உருவெடுத்தது. தொடர்ச்சியாக இடம்பெற்ற 4 நாள் வேலை நிறுத்தத்தினால் பயந்துபோன முதலாளிமார்கள் அந்த நாட்டு அரசின் செல்வாக்குடன் காவல்துறையின் உதவியை நாடினார்கள்.

இந்தப் போராட்டத்தில் பல தொழிலாளர்கள் இறந்ததுடன் பலர் காயமும் அடைந்தனர். அதே வேளை காவல்துறையினர் 7 பேர் இறந்தார்கள். இதன் காரணமாக நீதிமன்றத்தின் மூலமாக நான்கு பேருக்கு தூக்குத் தண்டனையும், மூன்று பேருக்கு ஆயுள் தண்டனையும் , ஒருவருக்கு 15 வருட கால சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டன. 1887 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி மேற்குறிப்பிட்ட 4 பேரும் தூக்கிலிடப்பட்டார்கள். சர்வதேச மட்டத்தில் நடைபெற்ற இவ்வாறான போராட்டங்கள் காரணமாக 8 மணித்தியாலம் மட்டும் வேலை என்னும் சட்டம் நடைமுறைக்கு வந்தது. அதன் பின்பும் தொழிலாளர்கள் தமது உரிமைகளை வாதாடிப் பெற்றனர்.

இதனால் கிழமையில் ஒருநாள் ஓய்வு நாளாக்கப்பட்டது. இந்த நிலையில் 1889 ஆம் ஆண்டு பெலிஸ் நகரில் இடம்பெற்ற இரண்டாவது சர்வதேச தொழிலாளர் காங்கிரஸ் கூட்டத்தில் மே முதலாம் திகதி தொழிலாளர் தினமாக உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இன்றைய இந்த மேதினம் 124 ஆவது மேதினமாகும். நமது இலங்கை நாட்டில் முதலாவது மேதினம் 1956 ஆம் ஆண்டு [illegible] இலங்கையில் [illegible] கொண்டாடப்பட்டது. அத்துடன் 1956 ஆம் ஆண்டுதான் இந்த மேதினம் ஒரு விடுமுறை தினமாக அங்கீகரிக்கப்பட்டது.

உலகமே பெரும் திரவியம் என வியக்கும் வாசனைத் திரவியங்களும், கொக்கோவும், கோப்பியும், தேயிலையும் விளையும் நிலமான மலையகத்து மக்களின் வாழ்வு இன்னமும் லயன்களுக்குள் முடங்கிய படியே உள்ளது.

65 ஆண்டுகளாக தமிழ் பேசும் மக்கள் தமது சகல உரிமைகளுக்குமாகப் போராடி வருகிறார்கள். இந்த மே தினத்திலாவது இவர்களின் உரிமைகளை ஐ.நா.சபையும் உலக நாடுகளும் பெற்றுக்கொடுக்குமா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான தொழிலாளர்களை உருவாக்குவோம்



இன்று மே மாதம் முதலாம் நாள் தொழிலாளர் தினம். இதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

க.நாகேந்திரன்
தொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்

ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைவது உழைக்கும் வர்க்கமாகும். எமது நாட்டில் சுமார் 8.2 மில்லியன் தொழிலாளர்கள் உள்ளனர்.

இவர்கள் அரச துறை, தனியார்துறை என இரு துறைகளில் பணி புரிகின்றனர். தனியார் துறை சார்ந்த உழைப்பாளர்களில் விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களில் ஈடுபடுவோர் பெரும்பாலும் தமது தொழிலை சுய தொழிலாகவே மேற்கொள்கின்றனர். இவர்கள் தவிர தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோர் தொடர்பாகவே இங்கு அதிகம் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. காரணம் இவர்களிடையே காணப்படுகின்ற தொழில் தருநர்- தொழில் புரிவோர் உறவு முறையாகும்.

எனவேதான் இவர்களது தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம், சேமநலம் மற்றும் சமூகப் பாதுகாப்பு, பதவி உயர்வு, சலுகைகள் போன்றவை பிறரில் தங்கியுள்ளதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

இந்த தொழில்தருநர்-தொழில் புரிவோர் உறவு மேம்படுவதற்காக ஒரு பெரிய பணியை உலகெங்கும் உள்ள அரச துறையினர் மேற்கொள்கின்றனர்.

அந்தவகையில் இலங்கை அரசின் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களம் இந்தப் பெரும் பணியை செவ்வனே ஆற்றுகின்றது.

குறிப்பாக தொழிற்சாலைகளில் ஊழியரின் பாதுகாப்பு, சுகாதாரம், சேமநலம் என்பவற்றை உறுதிப்படுத்துவதோடு, தொழிற்சாலைகளில் விபத்துக்கள், ஆபத்துக்கள் அற்ற ஆரோக்கியமான தொழிலாளர் வர்க்கத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் பாதுகாப்பு பிரிவு செயற்படுகின்றது.

எமது நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரே இங்கு தொழிலாளரின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதாவது 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் தொழிலாளரின் பாதுகாப்பு தொடர்பான அனைத்து விதிமுறைகளையும் கொண்டுள்ளது.

### தொழிற்சாலைகள் குறித்த வரையறை

தொழிற்சாலைகள் என்னும் வரையறைக்குள் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி அரிசி ஆலை, அரைக்கும் ஆலை, மர அரிவு ஆலை, தச்சுத் தொழிலகம், கல்லுடைக்கும் ஆலை, இரும்புத் தொழிலகம், தும்புத் தொழிற்சாலை, வாகனத் திருத்தகம், வாகன சுத்திகரிப்பு நிலையம், ரயர் திருத்தகம், பொறியியல் வேலைத்தளம், வெல்டிங் வேலைத்தளம், வார்ப்பகம், செங்கட்டி, ஓடு உற்பத்தி செய்யும் வேலைத்தளம், கட்டட நிர்மாணத் தளம் (6 மாடிகளுக்கு மேற்பட்ட [illegible] பந்த காலமுனை [illegible]), துறைமுகம், கண்ணாடியிழைப்பாகு நிர்மாணிக்கும் வேலைத்தளம், பிளாஸ்ரிக் ஓட்டும் வேலைத்தளம், அலுமினியம் பொருத்தும் வேலைத்தளம், பனிக்கட்டித் தொழிற்சாலை, மின்சார சபை, மின்சார உபகரணத் திருத்தகமும் மீள் சுற்றும் நிலையமும், வானொலி, தொலைக்காட்சி, கணினித் திருத்தகம், மணிக்கூடு திருத்தகம், மின்முலாமிடும் வேலைத்தளம், மின்கலம் மின்னேற்றும் வேலைத்தளம், மின்நிலையம், புடைவை அச்சிடும் நிலையம், பதிப்பகம், வெதுப்பகம், உணவு தயாரிக்கும் நிலையம், நகைத் தொழிலகம், [illegible], தொலைத்தொடர்பு மத்திய நிலையங்கள் போன்ற அனைத்து ஆலைகளும் உள்ளடக்கப்படுகின்றன.

### தொழிலாளர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஏற்பாடுகள்

சுழலும் இயந்திரத்தின் பகுதிகள் காவலிடப்பட்டுள்ளதா?

நீராவிக் கொதிகலன்கள், நீராவி வாங்கிகள், காற்று வாங்கிகள், வாயு வாங்கிகள், வாயுக் கொள்கலன்கள், பாரம் உயர்த்திகளும் தூக்கிகளும், சங்கிலிகள், வடங்கள் மற்றும் பிற தூக்கும் பொறிகளும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டுள்ளதா?

பாதுகாப்பான மின் இணைப்பு காணப்படுகின்றதா? ஊழியருக்குப் பொருத்தமான தனிநபர் பாதுகாப்பு கவசங்கள் (Personal protective Equipment) வழங்கப்பட்டுள்ளதா?

தொழிற்சாலையில் [illegible] காடியில், அதிக வெப்பமான அல்லது அதிக குளிர்ந்த சூழலில், அளவுக்கு அதிகமான இரைச்சலில், மங்கலான அல்லது அதிப்பிரகாசமான ஒளியில், போதிய காற்றோட்டம் அற்ற சூழலில் புகை, தூசி ஏதேனும் கதிர்வீச்சு, அதிர்வு உள்ள இடத்தில் வேலையில் ஈடுபடுகின்றாரா?

ஊழியருக்குப் போதிய இடவசதியின்மை (over crowd) காணப்படுகின்றதா?

தீ விபத்துக்களைத் தவிர்க்க பொருத்தமான தீ அணை கருவி, தீ அணைப்பு வசதி காணப்படுகின்றதா?

தீ விபத்துக்களைத் தவிர்க்க பொருத்தமான வெளிச்செல்லும் வசதி காணப்படுகின்றதா?

தொழிற்சாலையின் சுத்தம் பேணப்படுகின்றதா?

ஊழியருக்குப் போதிய குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளதா?

மலசலகூட வசதி காணப்படுகின்றதா?

முதலுதவிப்பெட்டி வசதி காணப்படுகின்றதா?

தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளரின் பரிசோதனை அவதானிப்புக்களை குறித்துக்கொள்ள பொதுப்பதிவேடு ஒன்று பேணப்படுகின்றதா? என்பனை குறித்து தொழிற் திணைக்களத்தின் கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு கவனம் செலுத்தி பரிசோதனைகளையும் மேற்கொள்கிறது. இவற்றுடன் தொழிற்சாலைகள் யாவும் மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3 (அ) இல் குறிப்பிட்டுள்ளபடி இந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி தொழிற்சாலைகள் தொடர்பில் உள்ளூர் அதிகார சபை எதுவும் உரிமங்களை வழங்குதலாகாது.

தொழிற்சாலை ஒன்றில் ஏதேனும் விபத்து ஏற்படுமிடத்து அது பற்றி உடனடியாகத் தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகத்துக்கு (படிவம் 10 இல்) அறிவிக்கப்படல் வேண்டும்.

விபத்துக்கள், முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாகப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் விபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக உரிய ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்குவதனால் தொழில்சார் விபத்துகள், நோய்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

யாழ்.மாவட்டத்தில் 589 தொழிற்சாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 33 தொழிற்சாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 20 தொழிற்சாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 39 தொழிற்சாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 17 தொழிற்சாலைகளும், தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளில் ஊழியரின் பாதுகாப்பு, சுகாதாரம், சேமநலம் என்பவற்றை உறுதிப்படுத்துவதோடு தொழிற்சாலைகளில் விபத்துக்கள், ஆபத்துக்கள் அற்ற ஆரோக்கியமான தொழிலாளர் வர்க்கத்தை உருவாக்குவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து அரச துறையினரும், தனியார் தொழில் துறையினரும் தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் பாதுகாப்பு பிரிவுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில அபகரிப்பைத் தடுக்க இணைந்து போராடுவோம்

## அம்பாறையில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மாவை அழைப்பு



அம்பாறை,மே1

அம்பாறை மாவட்டத்தில் இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து செயற்பட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலர் மாவை சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்ட விசேட கூட்டம் காரைதீவு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் உக்கிரமடைந்துள்ள நில அபகரிப்பைப் போன்று அம்பாறை மாவட்டத்திலும் இராணுவத்தினர் நில அபகரிப்புக்களை முன்னெடுத்து வருகின்றனர்.

நம் மக்கள் வாழ்ந்த, வாழ வேண்டிய நிலங்கள், விவசாயக் காணிகளை அம்பாறை மாவட்டத்திலும் இராணுவமும், பாதுகாப்புத் தரப்பும் கண் மூடித்தனமாக அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன.

இங்கு தமிழ் மக்களது காணிகள் மட்டுமன்றி பொத்துவில் போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களின் காணிகள், விவசாய நிலங்களும் இராணுவம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரால் அத்துமீறி அபகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்தவிடயம் குறித்து அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலுமுள்ள முஸ்லிம் மக்கள் எமது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதுடன் நேரிலும் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்த இடம், வாழ வேண்டிய இடத்தை, அவர்களது விவசாய நிலங்களை மீட்டெடுப்பதுடன், அத்துமீறி இடம்பெறும் அபகரிப்பு நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

எனவே இதற்கான முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம்கள் இணைந்த கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டும்.

இந்தக் கட்டமைப்பு அபகரிக்கப்பட்ட காணிகளை, விவசாய நிலங்களை மீட்டெடுத்து மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கவும், அதற்காகச் சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுக்கவும் அவசியமாகும், என்றார். (ச-30)

## கல்முனை பஸ் நிலையத்தில் அறிவித்தல் பலகையில்லை

### பயணிகள் அசௌகரியம்



கிழக்கில் முக்கிய நகரமொன்றான கல்முனையிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் நிலையத்தில் பயணிகள் பெரும் அசௌகரியங்களையும், சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

கிழக்கின் முக வெற்றிலையென வர்ணிக்கப்படும் வர்த்தக நகரமான கல்முனை நகருக்குத் தினமும் பெருந்தொகையான உள்ளூர், வெளியூர் பயணிகள் வந்து சென்ற வண்ணமுள்ளனர்.

இந்த நிலையில் இங்குள்ள போக்குவரத்துச் சபை பஸ் நிலையம் புதிய கட்டடமொன்றில் இயங்குகின்ற போதிலும், பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த பஸ் நிலையத்திலிருந்து இடம்பெறும் பஸ் சேவைகள் தொடர்பாகப் பயணிகள் அறிந்து கொள்ளும் வகையிலான நேர அறிவித்தல் பலகைகள் எதுவும் அங்கு வைக்கப்படவில்லை.

இந்தப் பஸ் நிலையத்திலிருந்து இடம்பெறும் தூர சேவை பஸ்கள் தொடர்பான அறிவித்தல் பலகைகள் கூட வைக்கப்படாமையால் பயணிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

பல நகரங்களிலுள்ள பஸ் நிலையங்களில் பஸ் சேவைகள் பற்றியும், சேவை ஆரம்பமாகும் நேரம் குறித்தும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுக்கப்படுகின்றன.

ஆனால் கல்முனை பஸ் நிலையத்தில் இத்தகைய ஒலிபெருக்கி அறிவித்தல் வசதிகூட செய்யப்படவில்லை என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ச-30)

## இரண்டு ஆண்டுகளுக்குள் 15 சீனி தொழிற்சாலைகள்

### லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவிப்பு



கொழும்பு, மே1

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் 15 சீனி உற்பத்தித் தொழிற்சாலைகள் புதிதாக நிறுவப்படும் என்று சீனி உற்பத்தித் தொழில் அபிவிருத்திகள் அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

மட்டக்களப்பு மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் தலா 10 ஆயிரம் ஹெக்ரேயர்கள் வீதம் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ஹெக்ரேயர் காணி தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், கரும்பு பயிரிடுவதற்கும் ஜனாதிபதியால் கையளிக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் நாட்டின் சீனித் தேவையை தன்னிறைவு அடையச் செய்து சீனி இறக்குமதி தொடர்பாக வெளிநாடுகளுக்குச் சென்றடையும் 55,000 கோடி ரூபாவை நாட்டுக்கு மீதப்படுத்திக் கொள்வதே எமது இலக்காகும்-என்றார்.(ச-22)

## சிறைச்சாலை திணைக்களத்துக்கு புதிதாக 1,500 பேர் இணைப்பு

கொழும்பு, மே1

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நிலவும் அனைத்து பதவி வெற்றிடங்களுக்கும் புதிதாக 1,500 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

**இதன் மூலம் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் தொகை 6,500 வரை உயர்வடையும்**

இந்தத் தொகையைச் சேர்த்துக் கொண்டதன் பின்னர் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் தொகை 6,500 வரை உயர்வடையும் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இந்தத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாளர் குழு தொடர்பான மீளாய்வு 1988 ஆம் ஆண்டின் பின்னர் தற்போது தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த ஆள்சேர்ப்பு தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து கிடைத்துள்ள அனுமதியை, ஊழியர் எண்ணிக்கைக் கணிப்பு ஆணைக்குழு மற்றும் அரச சேவைகள் ஆணைக் குழுவின் அனுமதிக்காக முன் வைப்பதற்கு சிறைச்சாலைகள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)


## 36 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

பூமியில் பிறந்தது 05 - 07 - 1950



விண்ணில் புகுந்தது 01 - 05 - 1977

அமரர் குமரையா தேவராஜன்

நினைவுகள் மாறவில்லை ஞாபகங்கள் ஒழிவதில்லை
உன் வழிவந்த பாசப்பறவைகளில்என்றும் நித்தியத்திற்கும்
நிரந்தரமாய் நீ வீற்றிருப்பாய் உன் நினைவுகளில் வாழும்

திருமதி தேவராஜன்

டின் தேவராஜன்-ஜெசி தேவராஜன்
சன்ரல் தேவராஜன்,
சஞ்சேஸ் தேவராஜன்,
சவ்ரோ தேவராஜன்.

சசி தேவராஜன்-நிருபா தேவராஜன்,
ராயன் தேவராஜன்,
ஜெய்ஸ்டன் தேவராஜன்,
அஸ்ரன் தேவராஜன்,
உற்றார்,உறவினர்.

28,றக்கா ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(36986)(5.6)


## பாவனைக்குகந்த பொருளை இறக்குமதி செய்யுங்கள்

### சுகாதார அமைச்சு உணவு இறக்குமதியாளர்களுக்கு அறிவுறுத்து



கொழும்பு, மே1

உணவுவகைகளை இறக்குமதி செய்யும்போது, மனிதப் பாவனைக்கு உகந்த உணவு வகைகளை மாத்திரம் இறக்கு மதி செய்வதற்கு கவனம் செலுத் துமாறு சுகாதார அமைச்சு உணவு இறக்குமதியாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

தமிழ்-சிங்களப் புத்தாண்டு காலத்தில் விற்பனைக்காக நாட்டுக்குத் தருவிக்கப்பட்டிருந்த கழிவுகளுடனான பெருந்தொகையான உணவுப் பொருள்கள், சுகாதார அமைச்சின் இறக்குமதி உணவுப் பொருள்களைப் பரி சீலிக்கும் பிரிவினால் கைப் பற்றப்பட்டன.

அதன் பின்னரே அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

முன்னணி வகிக்கும் நான்கு தனியார் நிறுவனங்களினால் இந்த உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யும் போது, தரநிர்ணயங்களுக்கு அமைவாக, மனிதப் பாவனைக்கு உகந்த பொருள்களை இறக்கு மதி செய்வதில் கவனம் செலுத் துமாறு சுகாதார அமைச்சு உணவு வகைகளை இறக் குமதி செய்யும் இறக்கு மதியாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான மனிதப் பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களைக் குறைந்த விலைகளில் தருவித்து அதிகரித்த லாபத்தை ஈட்டிக் கொள்ளும் நோக்கில் அவை இறக்குமதி செய்யப்பட்டன. மனிதப் பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களின் பாவனை காரணமாக பொதுமக்கள் பலதரப்பட்ட நோய்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே அவ்வாறான உணவுப் பொருள்களை நாட்டுக்குள் இறக்குமதி செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் சுற்றுச் சூழல் மற்றும் தொழில் சார் சுகாதார [illegible] பிரிவு வலியுறுத் தியுள்ளது. (ச-22)


## ஏழாம் ஆண்டு நினைவில்



மண்ணில் 24 02 1988

விண்ணில் 19 04 2006

அமரர் நவரத்தினம் பிரகாஸ்

(முன்னாள் கணிதப் பிரிவு மாணவன், மு/மல்லாவி மத்திய கல்லூரி)

திதி: 01.05.2013

இருபத்தைந்தாவது வயது நினைவில்
ஏழாண்டுகள் ஆனாலும் மீண்டும் நீ வரும் வரைக்கும்
அழிவதில்லை உன் நினைவு

வாகையடிச் சந்தி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

(36500)(2.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாள விதை வெங்காயத்தின் விலையில் பெரும் உயர்வு நிலை

## பருவம் தப்பிப் பெய்த மழையே காரணம்



வலி. வடக்கு, மே 1

யாழ். மாவட்டத்தில் கடந்த காலத்தில் பருவம் தப்பிப் பெய்த மழையால் வேதாள வெங்காய விதையின் விலை மிகவும் உயர்ந்து காணப்படுகின்றது.

குறிப்பாக வடமராட்சியில் வேதாள வெங்காயத்தில் மூழ் அழுகல் நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. வெள்ள அழிவு ஏற்பட்ட நிலையில் இந்த நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த நிலையில் விதை வெங்காயத்தை பெற்றுக் கொள்வதில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் 50 கிலோ வேதாள விதை வெங்காயம் தற்போது ஏழாயிரம் ரூபாவுக்கும் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேதாள விதை வெங்காயத்தின் விலை அதிகரிப்பு மற்றும் அதற்கான தட்டுப்பாடுகள் காரணமாக பல விவசாயிகள் வெங்காயச் செய்கையைக் கைவிடும் நிலைக்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அடுத்த வெங்காய அறுவடையின் போது வெங்காயத்தின் விலை மிகவும் உயர்ந்து காணப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக வலிகாமம், தீவகம் உட்பட்ட பகுதிகளில் வெங்காயச் செய்கையில் ஈடுபடுபவர்கள் இந்த முறை விதை வெங்காயத்தின் விலை அதிகரிப்புக் காரணமாக உற்பத்தியில் அதிகம் நாட்டம் காட்டவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-86)

## அளவெட்டி அருணோதயாவுக்கு புதிய மாடிக் கட்டடம்

வலி. வடக்கு, மே 1

அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்குப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தால் புதிய மாடிக் கட்டடம் அமைக்கும் பணி பூர்த்தி அடையும் நிலையை எட்டியுள்ளது.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவர்களின் கணினி அறிவை வளர்த்தெடுக்கும் முகமாக இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட செலவில் அமைக்கப்படும் இந்தக் கட்டடம் கணினி, நூலகம் மற்றும் கணினி கற்றல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## மதுப்பிரியர்களால் அசௌகரியம்

பருத்தித்துறை, மே 1

பருத்தித்துறை சிவன்கோயிலுக்கு அருகில் உள்ள மதுபானம் விற்பனை நிலையத்தில் மது அருந்துபவர்களால் பொதுமக்கள் பெரும் அசௌரியங்களை எதிர்கொண்டு வருகின்றர்.

மதுப்பிரியர்கள் குறிப்பாக மாலை வேளைகளில் தமது அட்டகாசத்தை மேற்கொள்வதால் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று திரும்பும் பெண் மாணவிகள் பலர் பாதிப்புக்குள்ளாவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். பருத்தித்துறை நகர் பகுதிக்கு அண்மையில்பொலிஸ் நிலையம் உள்ளபோதும் இவர்களின் அட்டகாசம் தாங்க முடியவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு உரியவர்களிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-422)

## சிறுமியுடன் தகாத முறையில் நடக்க முயன்றவர் நையப்புடைப்பு

வலி. வடக்கு, ஏப் 29

சுன்னாகம் சந்தைப் பகுதியில் சிறுமியுடன் தகாத முறையில் நடக்க முற்பட்ட முதியவர் ஒருவர் சந்தை வியாபாரிகளிடம் வகையாக மாட்டிக் கொண்டு வாங்கிக்கட்டினார்.

இந்தச் சம்பவம் சுன்னாகம் நவீன சந்தைப் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

சுமார் 11 வயது மதிக்கத் தக்க சிறுமியுடன் தகாத முறையில் நடக்க முற்பட்டதை அவதானித்த வர்த்தகர்கள் முதியவரை நையப்புடைத்ததுடன் அங்கிருந்து விரட்டியுள்ளனர். (ம-86)

## சங்கானை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதில் நோயாளர் நெருக்கடி

வலி. வடக்கு, மே 1

சங்கானை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போதிய எண்ணிக்கையில் வைத்தியர்கள் இன்மையே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இங்கு ஓரேயொரு வைத்தியர் மட்டுமே கடைமையில் உள்ள நிலையில் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நோயாளர்களின் வருகை அதிகரிப்பால் குறித்த வைத்தியரும் பல்வேறு நேருக்கடிகளுக்கு ஆளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நெருக்கடி நிலைகளைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று நோயாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-86)

## சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் சங்கத்தை இரண்டாகப் பிரிப்பது தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 1

சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தை இரு கூறுகளாகப் பிரிப்பது தொடர்பில் வட மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் 28 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது.

இந்தச் சங்கத்தால் அந்தப் பிரதேசம் முழுவதுக்குமான சேவையை முழுமையாக வழங்க முடியாது என்று முன்னாள் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் சி.மகேந்திரன் வடமாகாண கூட்டுறவு ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

இதனை அடுத்தே வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தை பண்டத்தரிப்பு சங்க எல்லைப் பிரிவுக்கு ஒன்றாகவும் மானிப்பாய் சங்க எல்லைப் பிரிவுக்கு ஒன்றாகவும் என இரு பிரிவுகளாக்குவதற்கு வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் குறித்து வலி. தென் மேற்குப் பிரதேச செயலாளர் க.முரளிதரனின் கவனத்துக்கும் முன்னாள் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் சி.மகேந்திரன் கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-41)

## பெற்றோர் நினைவாக தபாலத்துக்கு கட்டடம் அமைப்பு

யாழ்ப்பாணம், மே 1

கோண்டாவில் உப அஞ்சல் அலுவலகத்துக்கெனத் தனியான கட்டடம் ஒன்றை நலன்விரும்பி ஒருவர் தனது தந்தை தாயின் நினைவாக அமைத்துத் தபாலகத்துக்கென அன்பளிப்பு செய்துள்ளார் என்று மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.புஸ்பநாதன் தெரிவித்தார்.

பிரபல தொழில் அதிபரான இ.குவேந்திரநாதன் என்பவரே இந்தக் கட்டடத்தை தபாலகத்துக்கென அமைத்து வழங்கியுள்ளார்.

கோண்டாவில் உப அஞ்சல் அலுவலகத்துக்கென கையளிக்கப்பட்ட இந்தக் கட்டடம் வைபவரீதியாக கடந்த சித்திரை பௌர்ணமி தினத்தன்று சுபவேளையில் திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் எஸ்.இரட்ணசிங்கம் இந்த உப அஞ்சல் அலுவலக கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தபாலக உயரதிகாரிகள் மற்றும் நலன் விரும்பிகள் போன்றோர் கலந்து கொண்டனர். (ம-17)



அரச சேவையில் 35 வருடங்கள் பணியாற்றி இளைப்பாறிச் செல்லும் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் க.பத்திநிகொரணிக்கு சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச மக்கள் இணைந்து மணிவிழா நிகழ்வை சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் நடத்தினர். சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாண பொது நிர்வாக செயலக பிரதிப் பிரதம செயலாளர் செல்வி ஆர்.எஸ்.துரைராஜா, ஓய்வுநிலை மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், பிரதேச செயலாளர்கள், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன், நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பச்சிலைப்பள்ளி வாழ் மக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். ஆசியுரையை சிவஸ்ரீ சபா வாகதேவக் குருக்கள், சிவஸ்ரீ க.திருமானந்தக் குருக்கள் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ம-9)

## கட்டுரை ஆக்கத்தில் மாகாண மட்டத்தில் முதலிடம்

வலி. வடக்கு, மே 1

அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த தேவதாசன் உமையாள் மகாண மட்டத்தில் இடம் பெற்ற தமிழ் தினப்போட்டியில் கட்டுரை ஆக்கம் பிரிவு நான்கில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் 2013 ஆம் ஆண்டில் இடம் பெற்ற கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் மாகாண மட்டங்களில் முதலாம் இடங்களை கட்டுரையாக்கத்தில் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2011 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் இடம் பெற்ற கட்டுரையாக்கத்தில் தங்கப் பதக்கம் பெற்றதுடன் 2012 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் இடம் பெற்ற குறு நாடக ஆக்கப் போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-86)

## பொதுமக்களையும் முன்னாள் போராளிகளையும் ஏமாற்றி மோசடி செய்த நபர் அகப்பட்டார்



வலி. வடக்கு, மே 1

பொது மக்களையும் முன்னாள் போராளிகளையும் ஏமாற்றி பணமோசடி செய்து வந்ததாகக் கூறப்படும் நபர் ஒருவர் பாதிக்கப்பட்டவர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பொது மக்களையும் மற்றும் முன்னாள் புலிப் போராளிகளாக இருந்து புனர்வாழ்வு பெற்றவர்களையும் அணுகி வேலை பெற்றுத் தருவதாகவும் வாகனங்களை வட்டியில்லாக் கடனுக்குப் பெற்றுத் தருவதாகவும் கூறி மோசடி செய்துவந்த நபர் ஒருவரே இவ்வாறு பிடிக்கப்பட்டுள்ளார்.

தாவடிப் பகுதியில் இவ்வாறு பலரை ஏமாற்றிப் பணத்தைப் பெற்ற குறிப்பிட்ட நபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்த நிலையில் குறிப்பிட்ட நபர் யாழ்ப்பாணம் பகுதியில் நிற்பதைக் கண்ட பாதிக்கப்பட்ட இளைஞர்கள் குறிப்பிட்ட நபரைப் பிடித்துக் கிராம சேவகரிடம் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட நபர் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து கையடக்கத் தொலைபேசிகளின் பல சிம் அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். திட்டமிடாத செலவுகளைப் போராடிச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு இருக்கும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**இடபர்:** புதிய நட்பு மலரும். பணப் புழக்கம் கணிசமாக உயரும். நம்பிக்கைக் குரியவர்கள் சிலர் கைக்கொடுத்து உதவுவார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் நிதானமாகச் செயற்படுங்கள்.

**மிதுனர்:** தன்னம்பிக்கை துளிர் விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர் கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. எதிர் காலத் திட்டங்களைப் பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**கடகர்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். அரச விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**சிங்கர்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

## நாளை

சித்திரை-19 வியாழக்கிழமை 02.05.2013
திதி: ஸப்தமி மு.ப. 10.22 வரை
நட்சத்திரம்: உத்தராடம் கா. 07.05 வரை
சுபநேரம்: 07.27- 08.57 வரை
இராகுகாலம்: 01.27- 02.57 வரை

**துலாபர்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். நண்பர்களின் வருகையுண்டு. வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.

**விருச்சிகர்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவு பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். திடீர் பயணங்கள் உண்டு. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகும். அநாவசியச் செலவுகளை தவிருங்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் முன்யோசனையுடன் செயற்படுங்கள்.

**மகரர்:** மனக்குழப்பங்கள் விலகித் தெளிவு பிறக்கும். உடன்பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**கும்பர்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்கிகளிலிருந்த தேக்க நிலை மாறும். தாயாரின் உடல் நிலை சீராக அமையும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**மீனர்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்ட நாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 8 | | | 5 | | 3 | |
| | 3 | 5 | | 7 | 1 | | 2 | |
| | | | | | 8 | 1 | | |
| | | | 5 | | | | 4 | |
| 4 | 2 | 1 | 8 | | | 9 | 5 | 7 |
| | 8 | | | | 9 | | | |
| | | 4 | 1 | | | | | |
| | 5 | | 7 | 8 | | 6 | 9 | |
| | 6 | | 9 | | | 4 | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 5 | 6 | 4 | 1 | 9 | 7 | 3 |
| 3 | 9 | 6 | 7 | 5 | 2 | 8 | 4 | 1 |
| 1 | 4 | 7 | 8 | 9 | 3 | 5 | 6 | 2 |
| 5 | 6 | 9 | 2 | 1 | 8 | 4 | 3 | 7 |
| 2 | 3 | 4 | 9 | 7 | 6 | 1 | 8 | 5 |
| 7 | 8 | 1 | 4 | 3 | 5 | 2 | 9 | 6 |
| 4 | 1 | 3 | 5 | 8 | 7 | 6 | 2 | 9 |
| 9 | 7 | 2 | 1 | 6 | 4 | 3 | 5 | 8 |
| 6 | 5 | 8 | 3 | 2 | 9 | 7 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**காணி விற்பனை**

வேப்பங்குளம், 6ஆம் ஒழுங்கை பட்டைகாடு. நான்கு பரப்பு உறுதிக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 241 5809

(26247)(6.11)

**காணி வீடு விற்பனைக்கு**

நல்லூர் நாவலர் வீதியில் நல்ல சுற்றாடலில் ஒரு பரப்பில் அமைந்த சுற்று மதில் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 433 9741, 077 949 8531, 077 684 8840

(35342)(6.7.11)

**புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு**

நியூ பேனாட், வகிறா, C.I.C கிறீன்வெலி, புசலாவ சமீர இறைச்சிக் கோழிக்குஞ்சு வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.

தொடர்பு: 077 595 9663
விநியோகத்தர்: மகாபார் ஹவுஸ்

(36320)(6.7.11)

**கடை வாடகைக்கு**

கிளிநொச்சி A9 சாலையில் அமைந்துள்ள 35 அடி அகலமும் 75 அடி நீளமும் உடைய முதலாம் மாடிக் கட்டடத்தொகுதி, பிரித்து அல்லது முழுமையாக வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:- 077 3500082

(26278)(6)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி
## துரைராஜா தேவகி

தோற்றம்
27.04.1942

மறைவு
30.04.2008

(முன்னாள் தொலைக்கல்விப் போதனாசிரியையும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயப் பிரதி அதிபரும்)





நீண்டகாலம் நோய் நொடியில்லாமல் வாழ்வாய்
என எண்ணிய எமக்குச் சிலமணி நேரத்தில்
சென்று வருகிறேன் என்றாய் அம்மா தாயே!
பாசத்தால் கட்டுண்ட நாம் கலங்குகின்றோம்
ஆண்டுகள் ஐந்துதான் சென்றாலும் அருகிருக்கிறாய்
தேவா தேவா எனப் பலரும் கூப்பிடுவது கேட்குதம்மா
நீ அணைத்து அணைத்து வளர்த்தாயே அம்மா
எத்தனைபேர் உன்னை மறந்தாலும்
உன் நாமம் உன் பண்பு உன் உபசரணை
அறிவூட்டிய திறமை அரவணைத்து ஆறுதல்
சொல்ல எத்தனை ஆயிரம்பேர் அம்மா
தாங்கள் வாழ்ந்த காலம் எம்மை அடிமைப்
படுத்திய காலம் அம்மா நினைக்கின்றோம்
உன் நாமம் நிலைக்குமம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புதுப்... யாழ்ப்பாணம்.

- பிரிவால் துயருறும்
கணவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று மேதின ஊர்வலங்கள்; கொழும்பில் கடும் பாதுகாப்பு

## தலைநகரில் ஆறு லட்சம் பேர் திரள்வர்



கொழும்பு,மே1
உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று புதன்கிழமை மே தின ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை மக்கள் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி உட்பட முக்கிய கட்சிகள், தொழிற் சங்கங்களின் ஊர்வலம், கூட்டங்கள் கொழும்பிலும், ஐக்கிய தேசியக் கட்சி குருநாகலிலும், இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி முறையே நுவரெலியா, தலவாக்கலை மற்றும் லிந்துலவிலும், தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியாவிலும் ஊர்வலம், கூட்டங்களை நடத்தவுள்ளன.

வழக்கம் போல் இந்த முறையும் கொழும்பில் முக்கிய ஊர்வலங்கள், கூட்டங்கள் நடைபெறவுள்ளன. அதற்கமைய இந்தமுறை கொழும்பில் மாத்திரம் 13 ஊர்வலங்களும், 17 கூட்டங்களும் நடைபெறவுள்ளதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெறவுள்ள மே தின ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒல்கோட் மாவத்தையிலுள்ள கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சகல ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களில் சுமார் ஆறு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★13 ஊர்வலங்கள்; 17கூட்டங்கள்.
★விசேட போக்குவரத்து ஏற்பாடுகள்.
★கொழும்பு மாநகரில் சுமார் 6 லட்சம் பேர் திரள்வர் என எதிர்பார்ப்பு.
★தனிப்பட்ட தேவைக்கு கொழும்பு வருவதை தவிர்க்க வேண்டுகோள்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடு கடமைகளுக்கு சுமார் ஆறாயிரம் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எந்த கட்சியாக இருந்தாலும் பரவலாயில்லை.

கொழும்பில் நடைபெறவுள்ள மேதின கொண்டாட்டத்தை சிறந்த முறையில் வழமைபோன்று எதுவித பிரச்சினைகளும் இன்றி நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க பொலிஸ் திணைக்களம் தயாராக உள்ளது.

அன்றைய தினம் ஊர்வலம் மற்றும் கூட்டங்களில் கலந்துகொள்ள வருபவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளதால் அத்தியாவசிய தேவைகளை தவிர கொழும்புக்குள் வெளி பிரதேசங்களில் இருந்து வருவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். -என்றார். (ச)

## வணிகப் புள்ளி விவரவியல் பாடத்தை நீக்கத் தீர்மானம்

கொழும்பு,மே1
உயர்தரத்தில் வணிகப் புள்ளிவிவரவியல் பாடத்தை நீக்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு வணிகப் புள்ளிவிவரவியல் பாடத்தை தெரிவு செய்ய அனுமதியளிக்க வேண்டாம் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அண்மையில் கொழும்பு மாவட்ட தேசிய பாடசாலைகளின் அதிபர்களிடம் கோரியிருந்தார்.

பொருளியல், வணிகக் கல்வி மற்றும் கணக்கீடு ஆகிய பாடங்களையே மாணவர்கள் கற்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் 746 மாணவர்கள் வணிகப் புள்ளிவிவரவியல் பாடத்தை தெரிவு செய்திருந்தனர், கடந்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 912 ஆக உயர்வடைந்திருந்தது.

மாணவர்களின் அடைவ மட்டம் 2011 ஆம் ஆண்டில் 41 வீதமாகவும், 2012 ஆம் ஆண்டில் 61 வீதமாகவும் காணப்பட்டது.

வணிகக் கல்வி பாடத்தை ரத்து செய்வது தொடர்பான சுற்றறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## கால்பந்து சம்மேளனத்தில் ரூ. 550 கோடி நிதி மோசடி

### விசாரணைக்கு விசேட குழு

கொழும்பு,மே1
இலங்கை கால்பந்து சம்மேளனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும், 5,500 லட்சம் ரூபா நிதி மோசடி தொடர்பில் ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுகததாஸ நிர்வாக அதிகாரசபை தலைவர் பிரிகேடியர் பிரியந்த சமரதுங்க தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உலக கால்பந்து சம்மேளனத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற நிதியே மோசடி செய்யப்பட்டுள்ளது எனதகவல்கள் கிடைத்துள்ளதென விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

## வீதி ஒழுங்கை மீறுகின்றனர் 2.9 லட்சம் சாரதிகள்



கொழும்பு,மே1
இலங்கையில் 3.8 மில்லியன் வாகன சாரதிகளில் 2.9 மில்லியன் வாகன சாரதிகள் வீதி ஒழுங்குகளை மீறியுள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வாகன பதிவாளரின் அறிக்கையின்படி கடந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் 6 லட்சம் வாகனங்கள் போலியான ஆவணங்கள் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை பணக்காரக் குடும்பங்களை சேர்ந்த இளைஞர்கள் பெருமளவில் வீதி ஒழுங்குகளை மீறுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## கடற்கொள்ளையர்களால் 3 இலங்கையர் கடத்தல்

கொழும்பு,மே1
இலங்கையர்கள் மூவர் உட்பட ஐவர் நைஜீரியா கடற்பரப்பில் வைத்து கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ளனர் என்ற சர்வதேச கடல்சார் பணியகம் அறிவித்துள்ளது.

சரக்குக் கப்பலில் இருந்தவர்களே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர் என்று அந்தப் பணியகம் அறிவித்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதியே அவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள பணியகம், இலங்கையைச் சேர்ந்த மூவரைத் தவிர ஏனைய இருவரும் ரஷ்ய மற்றும் மியன்மார் நாட்டுப் நபர்கள் என்று தெரிவித்துள்ளது.

ஆயுதம் தாங்கிய 14 பேர் கொண்ட குழுவினர் இந்தக் கப்பலை கடத்தியுள்ளனர் என்று பணியகம் குறிப்பிட்டுள்ளது. (ச)



மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இப்ராஹீம் அன்சார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

## இலங்கையை புறக்கணிக்கும் கனேடிய சுற்றுலாப் பயணிகள்



கொழும்பு,மே1
இந்த ஆண்டில் அமெரிக்காவில் இருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை 17.8 வீதத்தினால் அதிகரித்துள்ள போதிலும், கனடாவில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 8.2 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து இந்த ஆண்டில் 85,119 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். கடந்த ஆண்டின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் அது 13.7 வீத அதிகரிப்பாகும்.

2016 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கும் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வெளிநாட்டுத் தலையீடுகள் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்

### வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு,மே1
சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்ற போர்வையில், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் சமூக இணக்கப்பாட்டுக்கான இலங்கையின் தேசியக் கொள்கை தொடர்பான கலந்துரையாடலைத் தொடக்கி வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் நாம் எந்தக் கருத்துகளையும் கூறுவதில்லை. நாம் அந்த நாடுகளின் இறையாண்மையை மதிக்கிறோம் என்று அவர் தெரிவித்தார்.

அதுபோலவே எமது உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிட வேண்டியதில்லை என்றே இலங்கையும் எதிர்பார்க்கிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நக்கீரன் சிக்கன கடன்வழங்கு
கூட்டுறவுச்சங்க தலைவர்
உயர்திரு.
**கிருஷ்ணபிள்ளை கணேசன் J.P.**

கிருஷ்ணபிள்ளை கணேசன் அவர்கள் நீண்டகாலமாக எமது நக்கீரன் சி.க.வ.கூ. சங்கத்தின் தலைவராக கடமையாற்றி வருகின்றார். இவரின் சிறப்பான வழிநடத்தலின் காரணமாக எமது சங்கம் யாழ். மாவட்டத்தில் சிறந்த சங்கமாக முதன்மை பெற்று வருகின்றது. எமது நக்கீரன் சனசமூகநிலையம் குச்சம் ஞானவைரவர் தேவஸ்தானம் என்பவற்றின் நிர்வாகங்களில் பொறுப்பான பதவிகளை ஏற்று சிறப்பாக செயலாற்றி வருபவர். இவரின் சமூக சேவைகளின் செயலாற்றல் காரணமாகவும், நேர்மையான வாழ்வின் காரணமாகவும் 28.02.2013 இல் சமாதான நீதிவானாக பதவி கிடைத்தது. எனவே கி.கணேசன் அவர்களைப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் மகிழ்வாகவும் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இன்று எமது சங்கம் கணேசன் J.P. அவர்களை பாராட்டி கௌரவிப்பு விழாவினை நடத்துகின்றது.

வாழ்த்துவோர்:
நக்கீரன் சிக்கன கடன் வழங்குகூட்டுறவுச் சங்கம்.
அல்வாய் வடக்கு,
அல்வாய். [35343] [45 5 7]

# துயர் பகிர்கின்றோம்



பத்திரகாளி சமேத வீரபத்திரர் திருக்கோயில் - கற்குழி சாவகச்சேரி ஸ்தானிக குருவும், பிரதம சிவாச்சாரியாருமாகிய சிவஸ்ரீ குமாரசாமிஐயர் ஜெகதீஸ்வரக்குருக்களின் அன்பு மனைவி

**இராஜலக்ஷ்மி அம்மா**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பதினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். (36917) (45.6.7)

திரு. திருமதி இராசாராம் குடும்பம்,
திரு. திருமதி பொன்னையா குடும்பம்.

# மரண அறிவித்தல்



## தம்பிப்பிள்ளை கனகலிங்கம்

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 22/3 பாரதி வீதி, நல்லூர் தெற்கில் வசித்தவரும், தற்பொழுது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை கனகலிங்கம் 28-04-2013 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், குணவதியின் அன்புக் கணவரும், இராசலிங்கம்(லண்டன்), நாகேஸ்வரி (லண்டன்), லோகேஸ்வரி(இலங்கை), சண்முகலிங்கம்(கனடா), அமுதலிங்கம் (லண்டன்), பஞ்சலிங்கம்(லண்டன்), இராஜேஸ்வரி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லம்மா (லண்டன்), கந்தசாமி (லண்டன்), தம்பிஐயா (இலங்கை), தவமலர்(கனடா), விஜயந்தி (இலங்கை), மணிமாலா (லண்டன்), நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வல்லிபுரம் கந்தையா, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொரளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் வைக்கப்படும். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(2.6)(சி/9278)

தொடர்புகளுக்கு: தம்பிஐயா யோகேஸ்வரி
T.P. 0776 944493, 011 255 6349

தகவல்:
குடும்பத்தினர்.

# விளையாட்டு மைதானமாகிறது நல்லூர் பிரதேச சபையின் காணி

யாழ்ப்பாணம்,மே1

நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில் உள்ள 20 பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணி பொது விளையாட்டு மைதானமாக மாற்றப்படும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த விளையாட்டு மைதானத்தை உடனடியாக புனர்நிர்மாணம் செய்வதற்கு பத்து லட்சம் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது அந்தக் காணியில் துப்புரவுப் பணிகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன.

பொது விளையாட்டு மைதானமாக மாற்றப்பட்டு அதில் சகல விளையாட்டு வசதிகளையும் ஏற்படுத்தவும் சபை தீர்மானித்துள்ளது-என்றார். (வ-17)


## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
### யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

**விவசாய சான்றிதழ் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது.
பதிவிலக்கம்: TVEC p 25/0026

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புகளை பெறவும், சுயதொழில் வாய்ப்புகளை பெறவும் ஏற்ற புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய செய்முறை ஊடான பயிற்சிநெறி தொடங்கவுள்ளோம். இது க.பொ.த (A/L.O/L) தரம் கற்ற 17-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாருக்குமான இலவச பயிற்சிநெறி. (தற்பொழுது நிறைந்த வேலை வாய்ப்புகளை பல நிறுவனங்கள் எம்ஊடாக தருவதற்கு இணங்கியுள்ளார்கள் என்ற நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம்).

பயிற்சி பெறும் காலத்தில் உதவு தொகை வழங்கப்படும்.

வன்னிப்பிள்ளைகளுக்கு, இடவசதிகளும் விசேட சலுகைகளும் உண்டு.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் **06.05.2013 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு** - பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப்பத்திரங்கள் கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:
அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
தொலைபேசி இல.021 321 4571

(36918) (10,6,7)


# சேவை நலன் பாராட்டு



யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்
-யாழ்ப்பாணம்.

திரு. **செ.விக்னேஸ்வரநாதன்**
(B.Sc, S.L.T.S-I)

எமது வித்தியாலயத்தில் கணித ஆசானாக மூன்றரை வருடங்கள் கல்விப் பணியாற்றி இன்றுடன் (01.05.2013) ஓய்வு பெறும் திருவாளர் செல்லத்துரை விக்னேஸ்வரநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டி, ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ்கவென்று வாழ்த்துகின்றோம்.

பாடசாலை நலன்புரி சங்கம்
யா/புனித சாள்ஸ் ம.வி

# கண்ணீர் அஞ்சலி

யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி பத்மினி நவரட்ணம் அவர்களின் அன்புத் தந்தை

**சுப்பிரமணியம் சிவஞானம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பதினருக்கு எம ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆ சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள்,
யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை.

(36917) (45.6.7)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் தில்லைநாதன்

(உரிமையாளர், கீசன் வெல்டிங் வேக்ஸ் வேலணை/மன்னார்)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வேலணையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது மன்னாரின் வசித்தவருமாகிய வல்லிபுரம் தில்லைநாதன் அவர்கள் 29.04.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-அன்னலட்சுமி (வேலணை) தம்பதியரின் மருமகனும் நீலாம்பிகையின் அன்புக் கணவரும்,வாகீசன் (பிரான்ஸ்), பிரிந்தினி(பிரான்ஸ்), செந்தூரன்(பிறைமின் கிராமின் மைக்றோ பினான்ஸ் லிமிடெட்,மன்னார்), வைகுந்தன்(நேசன் லங்கா PLC மன்னார்) வைதேகி ஆகியோரின் அன்புத் தந்தையும், குமுதா (பிரான்ஸ்) கிருஸ்ணகுமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், விகாஷன், சுபிக்ஷா(பிரான்ஸ்)ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம்,பரமேஸ்வரி மற்றும் தியாகராசா,விஜயரட்ணம், சீவரத்தினம், தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலைச்செல்வி (பிரான்ஸ்), இராசகோபால் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

605, புதிய தெரு,
உப்புக்குளம், மன்னார். (36916)(5.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்து

# யாழ். இந்து ஆண்கள், கொக்குவில் இந்து பெண்கள் இறுதியாட்டத்துக்கு முன்னேற்றம்





யாழ்ப்பாணம், மே.1

யாழ்.மாவட்ட பாடசாலை 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்களில் ஆண்கள் பிரிவில் யாழ்.இந்துக் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக்கொண்டது அதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 44:40 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதியது. அதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 63:38 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ந-23)

## ரமேஷ் வெற்றிக் கிண்ண கரப்பந்து

# சந்திரோதயா சம்பியன்



யாழ்ப்பாணம்,மே.1

இமையாணன் திருநாவலூர் திருநாவலர் விளையாட்டுக் கழகம் நடத்திய ரமேஷ் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்ட இறுதி யாட்டத்தில் சம்பியனானது சந்திரோதயா விளையாட்டுக் கழகம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மின்னொளியில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சந்தரோதயா விளையாட்டுக் கழகமும், தீபஜோதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறிப் புள்ளி களைப் பெற்றவண்ணம் இருந்தன.

அதிரடியாக புள்ளிளைக் குவித்த சந்திரோதயா விளையாட்டுக் கழகம் 42:21 என்ற அடிப்படையில் தீபஜோதியை வீழ்த்திச் சம்பியனானது.

வேல்.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய முகாமைத்துவ கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ.ஸ்ரீதரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரிவு பொலிஸ் அதிகாரி ஐ.பி.பிறிடோஸ், மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் பொ.பொன்னம்பலம், ஹாட்லிக்கல்லூரி உப அதிபர் க.அருளானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருநாவலர் விளையாட்டுக் கழகம் நடத்திய இந்த சுற்றுத் தொடரில் 28 கழகங்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ந-16)

# கே.ஸி.ஸி.ஸி கிண்ண இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், மே 1

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் நடந்தும் கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்துக்கான 40 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜெனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கு பிரதம விருத்தினராக கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பளர் எஸ்.கிருஸ்ணராசனும், சிறப்பு விருத்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் ஞனகாந்தனும் கலந்துகொள்வர். (ந-23-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 1

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடந்தப்படும் மாவட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண் பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று புதன் கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ளது .

இதேவேளை ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ந-23)

★★★

யாழ்ப்பாணம், மே 1

தெல்லிப்பழை நாமகள் சன சமுக நிலையத்தினதும் நாமகள் விளையாட்டுக் கழகத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெற வுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள்:

பி.ப 3மணி

யூனியன் வி.க. எதிர் இளவாலை ஹங்கென்றிஸ் வி.க.

பி.ப 4மணி

'ஏஎல்' வி.க. எதிர் றோயல் வி.க.

(ந-23)



இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தால் யாழ்.மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளன அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் வெற்றி பெற்ற உடுவில் பிரதேச செயலக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளன அணி.(ந-86)

## அகில இலங்கை ஆசிரியர்கள் தடகளப் போட்டிகள்

# 18 தங்கப்பதக்கங்களுடன் வடமாகாணம் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், மே 1

அகில இலங்கை ரீதியாக ஆசிரியர்களுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் வடமாகாண ஆசிரியர்கள் அணி 18 தங்கப் பதக்கங்களையும், 13 வெள்ளிப் பதக்கங்களையும், 10 வெண்கலப் பதக்கங்களையும் தனதாக்கி, 147 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இதேவேளை, 25-30 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் [illegible] நிசந்தன் முதன்மை வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். 31-35 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைச் சேர்த்த எஸ். திருமாவளவன் முதன்மை வீரராகவும், 51-55 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் கோப்பாய் ஆசிரியர் கலசாலையைச் சேர்ந்த கே. மயில்வாகனம் முதன்மை வீரராகவும் தெரிவுசெய்யப் பட்டனர்.

56-60 இடைப்பட்ட வயதுப் பிரிவினருக்கான போட்டியில் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்த்த திருமதி ஜே.எஸ்வரி முதன்மை வீரங்கனையாக தெரிவு செய்யப்பட்டார்.(ந-23)

# மெய்வன்மை பயிற்சிமுகாம்

யாழ்ப்பாணம், மே 1

யாழ்.மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மெய்வன்மை வீர, வீரங்கனைகளுக்கான மெய்வன்மை பயிற்சி முகாம் நாளை ஆரம்பமாகித் தொடர்ந்து இரு தினங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. (ந-23)

# ஹொக்கி போட்டி நாளை

யாழ்ப்பாணம், மே 1

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண் பெண் இருபாலாருக்குமான ஹொக்கி போட்டி நாளையும், நாளை மறுதினமும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ந-23)

# சதுரங்கச் சுற்றுப் போட்டி முடிவுகள்



மாங்குளம், மே 1

வடிவேலு இலங்கேஸ்வரன் அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, திருநாவலர் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த சதுரங்கப் போட்டியின் முடிவுகள் தற்போது வெளியிடப் பட்டுள்ளன.

இதில் 9 வயது, 11 வயது, 13 வயது, 15வயது, 17 வயது பிரிவுகளின் போட்டி முடிவுகளின் தொடர்ச்சி வருமாறு:

13 வயது ஆண்கள் பிரிவு

1 ஆம் இடம்: சு.சுமன் (உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலை), 2 ஆம் இடம்: ப.சிவபாஸ்ரீ (உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலை), 3 ஆம் இடம் இ.தனுசன் (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம்: ஜெ.ரிஷிகோபன் (ஹாட்லிக் கல்லூரி).

13 வயது பெண்கள் பிரிவு

1 ஆம் இடம்: ஜெ.சர்மினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), 2 ஆம் இடம்: ரா.மாதுமை (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை), 3 ஆம் இடம்: பி.ஜோதினி (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை).

15 வயது ஆண்கள் பிரிவு

1 ஆம் இடம்: கி.இலக்கணன் (நெல்லியடி ம.ம.வித்தி), 2 ஆம் இடம் இ.உதயதர்சன் (ஹாட்லிக்கல்லூரி), 3 ஆம் இடம்: சு.சுதர்சன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), த.அபினேஷ் (ஹாட்லிக்கல்லூரி).

15 வயதுப் பெண்கள் பிரிவு

1 ஆம் இடம்: கு.டர்பி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்: வ.மாதுமை (வட இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்: வி.கஜானா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

17 வயது ஆண்கள் பிரிவு

1 ஆம் இடம்: சி.வித்தகன் (ஹாட்லித் கல்லூரி), 2 ஆம் இடம்: எஸ்.துளசியா (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம்: ஆர்.லோஜிதன்.

19 வயது ஆண்கள் பிரிவு

1 ஆம் இடம் க.மகிந்தன் (ஹாட்லிக்கல்லூரி), 2 ஆம் இடம் சோ.சஞ்சயன் (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம் சி.அனந்சயன் (ஹாட்லிக் கல்லூரி).

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு போன்ற பிரதேசங்களில் காரியாலயம் அமைப்பதற்கு வாடகைக்கு இடம் தேவை.

தொடர்பு: 077 416 9026 (26249) (46,6,7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com

0215671111

# ஓராண்டு நினைவஞ்சலி

02.03.1932 மண்ணில் 13.09.1997

12.05.2012 விண்ணில் 01.06.2012

திதி: 01.05.2013







அமரர்

### முத்துக்குமாரு தெட்சணாமூர்த்தி

(M.L.T ஓய்வுபெற்ற மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர், முல்லைப்பிலவு, காரைநகர்)

பரிவுடனே எமை வளர்த்து
வழி நடத்தி வந்தீர்கள்
தரணியிலே நாம் உயர
உரமாகி உழைத்தீர்கள்
திரும்புகின்ற திக்கெல்லாம்
உங்கள் அடையாளம்
ஆண்டொன்று கழிந்த பின்னும்
ஆறவில்லை எம் துயரம்
ஆண்டாண்டு போனாலும்
அகலாது உம் நினைவு
எமை விட்டுப் பிரிந்தாலும் - நீங்கள்
என்றும் எங்களோடு தான் அப்பா

அமரர் செல்வன்

### யோகேஸ்வரன் கிரிதரன்

(ஆண்டு $10^E$ வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன்)

மாகாண மட்ட போட்டி மூலம்
கல்லூரிக்கு பெருமை சேர்க்க சென்ற நீ!
யாழ் மத்திய கல்லூரி
நீச்சல் தடாகத்தில் காவியமாகி
ஓராண்டு உருண்டோடி விட்டாலும்
பதினைந்து ஆண்டுகளாய்
உன் குரல் கேட்டு மகிழ்ந்த
நாள்களை மறப்போமா?
கிரி நீ எங்கு சென்றாய்?
மாதங்கள் ஒன்று முன் சென்ற உன்
அப்பப்பா பாசத்தின் உச்சத்தால் தன்னோடு
உறவாட அழைத்து சென்றாரா? - என்
அன்பு மகனே கிரிதரா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா, தம்பிமார்.

தெட்சணாமூர்த்தி யோகேஸ்வரன்
விவசாயத் திணைக்கள விடுதி,
கண்டி வீதி, வவுனியா.

(C/8470)(10,6,7)

## மரண அறிவித்தல்



### செல்வரத்தினம் சிவபாலன்

உரும்பிராயைச் சேர்ந்த செல்வரத்தினம் சிவபாலன் (உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர்) நேற்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - நாகரத்தினம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற தம்பிராசா- ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணியின் பாசமிகு கணவரும் சிவன்நேசன், சிவன்தாசன், காலஞ்சென்ற சிவன்ரூபன் மற்றும் சிவகாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பூமணி மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் சிவராஜினி (நரம்பியல் வைத்திய நிபுணர், ஆஸ்திரேலியா), கலாநிதி சிவசொரூபி (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனவியல், யாழ். பலைகலைக்கழகம், கனடா), பொது வைத்திய நிபுணர் சிவன்சுதன் (யாழ். போதனா வைத்தியசாலை), சிவதவாணி (போதனாசிரியர், கணினி வளநிலையம், திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜநாயகம் (பட்டயக் கணக்காளர்), வைத்திய கலாநிதி சத்தியபாலன் (பல் வைத்தியர், கனடா), காயத்ரி (கணக்காளர்), வைத்தியகலாநிதி சுரேஷ்குமார் (பொது வைத்தியசாலை, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனும் மாதங்கி (பட்டயக் கணக்காளர், ஆஸ்திரேலியா), வைத்திய கலாநிதி சுபாங்கி (ஆஸ்திரேலியா), தீபிகா (பல்வைத்திய மாணவி, இந்தியா), அபிஷிகா (கனடா), சிவேந்தன் (பரியோவான் கல்லூரி), சிந்தூரி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), நிதுஜன் (கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை), பிரவீணா (சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2013) புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் "சிவாலயம்" பலாலி வீதி, உரும்பிராய் தெற்கிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சிவாலயம்" பலாலி வீதி,
உரும்பிராய்.
(சி/8498) (23-16,14)

தகவல்:
குடும்பத்தினர்.

அன்றும், இன்றும், இனி .... என்றுமே

## O/L DAY CLASS இங்கு மட்டுமே

### விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

பிரிவு 1 இக்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளன.
பிரிவு 2 இக்கான அனுமதி இன்னும் சொற்பமே (50 மாணவர்கள் மட்டுமே)

ஆரம்பம் : 03.05.2013 காலை 8 மணி - பி.ப 2 மணிவரை

## யாழ் நகரில் வர்த்தக நிலையம்

குறைந்த முதலீட்டுடன், குறைந்த வட்டியுடன், வங்கிக்கடன் வசதியுடன், இடவசதிகள் செய்து தரப்படும்.

0777517019
0777428525 (36898) (10,6,7)

SMT Developers (Pvt) Ltd.
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teachers' Panel & Individual Attention

BCHS

**Spoken English With Grammar - Quick Learning Course**

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

**Diploma / Advanced Diploma in English**

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என்பன விரிவாகக் கற்பிக்கப்படும்.

**IELTS - British Council**
**B1 - Exam City & Guilds**

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia மற்றும் UK செல்ல உள்ளவர்களுக்கு ஏற்றது.

**A1 Exam - Sponsor/Settlement Visa**

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commissionனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

**Young Learners for English (YLE)**

வயதெல்லை 7 - 12 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேச பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

(C/8471)(6,7)

Batch I - 02.05.2013 Batch II - 04.05.2013 Batch III - 06.05.2013 Batch IV - 11.05.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road,
Jaffna.
Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane,
Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074

## IELTS A1 B1 B2

Quick Preparation Available Call: 0777302882

Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையிலும் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

K.U Education, No 75, Temple Road, Jaffna. IELTS Centre

## German Language Academy

★ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில் பல வருடங்களாக பல மாணவர்களைச் சித்தியடையச் செய்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு மிக சிறந்த முறையில் ஜேர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளலாம். மாணவர்களுக்கு எமது ஆசிரியர் அவர்களால் தயாரித்து வெளியிடப்பட்ட புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

German Language Academy
#23, Palaly Road, Jaffna. 0779707322
Sun British Business College
Station Road, Vairava Puliyangkulam, Vavuniya.
(36905) (6,7)

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

### S.N. குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்

(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)

பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)

T.P: 072 6816681, 0726816691 (C/8444) (6,7)

## மலேசியா நாட்டில் ஹோட்டல் துறையில் உடனடி வேலைவாய்ப்பு

மலேசியா நாட்டில் அமைந்துள்ள உல்லாச நட்சத்திர ஹோட்டலில் பணிபுரிய அரியதோர் சந்தர்ப்பம் (Room cleaning) இரண்டே வாரத்தில் பயணமாகலாம். அதி உயர் சம்பளம், சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம் இலவசம். மிகக் குறைந்த கட்டணத்தில் பயணமாகலாம்.

உடன் தொடர்புகொள்ள:
LANKA VOICE
0770584658 (26249) (10,6,7)

## STUDY in LONDON

- G.C.E O/L தகைமை போதுமானது.
- மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்.(3/4 வாரங்களில் வீசா)

நீங்கள் City&Guils B1 or IELTS பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களா...???

உங்களுக்காக, "கல்லூரிக்கட்டணம்" மற்றும் "Sponsor" ஏற்பாடுகளிற்கு எமது நிறுவனமே பணத்தை செலவு செய்கின்றது.

வீசா கிடைப்பதற்கு முன்னதாக எவ்விதமுற்பணமும் உங்களிடமிருந்து அறவிடப்படமாட்டாது.

கடந்த வாரங்களில் வீசா கிடைக்கப்பெற்ற மாணவர்கள்



பெற்றோரின் நம்பிக்கையையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் அடிப்படையாகக்கொண்டே எமது நிறுவனம் இவ்வாறான வீசா ஆலோசனை நடைமுறையை மேற்கொண்டுவருகின்றது.

T.P: 0779 265 447 (your future gateway)

WORLD EDUCATION CONSULTANCY
சங்கத்தானை சாவகச்சேரி

Gov. Reg. No: TN/DS/UC/0324

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான 5 ஆம் நாள் - புஸ்பகவிமானக்காட்சி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள- தமிழ் நல்லுறவை கெடுக்கிறதாம் 'உதயன்'

## வசைபாடுகிறது அரச சார்பு 'டெய்லி நியூஸ்'

கொழும்பு,மே 1
உதயன் பத்திரிகை, தன் மீது அரச பாதுகாப்பு படைகளினால் தாக்குதல் நடத்தப்படுவதாக அடிக்கடி அழுது புலம்புகின்றது.
ஆனால் இனக் குரோதத்தை வளர்க்கவும் சிங்கள- தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் நல்லுறவைக் கெடுக்கவும் அந்தப் பத்திரிகை செய்து வரும் காரியங்கள் அனேகமாகத் தேசத் துரோகமானவையே.
இவ்வாறு வசைபாடி தலையங்கம் தீட்டியுள்ளது அரசு சார்பு ஆங்கிலப் பத்திரிகையான டெய்லி நியூஸ்.
கடந்த வார இறுதியில் வெளியான உதயன் பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தைப் படித்துப் பார்த்த எமது ஆசிரிய குழாமைச் சேர்ந்தவர்கள் எடுத்த முடிவு என்னவென்றால் உதயன் பத்திரிகை ஆசிரிய தலையங்கம் ஒரே ஒரு விடயத்தை மனதில் கொண்டே எழுதப்பட்டுள்ளது.
அதாவது தெரிவு செய்யப்பட்ட அரசின் மீது அவதூறு கற்பிப்பதும், அது தமிழ் மக்களுக்கு விரோதமாக செயற்படுகின்றது என்பதாக பொய் வர்ணம் பூசுவதுமே அதன் நோக்கம் என்று எழுதியுள்ள டெய்லி நியூஸ் இது குறித்து மேலும் குறிப்பிட்டுள்ள சில விடயங்கள் வருமாறு:-
இலங்கை ஆட்சியாளர்களுக்கு பதில் அளிப்பதற்கான ஒரே வழி அரசுக்கு எதிராக கிளர்ந்து எழுவதே என்று உதயன் பத்திரிகை தலையங்கம் கூறுகின்றது. இது தேசத் துரோகமாகும். பிரிவினைக்கான பகிரங்க அழைப்புமாகும்.
இந்தப் பத்திரிகை உரிமையாளரும் த.தே.கூட்டமைப்பு உறுப்பினருமான நாடாளுமன்ற உறுப்பினர் நாட்டின் ஆள்புல இறைமையையும் ஐக்கியத்தையும் கட்டிக் காப்பேன் என்று செய்து கொண்ட அரசமைப்பு கடப்பாடுகளை மீறிச் செயற்படுகின்றார்.
எதுவானாலும் பிரிவினையை உபதேசிப்பதானது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பிரமாணங்களுக்கு மாறான செயற்பாடாகும்.
உதயன் பத்திரிகையாளர்களும் அதன் நிர்வாகத்தினரும் தமது காரியாலயங்கள் அவ்வப்போது தாக்கப்படுவதாக ஆச்சரியப்படுகிறார்கள்.
ஆனால் தமிழ் மக்கள் தாம் பாடுபட்டு உருவாக்கிய அமைதியை மீளப்பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்களையும் நிர்மூலமாக்குவதற்கு இந்தப் பத்திரிகை செய்யும் முயற்சிகளைக் கண்டு நிச்சயமாக மக்கள் விழிப்படையாமல் இருக்க முடியாது.
பிரச்சினை என்னவென்றாலும் உதயன் பத்திரிகை காட்டுக் கழுதையைப் போன்று சுதந்திரத்தை அனுபவிக்கின்றது.
இந்தப் பத்திரிகை தாக்கப்படுவது குறித்து பத்திரிகை ஆசிரியர்கள் பேரவை போன்று அறிக்கைகள் வெளியிடுபவர்கள் அவர்கள் கவலை தெரிவித்துக் கொள்ளும் பத்திரிகையின் உள்ளடக்கம் குறித்து அறியமாட்டார்கள்.
ஏனென்றால் அவை அனைத்தும் தமிழில்தான் இருக்கின்றன.
கருத்துச் சுதந்திரம் என்பது வசதிகளை துஷ்பிரயோகம் செய்வதற்கான உரிமம் அல்ல.
உதயன் பத்திரிகையின் குழப்பத்தை கிளறிவிடும் செயற்பாட்டுக்கு சட்டத்தின் மூலமாக பதிலளிக்கப்பட வேண்டும்.
ஆனால் ஒரு பாசிஸ விசர்த்தனமான ஒருவனின் பிடியிலிருந்து விடுபட்டு வரும் மக்கள் நீதிகிடைக்கும் வரை அதன் மெதுவான சுழற்சியைப் பார்த்து காத்துக்கொண்டிருக்கமாட்டார்கள்.
-இவ்வாறு அந்த தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது. (ப)

## யாழ்.இந்துவில் 'சொற்கணை' விவாத சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 1
மொரட்டுவை பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தினால், அகில இலங்கை ரீதியில் பாடசாலைக்கிடையிலான 'சொற்கணை' விவாதச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.
இதன் மாவட்ட ரீதியிலான போட்டியில், யாழ்.மாவட்ட மட்டப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக் கல் லூரியில் இடம்பெறவுள் ளது.
போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் பாடசாலை அதிபரின் சம்மதக் கடிதத்துடன் சமூகமளிக்குமாறு அறிவிக்கப்படுகிறது. (ஒ-5)

## போட்டிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,மே 1
இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3-1 மற்றும் சாரதி சேவை வகுப்பு III ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் நடத்தப்படவுள்ள மேற்படி பரீட்சைகளில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அனுமதி அட்டைகள் கிடைக்காதோர் 021 221 9980, 021 221 9981 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் அறிவித்துள்ளார்.(ஒ-16)


## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தின் கிளை
முகாமையாளரும் கூட்டுறவு ஊழியர்
தொழிற்சங்க உறுப்பினரும் சகதோழியுமான
திருமதி
சச்சிதானந்தம் சந்திராதேவி
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
நல்லூர். கிளை- நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.


# வவுனியா நகர சபையின் ஆவணங்கள் தீக்கிரை

வவுனியா,மே 1
வவுனியா நகர சபையில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் சில தீயிடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நகரசபை உறுப்பினர்கள் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் போது கையொப்பம் இடுகின்ற பதிவேட்டுப் புத்தகமும் எரிந்த ஆவணங்களில் அடங்கி யுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.
நகரசபை உறுப்பினர் ஒருவரை இடைநிறுத்தம் செய்வதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் முக்கியமான இந்தப் பதிவேடு எரிந்துள்ளமை பலருக்கும் ஆச்சரியத்தை அளித்துள்ளது.
இது தொடர்பாக நகரசபைத் தலைவரான ஜ.கனகையாவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;
தமக்கு இதுகுறித்து எதுவும் தெரியாதென அவர் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.
நகரசபைச் செயலர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்; இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்ற வருகின்றன, எரித்தவர்கள் யார் எனக் கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (க)


## மரண அறிவித்தல்



திருமதி
அன்னப்பிள்ளை நடராசா

இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை நடராசா நேற்றுமுன்தினம் (29.04.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - நாகபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் ஆதித்தன், மனோகரன் சரோஜினி ஆகியோரின் பாசமிகு தாயும், ராசாத்தி, வசந்தகுமாரி, ஜெயபாலு ஆகியோரின் அன்பு மாமியும், கஜேந்திரன், கிரிசன், திருச்செல்வன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (01.05.2013) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்காடு,
அச்சுவேலி. (36906) (45.6.7)
தகவல்:
குடும்பத்தினர்.


# மன்னாரில் மே தினம்

மன்னார், மே 1
தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள மேதினக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.
உழைப்பாளர்களின் உரிமைகளை வென்றிடும் தினமான இந்த மே தினம் எமது மக்கள் தமக்கான அரசியல் சுதந்திரத்தையும், தங்களைத் தாங்களே ஆளும் அரசியல் உரிமையையும் வென்றெடுக்கும் எழுச்சி நாளாக முழுமை பெற வேண்டும்.
இந்த வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மன்னாரில் இந்தமுறை ஏற்பாடு செய்துள்ள மே தினக் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், வர்க்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டு குரல் கொடுக்க முன்வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (க-12)


## துயர்பகிர்கின்றோம்

புன்னாலைக்கட்டுவன்
சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்



அவர்களது அன்பு மனைவி
இராஜலக்ஷ்மிஅம்மா
அவர்கள் இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது துயரைப் பகிர்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள்,
பாலமுருகன் சர்மா மற்றும்
நீர்வை வாழ் அந்தணர் சமூகம்
நீர்வைக் கந்தசுவாமி கோயில், நீர்வேலி. (36907)(5.6)

## வீடு வாடகைக்குத் தேவை

குளியலறையுடன் கூடிய வீடு
யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய
பிரதேசத்தை அண்டிய பகுதியில்
உடனடியாகத் தேவை. (36913)(5-6-7)
தொடர்பு: 077 408 0827/ 077 711 0117

## காணி விற்பனைக்கு

கற்குளி ஒழுங்கை, கண்டி வீதி,
நுணாவில், சாவகச்சேரியில்
09 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு
(8/8467) (45.6)
தொடர்பு: 077 404 6585

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு
★ கணக்காளர் பெண்கள்
★ விற்பனையாளர் பெண்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 713 1594,
021 222 9402,
077 314 7580.
ROLEX BAKE MART
118, Kasthuriyar Road, Jaffna.
(36911) (45.6.7)

## கண்ணீர் அஞ்சலி

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி
விநாயகர் ஆலய மகோற்சவக்குரு சிவஸ்ரீ
து.கு. ஜெகதீஸ்வரக்
குருக்கள் (J.P)



அவர்களின் பிரிய பத்தினி
இராஜலக்ஷ்மிஅம்மா
சிவபதப்பேறு அறிந்து எம்
மனதில் சொல்லரிய
துன்பநிலை கண்டோம்.
ஈடில்லா இணையின் பிரிவுத் துயரில் துவளும்
பெருமதிப்பு மிக்க குருவும், பிள்ளைகளும்,
உற்றாரும், பெற்றதொரு பெரும் சோகம் மாறாத
துன்பநிலையில் நாமும் எமது குடும்பத்தாரும்
இணைந்துள்ளோம். அம்மையாரின் ஆன்மா
சாந்தியடைய ஆயக்கடவை ஐங்கரனை
வேண்டுகின்றோம். (36908) (5.6)
சாந்தி! சாந்தி! சாந்தி!
[illegible]
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை துரைசிங்கம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளைதுரைசிங்கம் காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும்,காஞ்சனா, தயாநிதி, வதனி, ஜனித்தா, காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் குமார், கோவூர் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசங்கர், ராமச்சந்திரன், கண்ணன், சூரியகுமார், கார்த்திகா, மதிவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் திரவியம்,லீலாவதி, காலஞ்சென்ற திருஅருட்செல்வம் மற்றும் சுசீலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சுப்பிரமணியம், பேரம்பலம், சரஸ்வதி மற்றும் தனபதி, ராசாத்திஅம்மா, புஸ்பராசா, ஆனந்தி, தெய்வேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை புதுநாயகத்தின் பெறாமகனும், கீர்த்தனா, அவினாஷ், சபிதா, துஷந்தன், கிதுஷன், அதிஸ்வன், மதுஷா, மதிஸ்வன்,கைதுஜன், கதுஷன், கதுஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2013)புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
இல.29, [illegible] வீதி, அரியாலை. (36909)(5.6)
தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி பாலசிங்கம்



யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி லூனனை வதிவிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி பாலசிங்கம் அவர்கள் 29.04.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தநடராசா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி-அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், பபதா(ஜேர்மனி), பவானி(லண்டன்), விஜிதன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவசுதன்(ஜேர்மனி), ஞானகணேஷ் (லண்டன்), சிமோனா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஞானசம்பந்தன், காலஞ்சென்ற ஞானபூங்கோதை, சிதம்பரநாதன்(கனடா), மகேஸ்வரா(கனடா), சிவயோகம்(இலங்கை), தையல்நாயகி(இலங்கை), கெங்காதேவி(ஜேர்மனி), சிறீஸ்கந்தராசா(ஜேர்மனி), ஜெயந்திரா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானரஞ்சிதம் (லண்டன்), தில்லைநாதன்(ஜேர்மனி), புவனேஸ்வரி (கனடா), தில்லைநாயகி(கனடா), சற்குணநாதன்(இலங்கை), இராசரட்ணம்(இலங்கை), தங்கராசா(ஜேர்மனி), ஜெயபாமினி (ஜேர்மனி), இந்திராணி(ஜேர்மனி), சிவசுப்ரமணியம் (இலங்கை), மகாலட்சுமி(இலங்கை), யோகநாதன்(ஜேர்மனி), இராயேஸ்வரி(ஜேர்மனி), பத்மலோஜினி(டென்மார்க்), சிவகுமார்((ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பஞ்சலிங்கம்(இலங்கை), மகாலிங்கம்(ஜேர்மனி), சிவலோகினி(இலங்கை), சிறீதரன் (டென்மார்க்), வசந்தமாலா(ஜேர்மனி), வசந்தநிகலா(ஜேர்மனி) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், சுலக்ஷன், லாவண்யா, ஹெல்வின், நவீன், பவின், பரவீன்(பீற்றர்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்வுகள் : சனிக்கிழமை 04.05.2013, 10:00 மு.ப — 12:00 ந.ப**

**முகவரி:** Bestattungshaus kirchhof merten, Altstadtstraße 19-21, 44534 Lünen, Germany.

தொடர்புகளுக்கு : கந்தசாமி பாலசிங்கம் (ஜேர்மனி )
தொலைபேசி: +49230654567 , +492591948219

(C79280)(5.6.7)

தகவல்:
குடும்பத்தினர்

# உள்ளம் நெக்கி உருகல்



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை,
சித்திவிநாயகர் ஆலய மகோற்சவகுரு
சிவஸ்ரீ
து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் (J.P.)
அவர்களின் தர்மபத்தினி
ஸ்ரீமதி
**இராஜலக்ஷ்மி அம்மா**
அவர்கள்
பெரும்பதம் பெற்றமை குறித்து
அஞ்சலி செய்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| இல்லாள் | அகத்திருக்க | இல்லாத | தொன்றில்லை |
| என்னுமுயர் | தத்துவத்தின் | விளக்கமே | யாகி நின்று |
| நிறைவுற | கருமமாற்றி | நின்றஉயர் | மேன்மையால் |
| குடும்பமே | கோயிலென | குவலயம் | மதிக்கவைத்து |
| குறையென | எதுவுமின்றி | குடும்பத்து | விளக்கேயானீர்! |
| நிகரில்லா | கருமநேர்த்தி | நிர்வாக | திறமைவேண்டி |
| அமரரோடு | ஐங்கரத்தண்ணல் | அந்தரத்து | இறங்கி |
| தேவரும் | வணங்கும் | சேவடி | யடைந்தீர்! |

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தர்மலிங்கம் நந்தகுமாரன்** (ஆசிரியர்) **குடும்பம்,**
**புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலய**
**மகோற்சவ 4ஆம் நாள் உபயகாரர்,**
**புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.**

(36920) (45.6.7)

# சர்வதேச இந்துமத குருபீடத்தின் கண்ணீர்க் காணிக்கை



சாவகச்சேரி மருதடி
பிள்ளையார்
கோயிலடியைச்
சேர்ந்த
"சித்தாந்த பண்டிதர்"

**து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்**
அவர்களின் அன்புப் பாரியார்
**ஸ்ரீமதி இராஜலக்ஷ்மி அம்மா**
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவர்தம் ஆத்மா இறையடி நிழலில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு சர்வதேச இந்து மத குருபீடத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவஸ்ரீமஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாசாரியார்,
கலைமாமணி. சாம்பசிவ சோமாஸ்கந்த குருஜி,
சர்வதேச இந்துமத குருபீடநிதி,
ஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாசாரியார்.



**வியப்பூட்டும் விலைக்குறைப்பு**

தினசரி சென்னை சேவை
இச்சலுகை
15-05-2013 வரை

**சென்னை** 7,500/= **(செல்ல மட்டும்)**
**சென்னை** 14,100/= upwards **(சென்று திரும்ப)**
(all inclusive) Upwards

Baggage allowance 37 kgs.
Complementary Meals provided

AIR-INDIA express
Groups fares offer only over 10 passengers.
Contact for further information: www.airindiaexpress.in

World of Hayleys
47, Stanley road, Jaffna
Ph: 021 2221878, 0777730818

# தவறிவிட்டது

8/1,மீனாட்சி அம்மன் வீதி,கொட்டடி,யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பூபாலப்பிள்ளை ஜெயகாந்தன் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கடந்த 28.04.2013 அன்று துரையப்பா விளையாட்டரங்கில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு: 077 947 5963**

(பி/ 8491)(3.6.7)

# 16 ஆவது நாள் நினைவு அஞ்சலி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஓமானில் பல காலம் வாழ்ந்தவரும், சென்னையை வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்த
**திருமதி கலாதேவி சந்தான கிருஷ்ணன்**
16.04.2013 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சுபகிரியையும் 28.04.2013 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.
இதில் கலந்துகொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(36919) (2.6.7)

V.R.கிருஷ்ணன் (சந்தான கிருஷ்ணன் - Muscat - Oman)
T.P. +919790716623 (இந்தியா), + 96899429816 (ஓமான்)

மலர்வு 24.11.1952 — உதிர்வு 16.04.2013

# மரண அறிவித்தல்

## கோவிந்தபிள்ளை பொன்னுத்துரை



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் K.பொன்னுத்துரை நேற்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை நல்லூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னத்துரையின் சகோதரனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கேசவநாதன், கமலநாதன், விமலநாதன்(ரவி), றஜினி, காலஞ்சென்ற சிதம்பரநாதன் (மோகன்) மற்றும் பற்குணநாதன், யமுனா, றஞ்சனா, யோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சபாநாயகி, பட்சி, விஜயா, பாலச் சந்திரன், கமலாம்பிகை, சீதா, விஸ்வலிங்கம், இரகுவரேந்திரன்(ரகு), தயாபரி ஆகியோரின் பாசமிகு மாமனும், சஞ்ஜீவ், தர்மினி, வித்தியா, மோகனன், அருண், சீராளன், மீநிலா, அபியுகா, பிரதீபன், பார்த்தீபன், அதீபன், ஜனா, ஆரபி, ஆரவன், ஜெரோமி, நீல், சர்மிளா, லார்க், கீர்த்திகா, ஜீவிதன், விதூஷன், பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆத்மிகா, அஸ்ஷானி, நிலுக்கி, நித்யா, மரிஷா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், செல்வராஜா மற்றும் மகேஸ்வரி, நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு அத்தானும் சர்வேஸ்வரன், நிவேதா, சத்தியசோதி, ராஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிப்பயணம் இன்று (01.05.2013) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து ஆரம்பமாகி பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கேசவநாதன் (மகன்)
இரகுவரேந்திரன்
(ரகு மருமகன் - 0712123728),
றஜினி (மகள் - 0775081666)

393/34, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2.6)(36921)



உங்கள் இல்லத்தில் இருக்கும்
**டயலொக் அல்லது சன்டெல் CDMA**
தொலைபேசியினை பழுதுபார்க்க வேண்டுமாயின்,
இதனை முற்றிலும் இலவசமாக மேற்கொள்வதற்கான அரிய வாய்ப்பு

புதிய தொலைபேசி இணைப்பினை கொள்வனவு செய்தல், சேதமடைந்த தொலைபேசிகளை பழுது பார்த்தல் மற்றும் பெட்டரி, உபகரணங்களை மாற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கிய ஏராளமான சேவைகளை பெற்றிடுங்கள்.

2013 மே மாதம் 02ஆம் 03ஆம் 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில்
காலை 9.00 மணிமுதல்
மாலை 5.00 மணிவரை
சுன்னாகம் பஸ் நிலையத்தில்

Dialog FIXED LINE

(36468)(10,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



வைத்திய நிபுணர் சிவபாலன்
சிவன்சுதன் அவர்களின் அன்புத்
தந்தை

### செல்வரத்தினம் சிவபாலன்

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து
துயருடைவதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பலாலி றோட், பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி. (சி/8499) (23-16-14)

புதிய யாழ். வைத்தியசாலை சமூகம்.

## துயர்பகிர்கின்றோம்



மீசாலை பன்றிக்கேணி முருகன்
கோயில் பிரதம குருவான
சிவஸ்ரீ
**து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்**
அவர்களின் அன்பு மனைவி

### இராசலக்ஷ்மி அம்மா

"பத்தா விற்கு ஏற்ற பதிவிரதையாக
தற்காத்து தற்கொண்டார் பேணி"
பிள்ளைகளை சீராக வளர்த்து
நிறைவாழ்வு கண்டு சுமங்கலியாக
இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது
குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

(36926) (23-16-14)

பன்றிக்கேணி முருகன்
அடியார்கள், மீசாலை.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
18.06.1949

மறைவு
13-04-2012

அமரர்
**சிவசாமி விஜயன்**

இடியென ஓர் செய்தி - எம்
இதயம் வரை இறங்கி உயிர் நாடி வரை
அது ஊர்ந்து சென்றதுவே
கனவா ! நனவா! நீங்கள் மறைந்த செய்தி!
புன்னகை தவழும் உங்கள் பூமுகம்
இனி எங்கே காண்போம்?
அடக்கமான உங்கள் பேச்சும்
கனிவான உங்கள் பார்வையும் - அடங்கி
இன்று ஆண்டு ஒன்று ஆனது
கதி கலங்கி நிற்கின்றோம் - அப்பா
கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

(36924)(10,6,7)

இல.79, பாற்பண்ணை வீதி,
2ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி.

உங்கள் பிரிவில் துயருறும்
வித்யா (மகள்), வினோசன் (மகன்), குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கனகசுந்தரம் காண்டீபன்



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி நூர்ன் பேர்க் நகரை வசிப்பிடமாவும் கொண்ட கனகசுந்தரம் காண்டீபன் கடந்த 28.04.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம் (முன்னாள் பிரபல வர்த்தகர்- தவமணி ஸ்ரோர்ஸ்- டிக்வல) தவமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூபதி தம்பதியரின் அன்பு மருமகனும் றோஜமலரின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் மிருணா (ஜேர்மனி), தீபனா (ஜேர்மனி), பிரசன்னா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பார்த்தீபன் (பேள் நியூபசன் கவுஸ், சங்கானை), பிரதீபன் (கனடா), ஜெகதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிறேமானந்தினி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பிரதேச செயலகம், தெல்லிப்பழை), அனுசா (கனடா), இராசு, காலஞ்சென்ற அன்னலச்சுமி மற்றும் இலங்கநாதன் (சுவிஸ்லாந்து), கலாராணி, சந்திரவதனி (கௌரி- இத்தாலி), இரவீந்திரன் (சுவிச்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிராம், அக்சயா, அபிஷா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 02.05.2013 வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 10.30 மணிவரை West friedhof Schnieglinyerstrabe, 7190419 Nurnvery என்னும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி க.தவமணி (தாய்) [illegible]
(0217900890, 0776618790)

ஜேர்மனி [illegible]
00499114246280 (36926) (23-16-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் கந்தையா சண்முகரத்தினம்

தோற்றம்
13 ★ 05 ★ 1958

மறைவு
30 ★ 03 ★ 2013

கடந்த 30.03.2013 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்து ஆறுதல் அஞ்சலி தெரிவித்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று புதன்கிழமை (01.05.2013) அச்சுவேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் கலந்துகொள்வதோடு அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
மடத்தடி, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குரு
சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்களின் அன்பு மனைவி

### திருமதி இராசலக்ஷ்மிஅம்மா ஜெகதீஸ்வரக்குருக்கள்

அவர்கள்( 28.04.2013) ஞாயிற்றுக்கிழமை மறைந்த செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலயப் பரிபாலன சபையினர்
விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி செல்வராஜா



25 ½, 32வது ஒழுங்கை, கொழும்பு - 06.
077 6513791, 011 2360516

காரைநகர், புதுறோட்டை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி செல்வராஜா 30.04.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.கந்தையா செல்வராஜாவின் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்- நெடுங்கேணி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (நெடுங்கேணி)- வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், லோகேந்திரன் (Australia), ராஜேந்திரன் (UK), லோகினி ஆகியோரின் பாசமிகு தாயும், யசோதையின் அன்பு மாமியும், சயூரனின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரல்ல ஜயரத்ன மலர் சாலையில் அஞ்சலிக்காக இன்று (01.05.2013) புதன் கிழமை காலை 9 மணி முதல் வைக்கப்பட்டு, நாளை (02.05.2013) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் பொரல்லை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/9251)(10,6) தகவல் : பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### திருமதி புனிதம்மா பாலகிருஸ்ணன்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் நாவற்குழி புதிய குடியேற்றத் திட்டத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதம்மா பாலகிருஸ்ணன் நேற்றுமுன்தினம் 29.04.2013 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலகிருஸ்ணனின் (சிற்ப ஆசாரியார்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற தர்மலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், துரைராஜா, வடிவேல் மற்றும் கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வரதராசா காலஞ்சென்றவர்களான கமலாம்பாள், நாகரத்தினம், ரெங்கநாதன் ஆகியோரின் மைத்துனியும் தணிகாசலம் (நந்தன்), காலஞ்சென்ற சிவானந்தம், மீனலோஜினி, ஜானகி, கமலநாதன், ஜமுனா, உஷா, வத்சலா ஆகியோரின் அன்புத் தாயும் சக்திவேல், ரங்கநாயகி, ராஜ்குமார், தயாநிதி, பரமேஸ்வரன், தங்கராசா, நொயில் பெரேரா ஆகியோரின் அன்பு மாமியும் விஜித்திரன், விஜித்திரா, கார்த்திகா, சுகன்யா, கிருஸ்ணப்பிரியா, பிரதீபா, யசிந்தன், சக்தி, சயந்தன், சிந்துஜன், பதுஷன், பாலகணன், பாலகீதனன், ஷாமினி, பவன், பவானி ஆகியோரின் பேர்த்தியும் அருணன், ஆருஷ், விஸ்மயகஜரணி, சரயிகிரீஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2013) புதன்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய குடியேற்றத் திட்டம்,
ஐயனார் வீதி,
நாவற்குழி, யாழ்ப்பாணம். (36927) (23-16)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே தினமான இன்று வணிக நிலையங்களை மூடுமாறு அறிவிப்பு

தென்மராட்சி,மே 1

உலக தொழிலாளர் தினத்தையொட்டி மே தினமான இன்று சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட அத்தியாவசிய வணிக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வணிக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என்று வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார்.

வணிக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நலன் கருதி மன்ற நிர்வாகத்தினரால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-9)

* * *

சங்கானை வர்த்தக கைத்தொழில் உரிமையாளர் சங்கம் உலக தொழிலாளர் தினமான இன்று மருந்தகம் மற்றும் பத்திரிகைக் கடைகள் தவிர்ந்த மற்றைய கடைகள் தேநீர் கடைகள் உட்பட அனைத்தையும் பூட்டி ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. இதனை மீறி கடைகள் திறந்தால் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-29)

## பத்திரகாளி அம்மன் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் வண்ணை பிறவுண் வீதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9.30- 10.30 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் கிரியைகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நேற்று அம்மனுக்கு எண்ணெய்க் காப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

#### முன்னாள் போராளிகளுக்கான கடன் வழங்கல்

## தென்மராட்சி பயனாளிகளுக்கு வெள்ளியன்று நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி, மே1

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் கடன் வழங்குவது தொடர்பான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு புனர்வாழ்வு அதிகார சபையினால் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 3? பேரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினால் கேட்கப்பட்டுள்ளது.

கே.மனோன்மணி (மிருசுவில் வடக்கு ), ச.மனோரஞ்சினி (கொடிகாமம்), கு.அமுதா (மீசாலை) கு.சரஸ்வதி (நாவற்குழி), வ.மகாலட்சுமி (நாவற்குழி), இ.புகழினி (நாவற்குழி), சு.சாரதாம்பாள் (கோயிற்குடியிருப்பு), ந.சிவரஜனி (கல்வயல்), உ.சரஸ்வதி (நுணாவில்), ஜீ.ஞானசோதி (நுணா வில்), க.சந்திரவதி (மட்டுவில்), ந.வாமதேவா (சரசாலை), சி.ஜெயந்திமலர் (மீசாலை வடக்கு), வ.அருட்செல்வி (மீசாலை), ப.நகுலாம்பிகை (கச்சாய்), ப.சற்குணசோதி (பாலாவி), செ.பிரியா (கொடிகாமம்), க.நவலட்சுமி (கெற்பேலி), ச.செல்வராணி (கெற்பேலி), க.செலவரஞ்சினி (எழுதுமட்டுவாழ்), ச.குணரத்தினம் (வரணி), கோ.புஷ்பலதா (கரம்பைக்குறிச்சி), ம.செல்வபாக்கியம் (மண்டுவில்), ம.நளினி (மந்துவில்), த.ரஞ்சிதா (மந்துவில்), கே.ரஞ்சினிதேவி (மீசாலை), சி.பரமேஸ்வரி (நாவற்குழி), யோ.தேவசிறி (கோயிற்குடியிருப்பு), பொ.நிலான் (மீசாலை), பா.மங்கயற்கரசி (இராமாவில் ).

(ஐ-9)

**கண்ணீர் அஞ்சலி**



எமது வித்துவசபை உறுப்பினர்
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
அவர்களின் அன்பு மனைவி
இராஜலக்ஷ்மி அம்மா
அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சிவதேச இந்து மதகுருமார் ஒன்றியம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(சி/8478) (45.6)

**கண்ணீர் அஞ்சலி**



எமது ஆலயத்தில் பல வருடங்கள் மஹோற்சவத்தினையும், கும்பாபிஷேகத்தினையும் நடத்திய
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
அவர்களின் அன்பு மனைவி
இராஜலக்ஷ்மி அம்மா
அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
தேவஸ்தான குருமாரும்,
ஆலய பரிபாலன சபையினரும்.
சிவன் கோயில்,
சித்தன்கேணி.
(சி/8479) (45.6)

**விற்பனைக்கு**

MITSUBISHI CANTER
14½" Body Aluminium
(Japan) விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 305 3170
(36894) (6,7)

**துயர் பகிர்கின்றோம்**



எமது பாடசாலையின் ஆசிரியர்
செல்வி ஜெ.செந்தூரா
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி இராஜலக்ஷ்மி அம்மா
ஜெகதீஸ்வரக்குருக்கள்
அவர்கள் 28.04.2013 அன்று இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(36904 (45.6.7)
அதிபர், ஆசிரியர்கள்.
யா/வரணி ம.வி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு
கல்வியாண்டு 2011/2012
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்
மேற்படி பீடத்தின் புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு 06.05.2013 (திங்கட்கிழமை) காலை 9.00 மணிக்கு முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தில் ஆரம்பமாகும் எனப் பீடாதிபதி அறிவித்துள்ளார்.
பதிவாளர்.
(சி/8485)(6.2.7)

**விற்பனைக்கு**

ஆறு கிழமைகளேயான ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் (பூச்சி மருந்து கொடுக்கப்பட்டவை) விற்பனைக்கு. தொ.பே: 077 177 7680
(36899) (6,7)

**தவறிவிட்டது**

இல.41, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த நல்லையா ஜெயக்கொடி என்பவரது தேசிய அடையாள அட்டை (553301980V) 15.04.2013 அன்று யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்
(30668) (6,7)

**தவறிவிட்டது**

வரணி வடக்கு, வரணி என்னும் முகவரியைச் சேர்ந்த அன்ரன் ஜோர்ஜ் றெஜின்ரன் என்பவரது தேசிய அ. அட்டை (883341368V), வாகனக் காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம், ஒரு தொகைப் பணம் என்பன பூநகரி முற்கொம்பனுக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0773362175 என்னும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(சி/9475) (6)

**45ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம்
14.06.1978
மறைவு
18.03.2013

அமரர் சுதாங்கனி
ஜெகதீஸ்வரன்

கடந்த 18.03.2013 சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் ஜெகதீஸ்வரன் சுதாங்கனி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.05.2013) புதன் கிழமை பி.ப. 12.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
(சந்திரோதய பாடசாலை அருகில்)
தம்பிராசா குடும்பத்தினர்.
021-2230808
(36896) (10,6,7)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

அமரர் கதிரவேல்
இராஜேஸ்வரி



"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ இம் மாநிலத்தே"

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலிப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் குப்பிளான் தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (01.05.2013) புதன்கிழமை நண்பகல்12 மணியளவில் நடைபெற இருப்பதால் அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.
குப்பிளான் தெற்கு.
குடும்பத்தினர்.
(36892) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பில்
உடல் நலமும்
உடல் நலத்தால்
உள்ள நிறைவு
உண்டாகும்
-பியாட்டி

புதன் பொய்கை A

உதயன் | மே 01 2013 புதன்கிழமை | பக்கங்கள்: நான்கு



# மன அழுத்தத்தை அதிகரிக்கும் வேலைத்தளங்கள்

மன அழுத்தம் என்பது இன்று பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. மன அழுத்தங்கள் பல வழிகளில் ஏற்படுகின்ற போதிலும் தொழில்தளங்களில் நாம் எதிர்கொள்ளும் கசப்பான அனுபவங்கள் இத்தகைய மன அழுத்தங்களை மேலும் அதிகரிக்கும் செயற்பாடுகளாக அமைந்துள்ளன.

இக்கருத்துக்களை நியாயப்படுத்தும் வகையில் ஆய்வுத்தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

வேலைத்தளங்களில் ஏற்படும் கசப்பான அனுபவங்களானது மன அழுத்தத்தை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் மன அழுத்தம் என்பது இன்று உலகளவில் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் பிரிட்டனைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தமது ஆய்வுத் தகவல்களில் தெரிவித்துள்ளனர்.

அலுவலகங்களில் தொழில் புரிபவர்கள், பாதுகாப்பு படையினர், சுத்திகரிப்பு தொழிலாளர்கள் முதல் அனைவருமே இத்தகைய மன அழுத்தங்களுக்கு உட்படுபவர்களாகவே உள்ளனர்.

இரவு பகல் பாராமல் தொழில் புரிபவர்கள் இவ்வாறான மன அழுத்தங்களுக்கு அதிகமாக உள்ளாகுவதாகவும் மேற்படி ஆய்வுத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

உண்மையில் ஆத்மதிருப்தியுடன் வேலை செய்பவர்களை நாம் இன்று அனேகமாக காண்கின்றோம். இவ்வாறானவர்கள் வீடுகளில் தமக்கான நேரத்தை செலவிடுவதைவிட தொழில்தளங்களிலேயே அதிகமான நேரத்தை செலவிடுகின்றனர்.

இதனால் குடும்பத்தினரின் முரண்பாடுகளையும் இத்தகையானோர் எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு தொழில் புரிபவர்களுக்கு தொழில்தளங்களில் எதிர்நோக்கும் சிறிய அல்லது பாரிய பிரச்சினை என்றாலும் அது அவர்களை மனதளவில் பாதிக்கும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

போட்டி, பொறாமை மிகுந்த இன்றைய சூழலில் ஒருவரை வெட்டி வீழ்த்திவிட்டு உயர செல்ல வேண்டும் என்ற நிலைப்பாடே ஒவ்வொரு துறைகளிலும் காணப்படுகின்றது.

இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் திறமைகளுக்கு மதிப்பளிக்கப்படாமை, திறமைகள் மழுங்கடிக்கப்படுகின்றமை என்று வரும்போது ஆத்மதிருப்தியுடன் தொழிலாற்றுபவர்கள் துவண்டு விடுகின்றனர்.

இது அவர்களை மிகவும் பாதிப்பதாக அமைவதுடன் அவர்களை மன அழுத்தத்திற்கும் தள்ளிவிடுகின்றது. இது நாளடைவில், மனநல பாதிப்பு, மாரடைப்பு என பலநோய்களுக்கு இயல்பாகவே அழைத்து சென்று விடுகின்றது.

அமெரிக்கநாட்டுடன் சேர்ந்து இடைவிடாது போரில் ஈடுபட்ட இங்கிலாந்து இராணுவ வீரர்களுக்கு அதிக அளவில் மன அழுத்தம் ஏற்பட்டுள்ளதாக சமீபத்திய ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன.

பிரிட்டன் இராணுவ வீரர்களின் மன அழுத்தத்தை குறைப்பதற்காக, 4000 இராணுவ வீரர்களை இந்தியாவிற்கு அனுப்பி தியானம் போன்றவற்றில் பயிற்சி கொடுக்க இங்கிலாந்து அரசு முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்தியாவில், கூட்டு நிறுவனங்களில் தொழில் புரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் மன அழுத்தம் பெருமளவு அதிகரித்திருப்பதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

இந்தியாவின் வெள்ளைச் சட்டை உழைப்பாளிக... சதவீதம் பேர் தனி... உணர்கின்றனர். 77 சதவீதம் பேர் தமது மகிழ்ச்சியையும் வருத்தங்களையும் யாருடனாவது பகிர்ந்து கொள்ள விரும்புகின்றனர். கடுமையான போட்டிச் சூழலின் காரணமாக தங்கள் விருப்பத்துக்கு மாறாக அதிகம் உழைப்பதாக 63 சதவீதம் பேர் கூறியுள்ளதாக ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் உள்ள மனநல அறக்கட்டளை ஆய்வு மையம் ஒன்று அலுவலகங்களில் தொழில் புரிபவர்கள் எதிர்கொள்ளும் மனஅழுத்தம் தொடர்பிலான ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

இவ் ஆய்வறிக்கையில், தாம் புரியும் தொழிலானது அவர்களது வாழ்க்கையில் மிகவும் இறுக்கமான ஒரு நிலையை தமக்கு தோற்றுவிப்பதாக மூன்றில் ஒரு பங்கினர் தெரிவித்துள்ளனர்.



இதன்காரணமாக 57 வீதமானவர்கள் தமது அலுவலக நேரத்தின் பின் மதுபானம் அருந்துபவர்களாக காணப்படுகின்றனர். இவர்களில் 14 வீதமானவர்கள் தமது அலுவலக நேரத்தில் மதுபானம் அருந்துவதாக அவ் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பணியிடங்... கொலைக்கு முற்படுவதாகவும் அவ் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது 18-24 வயதுக்கு இடைப்பட்டவர்களிடையே அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அலுவலகங்களில் ஏற்படும் மனக்கசப்பான சம்பவங்கள் காரணமாக 11 வீதமானவர்கள் தமது தொழிலை இராஜினாமா செய்துவிடுகின்றனர். இவர்கள் தமது பதவியிலிருந்து வெளியேறுவதை பற்றி தீர்மானிக்கின்றனர். இதேவேளை, தமது அலுவலக தலைமை அதிகாரிகளிடம் தமது பிரச்சினை தொடர்பில் பேசுபவர்கள் மிகவும் அரிதாகவே காணப்படுவதாக அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலகங்களில் தொழில் புரிபவர்களுக்கு மனநலம் சார்ந்த செயற்திட்டங்கள் தேவை என மேற்படி அமைப்பின் தலைமை அதிகாரி போல் பாமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆறில் ஒரு வீதமானவர்கள் மனதளர்ச்சிக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். பெரும்பாலான மேலதிகாரிகள் இவ்வாறானவர்களுக்கு ஆதரவு அல்லது ஊக்குவிப்பு வழங்குவதில்லை என நாம் மேற்கொண்ட ஆய்வில் கண்டறிந்துள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொழில் என்பது மிகப் பெரிய மன அழுத்தத்திற்கான காரணி என 34 வீதமானவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பிரச்சினைகளுக்கு தூக்க மாத்திரை, அல்லது மன அழுத்தங்களை குறைக்கும் மருந்து, அல்லது புகைபிடித்தல் போன்றவற்றை கடைப்பிடித்து வருவதாகவும் இவை அவர்களுக்கு பிரத்தியேகமான வேறு நோய்களை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மன அழுத்தம் என்பது உயிராபத்தை விளைவிக்கும் காரணியாகவும் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன அழுத்த அதிகரிப்பானது இதய நோயாளிகளுக்கு மரணத்தை விளைவிக்கும் காரணியாக அமைந்துள்ளமை பற்றி பல ஆய்வுகள் தெரிவித்துள்ளன என கலாநிதி லானா வாடிகின்ஸ் தெரிவித்துள்ளார்.

> போட்டி, பொறாமை மிகுந்த இன்றைய சூழலில் ஒருவரை வெட்டி வீழ்த்திவிட்டு உயர செல்ல வேண்டும் என்ற நிலைப்பாடே ஒவ்வொரு துறைகளிலும் காணப்படுகின்றது. இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் திறமைகளுக்கு மதிப்பளிக்கப்படாமை, திறமைகள் மழுங்கடிக்கப்படுகின்றமை என்று வரும்போது ஆத்ம திருப்தியுடன் தொழிலாற்றுபவர்கள் துவண்டு விடுகின்றனர். இது அவர்களை மிகவும் பாதிப்பதாக அமைவதுடன் அவர்களை மன அழுத்தத்திற்கும் தள்ளிவிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டி.ஜானகி, சூர்யா

# வெண்புறாவின் விருப்பம்





மன்னர் மகுடேஸ்வரன் அரண்மனைத் தோட்டத்தில் ஓர் அழகான வெண்புறா வசித்து வந்தது. எல்லோருக்கும் நன்மையே செய்ய வேண்டும் என்ற உயர்ந்த பண்பு அதனிடம் இருந்தது.

ஒரு நாள் மகுடேஸ்வரன் தன் மந்திரியிடம், "புவனகிரி மன்னன் நம் மீது படையெடுக்க ஆயத்தம் செய்வதாக அறிந்தேன். நாம் போரில் ஜெயிக்க ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்றார்.

இதைக் கேட்ட புறாவின் மனம் வருந்தியது. மனிதர்களது மொழியைத் தன்னால் பேச முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தது. தவ வலிமை மிக்க முனிவர் ஒருவரைச் சந்தித்து தன் விருப்பத்தைக் கூறியது. "புறாவே! மனித மொழியில் பேச விரும்பும் காரணம் என்ன?" என்று முனிவர் கேட்டார். "முனிவரே! இந்த நாட்டு மன்னரும் புவனகிரி மன்னரும் சண்டையிடப் போகிறார்கள். போரில் ஆயிரக் கணக்கான உயிர்கள் மடிவதை நான் விரும்பவில்லை. மன்னர்களிடம் பேசி இதைத் தடுக்க நினைக்கிறேன்" என்றது.

ஒரு நொடி யோசித்த முனிவர், "புறாவே, உனக்கு மூன்று நாள்களுக்கு மட்டும் பேசும் சக்தியை வழங்குகிறேன். உன் உயர்ந்த எண்ணம் நிறைவேற என் ஆசிகள்" என்றார். புறாவுக்கு பேசும் சக்தி வந்துவிட்டது. முனிவரை வணங்கி நன்றி தெரிவித்து விட்டு அரண்மனைக்குத் திரும்பியது. 'அறிவுரை சொன்னால், மன்னர் ஏற்றுக்கொள்ள மாட்டார். பொய் சொல்லித்தான் மனதை மாற்ற வேண்டும்.' என்று நினைத்தது. மறுநாள், மன்னர் அரண்மனைத் தோட்டத்துக்கு வந்ததும் அவரை நெருங்கியது. "மன்னா வணக்கம். புவனகிரி நாட்டுடன் போரிட்டால், போரில் நீங்கள் தோற்று விடுவீர்கள். உங்கள் அருமை மகளின் வாழ்க்கையும் பாழாகிவிடும். அதற்கு மாறாக, உங்கள் மகளை புவனகிரி இளவரசனுக்குத் திருமணம் செய்துகொடுங்கள். இதனால் உங்களுக்கு நன்மையே கிடைக்கும்" என்றது.

மகுடேஸ்வரன் உடனே மந்திரியை வரவழைத்து, புறா கூறியதைத் தெரிவித்தார். "அரசே, புறா நம் மொழியில் பேசியது வியப்பாக இருக்கிறது. அது கூறியபடியே நடப்போம். இந்தத் திருமணத்தின் மூலம் இரண்டு நாடுகளும் நட்போடு வாழும். இந்தச் செய்தியைப் புறாவின் காலில் கட்டி அனுப்புவோம்" என்றார்.

மந்திரி கூறியபடி மன்னர் செய்தார். புறா ஓலையுடன் விண்ணில் பறந்தது. அப்போது ஒரு பெரிய பருந்து புறாவின் அருகில் வந்து அதைப் பிடித்தது. "என் பசிக்கு உன்னை இரையாக்கிக்கொள்ளப் போகிறேன்" என்றது.

"பருந்தாரே, ஒரு முக்கியமான வேலையாக நான் புவனகிரி நாட்டுக்குச் செல்கிறேன். அந்த வேலை முடிந்து இதே வழியில்தான் வருவேன். அப்போது என்னை நீ கொன்று உண்ணலாம்" என்று புறா உறுதிமொழி கொடுக்கவே, பருந்தும் சம்மதித்தது.

புறா தன் பயணத்தைத் தொடர்ந்தது. சில மணி நேரங்களில் புவனகிரியை அடைந்தது. அங்கே உலைக் களங்களில் கொல்லர்கள் ஆயுதங்கள் செய்வதையும், படை வீரர்கள் மும்முரமாகப் பயிற்சியில் ஈடுபடுவதையும் பார்த்தது.

'மன்னர் மகுடேஸ்வரன் கொடுத்த ஓலையின்படி இந்த நாட்டு மன்னர் நடக்காமல் போருக்குக் கிளம்பினால் என்ன செய்வது?' என்று வருந்திய புறா, ஓலையைப் பத்திரமான இடத்தில் ஒளித்துவைத்தது. அங்கே இருந்த சாம்பலில் விழுந்து புரண்டது. பார்ப்பதற்கு சாம்பல் வண்ணப் புறா மாதிரி தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டு அரண்மனைக்குச் சென்றது.

அரண்மனைத் தோட்டத்தில் மன்னரும் அவரது மந்திரியும் இருந்தனர். "புவனகிரி மன்னருக்கு வணக்கம்" என்று கூற, மனிதர் மொழியில் பேசும் புறாவைப் பார்த்துத் திடுக்கிட்டார். "என்ன திகைக்கிறீர்கள்? ஆண்டவன் அருளால் பேசும் சக்தியைப் பெற்றிருக்கிறேன். மன்னர் மகுடேஸ்வரனோடு நீங்கள் போர் செய்தால், கட்டாயம் தோற்றுவிடுவீர்கள். உங்கள் அருமை மகனின் உயிருக்கும் ஆபத்து ஏற்படும். கூடிய விரைவில் அந்த மன்னரிடம் இருந்து ஓலை வரும். அதில் கூறியபடி நடந்தால், இரண்டு நாடுகளும் முன்னேறும்" என்று கூறிவிட்டுப் பறந்து சென்றது.

மறுநாள், புறா தன் இயற்கையான தோற்றத்தில் ஓலையோடு அரண்மனைக்கு வந்தது.

செய்தியைப் படித்த மன்னர் புவனேந்திரன், பேசும் புறா கூறியது முற்றிலும் உண்மைதான் என்று உணர்ந்தார். தனது மகனின் எதிர்காலம் ஒளிமயமாக அமையும் என்ற நம்பிக்கை உண்டாயிற்று. உடனே மந்திரியிடம், "என் மகனுக்கு மகுடேஸ்வரன் மகளைத் திருமணம் செய்துகொள்வதாக வீரர் மூலம் செய்தி அனுப்புங்கள்" என்றார். இதைக் கேட்ட புறாவும் மகிழ்ச்சியோடு வானில் பறந்தது. தொலைவில் தன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு இருந்த பருந்தைப் பார்த்துவிட்ட புறா, அதன் அருகில் சென்றது.

"பருந்து அண்ணா, நான் சென்ற வேலை வெற்றிகரமாக முடிந்தது. இனி நீ என்னைக் கொன்று உண்ணலாம்" என்று விஷயத்தைச் சொன்னது. "புறாவே, உன் செயலை நான் மிகவும் பாராட்டுகிறேன். வாக்குக் கொடுத்தபடி நீ நடந்துகொண்டது என் மனதைத் தொட்டுவிட்டது. உன்னை இரையாக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை" என்றபடி பருந்து பறக்க ஆரம்பித்தது.

பிறகு, புறா முனிவரைச் சந்தித்து நடந்ததைக் கூறியது. "புறாவே, உன் உயிரையே பணயம் வைத்து நீ ஆற்றிய சேவையைப் பாராட்டுகிறேன். இன்று முதல் உங்கள் இனத்தைச் சமாதானச் சின்னமாக மக்கள் ஏற்றுக்கொள்ளும்படி ஆசீர்வதிக்கிறேன்" என்றார்.

புறாவின் உள்ளம் மகிழ்ந்தது.

# வெற்றிக்கான இலக்கு வழி

இன்றைய சமுதாயத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அல்லது சவால்கள் அநேகம். யாராக இருந்தாலும் ஏதோ ஒரு சவால் இருக்கத்தான் செய்கின்றது. அதற்கு மாணவர்கள் மட்டும் விதிவிலக்கல்ல.

பரீட்சை என்பது மாணவர்களுக்கு ஒரு சவால். ஒரு மாணவனின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்வது பரீட்சைதான். இந்தப் பரீட்சை ஆனது மாணவர்களை மனரீதியான பிரச்சினைகளைச் சந்திக்கும் கட்டாயத்துக்குள் தள்ளிவிடும். குடும்பச்சூழ்நிலை, நாட்டுச்சூழ்நிலை, விலைவாசி எனும் பல தடைகள் ஒரு மாணவனைத் தனது கல்விக் கடலைத் தாண்ட முடியாமல் மூழ்கடித்துவிடும். இவை அனைத்தையும் தாண்டி ஒரு மாணவன் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது சிந்திக்க வேண்டிய விடயம் தானே? எதிர்காலத்தில் தான் என்னவாக வரவேண்டும் என்பது அவனது கனவாக இருந்தாலும் இடையில் அது காணமற் போவது ஏன்?

"கனவு காணுங்கள் இலட்சியத்தை அடைவீர்கள்" என்று டாக்டர் அப்துல் கலாம் சொன்னது எதற்காக; அனைவரும் வெற்றியுடன் கல்வியைத் தொடர வேண்டும் என்பதற்காகவே.

பரீட்சையை எவ்வாறு எதிர்கொள்வது

நோக்கம்+இலட்சியம்+எதிர்பார்ப்பு=எதிர்காலம்

கல்வி நல நோக்கம் கொண்டது.

இலக்கு எப்படிப்பட்டது?

தெளிவானது-Specific

அளவிடக்கூடியது-Measurable

அடையக் கூடியது-Attainable

யாதார்த்தமானது-Realistic

கால எல்லையுடையது-Time bound

மேலே குறிப்பிட்ட அனைத்தையும் நினைவில் கொண்டால் ஒவ்வொரு மாணவனும் Smart ஆகிவிடுவான்.

பாடங்களை இலகுவாகக் கற்றுக்கொள்ளும் வழிகள்:-

- கற்றபாடத்தை மீட்டல் செய்து பார்க்க வேண்டும்.
- பெரிய விடயங்களை குறிப்பெடுத்து பரீட்சைக்கு முதல் நாள் பார்க்க வேண்டும்.
- மனனம் செய்யும் பழக்கத்தை அதிகாலையில் கடைப்பிடிக்க வேண்டும்.
- தனிமையில் சத்தமாக வாசித்து விளக்கம் பெறவேண்டும்.






- கணக்கு, ஆங்கில சொற்கள் என்பவற்றை அடிக்கடி எழுதிப் பார்க்கும் பழக்கத்தை கைக்கொள்ள வேண்டும்.
- சூழ்நிலைகள், இடையூறுகள் எதுவாக இருப்பினும் அதை சமாளிக்க தெய்வ நம்பிக்கை கொள்ள வேண்டும்.
- அன்பு, பணிவு, நம்பிக்கை, மனஉறுதி இவை அனைத்தையும் தெய்வ நம்பிக்கை தந்துவிடும்.
- நேர அட்டவணை தயாரித்தல்.

அயராத உழைப்பு வெற்றியைத் தந்திடும்.

தனித்திரு, விழித்திரு, பசித்திரு வெற்றி நிச்சயம்.

எஸ்.சர்மிலா,
ஸ்ரீராமபுரம், வவுனியா.

# புதியதோர் உலகம் செய்வோம்

இந்தப் பூமிப்பந்து
வெந்து சாம்பலாகட்டும்
வழியில்லை வேறோர் நல்லுலகு
செய்வோம்.

அந்த உலகில்
அணுக்கள் இல்லை
ஆயுதம் இல்லை
அமெரிக்கா இல்லை
ஆத்திரம் இல்லை
அன்பு மட்டுமே
அன்பாக வியாபித்திருக்கும்
இவ்வுலகில்!

ஊழல் இல்லை
சூழல் மாசில்லை
உயர்வு தாழ்வில்லை
சாதி இல்லை
சமயம் இல்லை
மனிதமே அங்கு
புனித மூச்சாக இருக்கும்!

அ.சுபாசினி, தரம் 11'சி'
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழமைக்கு மாறாக குறுகிய நேரத்தில் சர்வதேச விண்வெளிப் பயணம்

சாதாரணமாக ரஷ்யாவின் சோயுஸ் ரொக்கெட்டுகள் மூலமாக பூமிக்கு மேலே சுமார் 400 கிலோமீற்றர் உயரத்தில் மணிக்கு 27ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் வட்டமடித்துக் கொண்டிருக்கும் சர்வதேச விண்வெளி நிலையம் எனப்படுகின்ற இந்த செயற்கைகோளுக்குச் செல்ல வேண்டுமானால் மொத்தம் 50 மணி நேரங்கள் ஆகும். ஆனால் இந்த முறை பயணம் சென்றவர்கள் 6 மணி நேரத்தில் சர்வதேச விண்வெளி நிலை யத்தைச் சென்றடைந்தனர்.



பூமிக்கு மேலே வட்டமிட்டுக்கொண்டிருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு சோயுஸ் விண்வெளி ஓடம் இந்த முறை மேற்கொண்ட பயணம் வழமைக்கு மாறாக மிகக்குறைவான நேரத்தில் நடைபெற்றுள்ளது. வியாழன் இரவு ஜி.எம்.ரி. நேரப்படி சுமார் 8.45 மணிக்கு கஸக்ஸ்தானில் உள்ள பைக்கானூர் விண்ணேற்றத் தளத்திலிருந்து புறப்பட்ட ஸோயுஸ் ரொக்கெட் பயணம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. ஏனென்றால் சாதாரணமாக ரஷ்யாவின் சோயுஸ் ரொக்கெட்டுகள் மூலமாக பூமிக்கு மேலே சுமார் 400 கிலோமீற்றர் உயரத்தில் மணிக்கு 27ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் வட்டமடித்துக் கொண்டிருக்கும் சர்வதேச விண்வெளி நிலையம் எனப்படுகின்ற இந்த செயற்கைக்கோளுக்குச் செல்ல வேண்டுமானால் மொத்தம் 50 மணி நேரங்கள் எடுக்கும். ஆனால் இந்த முறை பயணம் சென்றவர்கள் 6 மணி நேரத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தனர்.

இதற்கு முன் சென்ற பயணங்களில் எல்லாம் இரண்டு தினங்களுக்கு தொடர்ந்து சுமார் 30 முறை பூமியை சுற்று வட்டப்பாதையில் வட்டமடித்த பின்னர்தான் விண்வெளி நிலையத்தை நெருங்க முடிந்தது. ஆனால் இந்த முறை ராந்தேவு தொழினுட்பம் என்ற புதிய பறக்கும் வித்தையை செய்து பூமியை நான்கு முறை மட்டுமே சுற்றிய நிலையில் விண்வெளி ஓடத்துடன் ஆள்கள் சென்ற சோயுஸ் விண்ணோடக் குப்பி இணைய முடிந்துள்ளது. ராந்தேவு தொழினுட்ப பறக்கும் முறை இதற்கு முன் ஆள் இல்லாமல் பறக்கக்கூடிய ரஷ்யாவின் பிராக்ரஸ் சரக்கு விண்வெளி ஓடத்தில் மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் மனிதர்களைச் சுமந்து சென்ற ஒரு விண்வெளி பயணத்தில் இந்த உத்தி பயன்படுத்தப்பட்டமை இதுவே முதல் முறை. அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவைச் சேர்ந்த கிறிஸ் கேஸிடியும், ரஷ்ய விண்வெளி ஆய்வு மையமான ரொஸ் கொஸ்மோஸைச் சேர்ந்த பவெல் வினோக்ரடொவ் மற்றும் அலெக்ஸாண்டர் மிஸுர்கின் ஆகிய இருவருமாக மொத்தம் மூன்று பேரும் இப்பயணத்தில் சர்வதேச விண்வெளி நிலையம் சென்றுள்ளனர்.

அவர்கள் ஆறு மாத காலத்துக்கு அங்கு தங்கி யிருந்து பணிகளை மேற்கொள்வர். விண்வெளி நிலையத்தில் ஏற்கனவே இருந்து வருகின்ற மூன்று பேர் வரும் மே மாதம் அங்கிருந்து பூமிக்குத் திரும்புவர். அடுத்த ஆறு மாத காலத்தில் அமெரிக்கா சார்பில் சர்வதேச விண்வெளி ஓடத்தில் மொத்தம் 137 ஆய்வுகள் நடக்கவுள்ளன, ரஷ்யா சார்பில் 44 ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன என்று நாசா அறிக்கை ஒன்று கூறுகிறது.



## வேற்றுக்கிரகவாசி உருவில் பிறந்த
# பெண் குழந்தை



வட இந்தியாவில் வசித்துவரும் அப்துல் ரகுமான் என்னும் 26 வயதுடைய தந்தைக்கு பிறந்த குழந்தையின் நிலை இதுதான். 18 மாதங்களே ஆகும் ரூனா என்னும் இந்தச் சிறுமியின் தலை சுமார் 3 மடங்கு பெரிதாக உள்ளது. சாதாரணமாக இந்த நோய் எந்தச் சிறுவர்களுக்கும் வருவது இல்லை. கோடியில் ஒருவருக்கே இவ்வாறு வரும் என்கின்றனர் மருத்துவர்கள். பொதுவாக தலைக்குள் நீர் அதிகரிப்பதால் இது ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. மருத்துவர்களால் தலைக்குள் இருக்கும் நீரை உறுஞ்சி எடுக்க முடியும்.

இருப்பினும் அவ்வாறு செய்ய பெரும் பொருள் செலவு ஏற்படும் என்று கூறப்படுவதால், அவளது தந்தையால் அதனைச் செய்யமுடியவில்லை. சாதாரண கூலித்தொழிலாளியாக இருக்கும் தந்தை யால், இந்தச்சிறுமிக்கு சிகிச்சை கொடுக்க முடிய வில்லை. இந்நிலை நீடித்தால் அந்தச்சிறுமி சிறிது சிறிதாக மூளைத்திறனை இழந்து பின்னர் மரண மடைவார் என்று கூறப்படுகிறது. எனவே இச் சிறுமிக்கு உதவுமாறு பிரிட்டன் பத்திரிகை ஒன்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. அதனை யடுத்து பலர் இந்தச்சிறுமிக்கு உதவ முன்வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

# கலைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

மனிதரில் மேலோங்கியிருப்பது அறிவு அஃறிணை உயிரினங்களிலிருப்பது உணர்வு கலைகளுக்குச் சிறந்த ஊடகமாக இருப்பது இயல்புணர்வே. இதனால் மனிதன் தனது கலைகளை விலங்குகளிடமிருந்தே கற்கிறான். இதனால் ஆரம்ப காலத்தில் விலங்குகள், பறவைகள் போல் வேசமிட்டு இயற்கையுடன் இயற்கையாகவே வாழவும் விரும்பினான் தவிர முன்னோர்களின் ஆசீர்வாதம் கலைகளுக்கு இருப்பதாகவும் நம்பினான். இதனால் பல்வேறுபட்ட வழிபாடுகளையும் செய்தான். இதனால் தொழில்முறைகள் அறுபத்து நான்காக உருவானது தவிர ஒவ்வொரு கலைக்குள்ளும் அறுபத்து நான்கு உட்பிரிவுகளும் கூட உருவானது. எவ்வாறாயினும் சமய மறுமலர்ச்சியின் பின் இவற்றில் ஏற்றத் தாழ்வுகளும் ஏற்பட்டது. அதாவது மனித நாகரிக ஆரம்ப காலத்தில் ஒருவர் இறந்து விட்டால் அவரது உடை அணிகலன்களை ஆதிச்சமயக் குரவர்கள் அணிந்து மேலும் இறந்தவர் விரும்பியுண்ணும் உணவுகளைப் படையலிட்டும், இறந்த ஆன்மாவைக் கூடுவிட்டு கூடுபாயச் செய்து கலை இரகசியங்களையும் , வரங்களையும் பெற்று வாழ்ந்தமை சமய மறுமலர்ச்சியின் பின்னர் முடிவுக்கு வர சமயக்குருமார் தானமாக புதிய உடைகளையும், சமைக்காத மரக்கறி தானியங்களைப் பெற்று விழுமியங்களையும் காத்தனர்.

**நவீன கலைகள்**

கல்வியின் தோற்ற பரிணாமத்துடன் கலைகள் பொதுவானதாகப் பரவலடைந்ததுடன் நவீன ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளின் பலனாக விஞ்ஞானத் தொழில்நுட்பக் கலைகள் மனித சமூகத்தை நாகரிகமடைய வைத்தன முக்கியமானது தகவல் தொழில்நுட்பம்.

**ஏனையவை**

கலைகள் என்பது நுட்ப ஆற்றல்கள் மட்டுமல்லாது இரசனையும், வெளிப்பாடுகளும் கூட கலைகளே தவிர பொழுதுபோக்கு நிகழ்வுகளும் கலைகளாகும்.

**இராமஜெயபாலன்**

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி மற்றும் உளவியல் சேவைக்கு ஆள் தேவை



ஆர்.கே.மேனன்
ஆசிரியர் யாழ்/செல்.சாள்ஸ் ம.வி

> பொதுவாக சிந்தித்து எமது வாழ்வியலுக்கு வரம் சேர்க்க சேவை செய்யக்கூடாது. சமூகத்தின் தேவை உணர்ந்து சேவை செய்ய வேண்டும். இதுவே உண்மைச் சேவை. இதனை உணர்ந்து ஒரு சில நிறுவனங்கள் தமது சேவைகளை திசைமாற்றி உள்ளனர்.

யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தில் சமூக சேவைக்கான நிறுவனங்களும், தனி நபர்களும் கணிசமான அளவு பல தொண்டு நிறுவனங்களை செயற்படுத்தி வருகின்றனர். "சுயம்" என்பதற்கு அப்பால் சிந்திக்கும் அத்தனை நெஞ்சங்களும் பாராட்டுவதற்கு உரியவர்கள். மதிக்கப்பட வேண்டியவர்கள். ஒரு காலகட்டத்தில் அதாவது போர் முடிவிற்கு வந்த காலங்களில் சமூக சேவைகளுக்கான தேவைகள் உணவு, உறைவிடம், பாதுகாப்பு என்கின்ற துருவங்களில் இருந்து. அவை சேவையாளர்களின் உதவி கொண்டு ஓரளவிற்கேனும் நிறைவேற்றப்பட்டது; நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

தற்போது சமூக சேவைகளுக்கான தேவைகள் வேறு துருவத்தில் திசைமாறி இருப்பதை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எமது தமிழ் சமூகத்தின் எதிர்கால சந்ததிகள் பலர் பல கோணங்களில் வாழ்கின்றார்கள். சிறுவர் இல்லங்களிலும், அகதிமுகாம்களிலும், வன்முறைக் கலாசாரத்துள்ளும் இவர்கள் இருப்பதை அனைவரும் அறிந்துள்ளோம். தற்போது ஆபத்தான கட்டமொன்று எம்மை நெருங்கி வருகின்றது. வட மாகாண மாணவர்கள் கல்வி மதிப்பீட்டில் இறுதி நிலையில் உள்ளார்கள் என்பது ஒரு புறமிருக்க மேலும் பெரிய பின்னடைவிற்கு எமது எதிர்கால சந்ததி செல்லப்போகின்றது என்பது தெளிவாகப் புரிகிறது. எமது நாடு உடலியல் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் போல உளவியல் செயற்பாடுகளிற்கு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை. வேற்று நாடுகளில் உளச்சுகாதாரத்திற்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் எமது நாட்டில் உளசெயற்பாடுகளிற்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகக்குறைவு. கல்விப் பெறுபேற்றுப் பின்னடைவிற்குக் காரணம் கல்வி நடைமுறையில் உள்ள குறைபாடுகள் எனச் சுட்டிக்காட்டி பல நடைமுறை மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். எனும் முயற்சியில் நாம் சற்றேனும் ஈடுபடவில்லை என்பது கசப்பான உண்மை.

வன்முறைத்திசை முகத்தில் மாணவ சமூகத்தின் மனங்கள் ஊசலாடிக்கொண்டு இருக்கின்றது. கல்வி நிலை முன்னேற்ற எல்லை மறக்கப்பட்ட சமூகம் உருவாகிக் கொண்டு இருக்கின்றது. தனியார் நிறுவனங்கள் பல வந்துள்ளமையால் விற்பனை முகவர்கள் என்கின்ற பெயரில் போலி கௌரவங்களுடன் இளம் சந்ததியின் கல்வி இடைநடுவில் தடைப்படுகின்றது. கற்றல் பருவம் தொல்லை என்கின்ற உணர்வு ஊசலாடிக் கொண்டு இருக்கின்றது. உண்மையான கௌரவத்தை நாடும் பிள்ளைகளின் மனப்பாங்கும் வன்முறை சுகமாடிக் கொண்டாட்டங்களால் மாற்றப்படுகின்றது. சினிமா உட்பட தகவல் பரிமாற்ற சாதனங்கள் குறிப்பாக "இன்ரநெற்" போன்றவற்றால் சமநிலை ஆளுமை அற்ற பருவத்தில் உணர்வுகள் தூண்டப்படுகின்றன. இதனால் நடத்தைப் பிறழ்வுகள் ஏற்படுகின்றன; ஒருமுறை ஏற்பட்ட நடத்தைப் பிறழ்வு விபத்தால் மீளமுடியாத தன்மை ஏற்படுகின்றது. கையடக்கத் தொலைபேசி சாதனங்களால் சந்தர்ப்ப அதிகரிப்பு திசை மாற்றத்திற்கு வித்திடுகின்றது. முன்பு போராட்டம் என்கின்ற பெயரில் கல்வி என்கின்ற ஒருமுகப்பட்ட சிந்தனை இருந்தது. தற்போது சிந்தனைப் பரிமாற்றம் பலமுகப்பட்டு விட்டது.

இந்து மதத்தில் பிரமச்சாரியம் ஞானத்தை தேடும் பருவம் என முன்மொழிந்தார்களே, ஏன்?.. உணர்வுகள் ஊசலாடும் பருவத்தில் ஞானம் தேவை என்பதற்காகவே இந்தப் பருவத்தில் பல்துறை ஈடுபாட்டை விருத்தி செய்ய வேண்டும் என்றார்கள் ஏன்?.... இசை, நடனம், நாடகம், போன்ற கலைகளை ஈடுபாடு பல திசை முகங்களை நிராகரிக்கும். மெய்வல்லுனர் போன்ற விளையாட்டு நிகழ்ச்சிகள் சிந்தனை மாற்றத்தை உண்டுபண்ணும், மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதற்காகவே. இவையெல்லாம் எமது மாணவ சமூகத்தின் மத்தியில் நடைமுறைப்படுத்தப்படும் விதிதானும் போதுமா?.. இது பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டி உள்ளது.

ஆகவே இன்றைய சமூகத்திற்கு அத்தியாவசிய தேவை என கருதுவது கல்விச் சேவையும், உளவியல் சேவையும் ஆகும். "இது அரசினால், பிரத்தியேக கல்வி நிறுவனங்களால் முன்னெடுக்கப்படுகின்றது என்று நாம் அசண்டையீனமாக இருந்துவிட முடியாது. கடமையின் நிமித்தம் பாடசாலைச் செயற்பாடு இடம்பெறுகின்றது. காசிற்காக பிரத்தியேக வகுப்புக்கள் இடம்பெறுகின்றது. இதனால் தான் விழைவுகள் அற்றுப் போகின்றது. மாணவர்களின் எதிர்காலத்துக்காக எமது சந்ததியின் சாதனைக்காக உண்மையான உணர்வுடன் உழைக்க முன்வர வேண்டும். பொதுவாக சிந்தித்து எமது வாழ்வியலுக்கு வரம் சேர்க்க சேவை செய்யக்கூடாது. சமூகத்தின் தேவை உணர்ந்து சேவை செய்ய வேண்டும். இதுவே உண்மைச் சேவை இதனை உணர்ந்து ஒரு சில நிறுவனங்கள் தமது சேவைகளை திசைமாற்றி உள்ளனர். வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவலக அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அவர்களால் முன்னெடுத்து வரும் "ஆறுதல்" நிறுவனம் பல கல்விமான்களையும் உளவியலாளர்களையும் ஒன்று திரட்டி பலசெயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இதில் முன்பள்ளி ஆசிரிய பயிற்சி, பாடசாலை ரீதியான விசேட செயற்திட்டம் சிறுவரில்ல கல்வி மேம்பாடு தொடர்பான பலசெயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது போற்றுதற்குரிய விடயமாகும். பாடசாலைகள் தோறும் பெயரளவில் இருக்கும் ஆலோசனை வழிகாட்டல் பகுதி மேலும் வலுவூட்டப்பட வேண்டும்.

மனிதவள உற்பத்தியில் விளைவுகள் வெளிப்படையாக தெரியாதவை. அதேவேளை எதிர்பார்க்கும் விளைவு மட்டத்தையும் உடனடியாக அடைய முடியாது. இதனால் சேவையாளர்கள் ஒதுங்குவதற்கும் சந்தர்ப்பமுண்டு. ஆகவே இன்றைய தேவையை உணர்ந்து, எமது வடலிகளை வளமுள்ள பனைகளாக்க வேண்டியது எமது கட்டாய தேவைகளில் ஒன்று. இந்தத் தருணத்தில் நாம் துயில் கொண்டால் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

## புத்தகசாலை

### நூல் : வேதாந்த மெய்யியல்



வேதாந்த மெய்யியல்

நூலின் அணிந்துரையில் கொழும்பு இராமகிருஷ்ண மடத்தலைவர் சுவாமி ஆத்மகனானந்தர் ''வேதாந்த தத்துவங்கள் காலங்கடந்தவை, உலகப் பொதுத் தன்மை கொண்டவை, உலகின் அனைத்துத் தத்துவங்களையும் தன்னகத்தே அகப்படுத்தும் வல்லமை கொண்டவை'' என்று கூறியுள்ளார். "அவரது 34 வருட கற்பித்தல் அனுபவமுத்திரையை இதில் காணலாம்.'' பதினொரு அத்தியாயங்களில் இந்திய மெய்யியலுக்கு ஓர் அறிமுகம், வேதாந்த அறிமுகம், சங்கரர் காட்டும் பிரமம், ஆத்மா, உலகு, மாயை என்ற ஆறு விடயங்கள் விவரிக்கப்படுகின்றன.

ஏழாம் அத்தியாயம் அவர் கருத்தை மறுப்போர் கருத்துகளை விரிக்கிறது. அவர் கூறும் அத்வைதம் என்ன என்ற விளக்கம் 14 பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மதவாதியும் தான் நின்று வாதாடும் தளத்தை விரித்த பின்னரே தம் வாதத்தைக் கட்டியெழுப்புவர். அதனால் அறிவாராய்ச்சி இயலுக்குத் தனி அத்தியாயம் வகுத்துள்ளார் ஆசிரியர். ''மணிமேகலை பிற் பகுதியில் வந்துள்ள பத்து பிரமாணங்கள், பிற இந்திய மதங்கள் ஒப்புக்கொள்ளும் சில பிரமாணங்கள் என்பவற்றைத் தனியே வகுத்துக் காட்டுகிறார். பிரமசூத்திரம் ''இனி பிரமத்தை பற்றிய விசாரணை'' எனத் தொடங்குகிறது. இனி என்ற சொல் சம்ஸ்காரங்களால் சித்தசுத்தி அடைந்து, தர்மத்தை இடையறாது கடைப்பிடிப்பவனே இந்த நூலைக் கற்கத்தகுதியவன் என்கின்றது.

ஆசிரியர் ஒழுக்கவியல் என ஒரு தனி அத்தியாயம் வகுத்து அதை வலியுறுத்தவே அவரது எடுத்துக்காட்டு மக்ஸ்முல்லர். ''வேதாந்தம் ஒழுக்கவியலில் கரிசனைப்படவில்லை என்பது பொருந்தாது. அதன் ஆரம்பம், மத்தி, இறுதி எனப் பல பகுதிகளிலும் கட்டியிருத்தலை காணலாம்.

இறுதியாக இந்திய மெய்யியல் அனைத்தும் மோட்சம் [விடுதலை] பற்றிய கருத்தை வலியுறுத்துபவை. [சார்வாகன் உட்பட]. அதனால் வேதாந்தம், நான், எனது, அற்று, பிரம நினைப்பில் திளைத்து. வாழ்ந்து, ஜீவன் முத்தி, விதேகமுத்தி போன்ற சிறு வேறுபாடுடைய முத்தி நிலையை எய்துவது பற்றி விளக்குகிறது என்பதுடன் நூலை முடிக்கிறார். விரிவான உசாத்துணை நூற்பட்டியல் இறுதியில் தரப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் நன்கு பரிச்சயம் இல்லாதவர்களுக்காக, தமிழ்ப்பட்டியலும் உள்ளது.

இலங்கை தனியே சைவசித்தாந்தம் மட்டுமே செழித்த நாடு என்று பரம்பரை வாய்பாடு பாடாமல், இங்கும் ஒரு வேதாந்த பரம்பரை இருந்தது என்பதை ஏற்று அதன் தன்மைகளை அறிவது இந்தக் காலத்தில் விரும்பத்தக்கது.

ஆ.சபாரத்தினம், நாரந்தனை.

# எழுத்திலும் வாழ்விலும் ஒன்றாக திகழ்ந்தவர் டானியல் தேவமதுரம்



தேவமதுரம் பெயரில் இனிமை, பேச்சிலே இனிமை, எழுத்திலே இனிமை, எத்தகைய அற்புத மனிதர். பாவாணர், கலைஞானச் சுடர் டானியல் தேவமதுரம் எழுத்திலும் வாழ்விலும் ஒன்றாக திகழ்ந்தவர்.

நினைத்துப் பார்க்கின்றேன். 1980 களில் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் பல வருடங்கள் நாங்கள் ஒன்றாக வேலை செய்தோம். மட்டு மாவட்டத்தில் உள்ள 225 பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்தம் சம்பளம் வழங்கும் கிளையில் 10 பேர்களில் ஒருவராக அவர் பணியாற்றினார். குறித்த மாதத்தில் 15 ஆம் திகதிக்குள் சம்பளக் காசோலைகளை எழுதுவதற்கான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எல்லோருக்கும் முன்னதாக அவர் அத்தகைய ஆவணங்களைச் சமர்ப்பிப்பார். வேலையில் சுத்தம் அன்றிலிருந்து அவர் காலமாகும் வரை சுமார் 30 ஆண்டுகள் எங்கள் நட்புத் தொடர்ந்திருந்தது. இத்தனை வருடங்களும் இடைவிடாது எங்கள் கடிதத் தொடர்பு நீடித்தது. இலக்கியமான கடிதங்களில் அவர் எழுதுவார். என்னைக் 'குருஜி' என்று அவர் தனது கடிதங்களில் விளிப்பார். நண்பரே என்று விளிப்பேன். அற்புதமான இதயப் பரிமாறல்கள் இந்தக் கடிதங்களில் இடம்பெறும்.

## நீத்தார் நயப்புரை

கவிதைகளை அனாயாசமாக இவர் எழுதுவார். நவில் தொறும் நூல் நயம் போல் அந்தக் கவிதைகள் இனிக்கும். அவற்றைப் பல முறை நான் படித்து மகிழ்வேன். இவ்வளவு அற்புதமான மொழிநடையில் அவரது இலக்கிய உள்ளம் கவிதைகளைப் படைக்கும். அவர் பண்டிதர் இல்லை. வித்துவான் இல்லை. ஆனால் அவர்களையும் விஞ்சும்படி அவர் கவிதைகளையும் கடிதங்களையும் எழுதுவார்.

அவர் தான் வாழ்ந்த பிரதேசத்தில் சில ஆலயங்கள் மீது பக்தி பிரபந்தங்களை எழுதியுள்ளார். அவை நூலாக வெளிவந்ததும் பிரதிகளை எனக்கு அனுப்பி வைப்பார். அவற்றை நான் படித்து மகிழ்வேன்.

நல்லூர் பிரதேச கலாசார பேரவையில் உபசெயலாளராக இருந்து தனது பங்களிப்பைச் செய்துள்ளார். பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். அவற்றையெல்லாம் கடிதங்கள் மூலம் எனக்குத் தெரிவிப்பார். அவரை நேரில் பார்க்காமல் போனமை என மனம் தவித்துக் கொண்டிருந்த வேளையில் அவரே என்னைத் தேடி வந்து எமது அலுவலகத்தில் தங்கினார். ஸ்ரீராம கிருஷ்ண மிஷனுக்குச் சென்று சுவாமி அஜராத்மானந்தாவைச் சந்தித்தார். நான் சில புகைப்படங்களை எடுத்துக்கொண்டேன். இறுதியாக அவர் இருதய நோயால் பாதிக்கப்பட்ட செய்தி எனக்குப் பேரிடியாகக் கிடைத்தது. துடித்துப் போனேன். என்ன செய்வேன். இறைவனைப் பிரார்த்திப்பதைத் தவிர வேறொன்றும் என்னால் செய்ய முடியவில்லை.

இறை நியதியின்படி அவர் இறைவனடி சேர்ந்தார். ஆனாலும் என் இதயத்தில் அவர் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார். என்னுடன் பேசுவார். கவிதை பாடுவார். கலகல வெனச் சிரிப்பார். அவருக்கு மரணமில்லை.

இரா.நாகலிங்கம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org